பொருளடக்கம்

1. முன்னுரை ....01
2. பொது காப்புறுதி நிபந்தனைகளும் உரிமைகளும்
 2.1 வதிவிடம், பிரயாணம், தொழில் ....04
 2.2 வயதின் நிரூபனம் ....04
 2.3 சட்டமும் விளக்கமும் ....04
 2.4 மாதாந்தக் கொடுப்பனவுச்செலுத்துகை / சலுகைக்காலம் .... 04-05
 2.5 முதலீட்டுக் கணக்கு ....05
 2.6 விளக்கமளிக்கப்பட்ட முதிர்ச்சிக்கால நன்மைகள்) ....05
 2.7 கைதுறப்புப் பெறுமதி ....06
 2.8 மாதாந்தக் கட்டணம் செலுத்தப்படாமை ....06
 2.9 ஒப்படைப்புப் பெறுமதி காப்புறுதிப்பத்திரங்களும் அனுகூலங்களை இழக்காத நிலையும் (Paid up) .... 06-07
 2.10 காலாவதியான காப்புறுதிப்பத்திரத்தின் மீளாய்வு/புனரமைப்பு ....07
 2.11 காப்புறுதிப்பத்திரத்தில் மாற்றங்கள் ....07
 2.12 பங்கிலாபங்கள் ....07
 2.13 லோயல்டி அனுகூலம் ....08
 2.14 காப்புறுதிப்பத்திரத்தின் மீதான கடன்கள் ....08
 2.15 உரிமை மாற்றம ....08
 2.16 வாரிசாக நியமனம் ....08
 2.17 உரிமைகோரல்கள் கையாளல் செயன்முறை ....09
 2.18 தற்கொலை ....10
 2.19 பொறுப்புக்களில் இருந்து பூரண விடுவிப்பு ....10
 2.20 மாதாந்தக் கட்டணங்கள் இழப்பு ....11
 2.21 காணாமற் போனவர்கள் ....11
 2.22 இரத்துச் செய்வதற்கான உரிமை ....11
 2.23 செல்லுபடித்தன்மை ....11
 2.24 வரிவிதிப்பு ....11
 2.25 புகார் கையாளுதல் .... 11-12
 2.26 முதன்மை நன்மையின் கீழ் உள்ள வரம்புகள் ....13

3. மேலதிக ஆயுள்காப்புறுதி (குறைநிரப்பு) நன்மைகளுக்கான அட்டவணைகள்
 3.1 விபத்து மரண நன்மைகள் (ADB) .... 14-15
 3.2 விபத்து அல்லது நோய் காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் (TPS) .... 16-19
 3.3 விபத்து காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் (TPA) .... 20-22
 3.4 விஸ்தரிக்கப்பட்ட ஓரளவு நிரந்தரமான இயலாமை அனுகூலம் (EPD) .... 23-25
 3.5 மரணத்தின் மீதான மேலதிக அனுகூலம் (LTB) ....26
 3.6 வாழ்க்கைத்துணை காப்புறுதி அனுகூலங்கள் (SPB) ....27
 3.7 யூனியன் சுவமக அனுகூலங்கள் (SMB) .... 28-49
 3.8 வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் (HCB/HCC) .... 50-54
 3.9 மரணசெலவு அனுகூலம் (FEB) .... 55-56
 3.10 விபத்து அல்லது நோய் காரணமான முழுமையான, நிரந்தரமான அங்கவீனமுற்றவர்களுக்கான (WP) கட்டண அனுகூலம் விலக்கப்படல் .... 57-60
 3.11 குடும்ப வருமான அனுகூலங்கள் (FIB) ....61
 3.12 சர்வாம்ச சத்திர சிகிச்சை அனுகூலம் (CSB) .... 62-71
 3.13 சிறுவர் சுகாதார அனுகூலம் (CHB) .... 72-83
 3.14 யூனியன்ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் (USHP) .... 84-101
 3.15 யூனியன் ஹெல்த் 360 (UH360) .... 102-127

4. அட்டவணை இல. 4 - வரைவிலக்கணங்கள ....128
4.1 முக்கிய வரையறைகள் .... 128-131
4.2 முக்கிய வரையறைகள் மேலதிக ஆயுள்காப்புறுதி (குறைநிரப்பு)நன்மைகளுக்கான .... 131-134

Specimen

Specimen

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட இலக்கம் N(PBS)137 பெற்றுக் கொள்ளப்பட்டதும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டதும் தற்சமயம் PQ 12 என்ற பதிவிலக்கத்தையுடையதும் கொழும்பு 3, சென். மைக்கல்ஸ் வீதி, 20 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொண்டதுமான, யூனியன் அ்'யூரன்ஸ் பிஎல்சியுடன் (இனிவரும் பகுதிகளில் கம்பனி என குறிக்கப்படும்) இந்தக் காப்புறுதி பத்திரத்தில் அடங்கிய நிபந்தனைகளின் பிரகாரமான காப்புறுதிக்கு பிரேரணையின் (அல்லது ஏதாவது உப பிரேரணைகள் அல்லது பத்திரங்களின் அடிப்படையில்) காப்புறுதிக்கென காப்புறுதி செய்தவர்களால் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காப்புறுதி செய்தவரால்/செய்தவர்களால் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காப்புறுதி பத்திரத்தின் முதலாவது அட்டவணைக்கமைய தவணைக்கட்டணங்கள் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தால், சம்பவம் ஏதாவது நிகழும்பட்சத்தில் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட அனுகூலம் வழங்கப்பட வேண்டி வருமானால், அத்தகைய அனுகூலம் கம்பனியால் வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தம் முழுமையான நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே செய்து கொள்ளப்படுகிறது என்பது உணரப்பட வேண்டும். காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரால் பிரகடனப்படுத்தப்படாத அல்லது திரிவுபடுத்திக்கூறும் செயற்பாடுகள் இடம்பெற்றதாக கருதப்படுமிடத்து, காப்புறுதிப்பத்திரத்தை செல்லுபடியற்றது எனவும், பயனற்றது எனவும் கம்பனி பிரகடனம் செய்யும்.

இந்த காப்புறுதிப்பத்திரம் தொடர்பான ஒப்படைப்பு அல்லது நியமனம் பற்றிய எந்தவொரு அறிவித்தலும், ஆயுள் செயல்பட்டு பிரிவு யூனியன் அ்'யூரன்ஸ் பிஎல்சி, யூனியன் அ்'யூரன்ஸ் நிலையம், இல. 20, சென் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 3 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இதில் அடங்கியுள்ள அல்லது இதனோடு இணைக்கப்பட்ட அட்டவணைகள் பொதுக் காப்புறுதிப்பத்திர நிபந்தனைகள் மற்றும் உரிமைகள், விசேட நிபந்தனைகள், ஏற்பாடுகள், குறிப்புகள் என்பனவும் இந்த ஒப்பந்தத்தின் பகுதியாகவும், உள்ளடக்கப்பட்டதாகவும் கருதப்படும்.

பிரதம செயல்பாட்டு அதிகாரி

தலைமை நிர்வாக அதிகாரி/முதன்மை அதிகாரி

Specimen

**முக்கிய குறிப்பு**

இது ஒரு சட்டப்பூர்வமாக பிணிப்புடைய ஆவணம் ஆகும். தயவுசெய்து இவ்வாவணத்தை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்கவும். மேலும், இந்த காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் அதிகபட்ச அனுகூலங்களைப் பெற வேண்டியிருக்கும் போது கட்டுப்பணம் செலுத்தப்படுவதை உறுதிசெய்யவும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவால் (IRCSL) உரிமம் பெற்றுள்ளது.

Union Assurance PLC (PQ12) No. 20, St. Michael's Road, Colombo 03, Sri Lanka
Customer Hotline: 1330 | General 0112 990 990
Fax (+94)112 438 165 | Email: info@unionassurance.com | Website: www.unionassurance.com
Facebook: www.facebook.com/unionassurance | Lifeportal: portal.unionassurance.com

**அட்டவணை இல.2**

**2. பொது காப்புறுதி நிபந்தனைகளும் உரிமைகளும்**

**2.1 வதிவிடம், பிரயாணம், தொழில்**

வேறு எவ்வகையிலும் குறித்துரைக்கப்படாதவிடத்து, பிரயாணம், வதிவிடம், தொழில் சம்பந்தமான சகல கட்டுப்பாடுகளுக்கும் இந்த காப்புறுதிப்பத்திரம் அப்பாற்பட்டதாகும்.

**2.2 வயதின் நிரூபனம்**

இந்த காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் எந்தவொரு கொடுப்பனவுகளையும் செய்வதற்க்கு முன்னர் ஆயுள் காப்புறுதி /வாழ்க்கைத் துணை செய்தவரின் வயதை உறுதி செய்யும் படி கோரும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது. காப்புறுதி செய்தவரின் வயது, கவனக்குறைவாக, தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தால், அதன் அடிப்படையில் மாத்திரம் காப்புறுதிப்பத்திரம் பெறுமதியற்றதாக கருதப்படமாட்டாது. ஆனால், மாதாந்தக் கட்டணம் மற்றும் காப்புறுதிப்பத்திரத்தின் கீழான அனுகூலங்கள் தொடர்பில் பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.

**2.3 சட்டமும் விளக்கமும்**

(i) இந்த காப்புறுதிப்பத்திரம் இலங்கையின் சட்ட விதிமுறைகளுக்கமைய அமைந்திருக்கும்.

(ii) ஆயுள் காப்புறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள நபரின் பிரத்தியேக பிரதிநிதிகளை உள்ளடக்கும் போது ஒருமைகள் பன்மைகளை குறிக்கும் வகையில் அமைந்திருக்கும். எதிர்மாறாகவும் பொருந்தும்.

(iii) ஆண்பாலை குறிக்கும் எந்தவொரு குறிப்புரையும் பெண்பாலுக்கும் பொருந்தும், எதிர்மாறாகவும் இது அமைந்திருக்கும்.

(iv) காப்புறுதி பத்திரத்தின் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட மேலதிக இணைப்பு (குறைநிரப்பு) அனுகூலங்கள், அத்தகைய மேலதிக அனுகூலங்களுக்கான அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கமைய காப்புறுதி பத்திரத்தின் கீழ் வழங்கப்படும்.

(v) காப்புறுதி பத்திரத்துக்கும் அதன் ஆங்கிலம், சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுமானால், சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட ஆவணம் இறுதியானதாக கருதப்படும்.

(vi) இந்த காப்புறுதித்திட்டத்தின் கீழான சகல தவணைக்கட்டணங்கள் மற்றும் அனுகூலங்கள் போன்றன இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

(vii) உங்கள் உரிமைகள் மற்றும் நீங்கள் சேகரித்த தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள, தயவுசெய்து எங்கள் தனியுரிமைக் கொள்கையைப் பார்வையிடவும் www. unionassurance. com/privacy.policy

**2.4 மாதாந்தக் கொடுப்பனவுச்செலுத்துகை / சலுகைக்காலம்**

இந்த காப்புறுதிபத்திரத்தின் மூலம் வழங்கப்படும் அனுகூலங்களை பெற்றுக் கொள்வதற்காக செலுத்தும் தவணைக்கட்டணங்களின் போது பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்,

(i) சகல கொடுப்பனவுகளும் குறிப்பிட்ட திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுவது அவசியம். தவணைக்கட்டணங்களை நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது அதனை பெற்றுக்கொள்ள நிறுவனத்தின் மூலம் அங்கீகாரமளிக்கப்பட்ட கிளை அலுவலகங்கள் அல்லது எனைய நிறுவனங்கள் அவற்றின் கிளை அலுவலகங்கள் ஆகியவற்றில் செலுத்தப்பட்டால் மட்டுமே அவை செலுத்தப்பட்டதாக கருதப்படும்.

Specimen

(ii) செலுத்தப்பட்ட கட்டுப்பணத்திற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே ஆதாரமாவது கம்பனியினால் அல்லது கம்பனியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு நிறுவனத்தினால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டதிற்காக வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட ரசீதாகும்.

(iii) முதலாவது தவணைக்கட்டணத்தின் பின்னர் செலுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு தவணைக் கட்டணக் கொடுப்பனவு சம்பந்தமாகவும் சம்பந்தப்பட்ட தவணைக் கட்டணத்தின் இறுதி திகதியிலிருந்து முப்பது (30) நாட்கள் வரை சலுகைக்காலம் வழங்கப்படும். எந்தவொரு தவணைக்கட்டணத்தையும் செலுத்தத் தவறினால், இந்த சலுகைக் காலத்தின் பின்னர் காப்புறுதிப் பத்திரத்தில் உள்ளடங்கியுள்ள சகல அனுகூலங்களும் முன்னறிவித்தலின்றி சுயமாக முடிவுக்கு வரும். இந்த சலுகைக்காலத்திலும் காப்புறுதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள சகல அனுகூலங்களும் செயலில் இருக்கும்.

**2.5 முதலீட்டுக் கணக்கு**

இக் காப்புறுதியின் கீழ் வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரங்கள் சம்பந்தமாக தனிநபர் முதலீட்டுக் கணக்கை நிறுவனம் கட்டாயமாகப் பேணி வரும்.

(i) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவில் விபரிக்கப்பட்ட முதன்மை அனுகூலங்களுக்கென செலுத்தப்பட்ட மாதாந்த கட்டணங்கள்ரூபவ் அவற்றுக்குரிய காப்புறுதிப்பத்திர நிபந்தனைகள் மற்றும் வருடம் என்பனவற்றின் அடிப்படையில்ரூபவ் கீழே தரப்பட்ட ஒதுக்கீட்டு விகிதத்தின் பிரகாரம் செலுத்தப்பட்ட உண்மையான திகதியில் முதலீட்டுக் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும்.

| | தவணை 10 | தவணை 11 மற்றும் அதற்கு மேல் |
|---|---|---|
| 1வது காப்புறுதிப்பத்திர வருடம் | 25% | 20% |
| 2வது காப்புறுதிப்பத்திர வருடம் | 50% | 45% |
| 3வது காப்புறுதிப்பத்திர வருடம் | 75% | 75% |
| 4வது காப்புறுதிப்பத்திர வருடமும் அதன் பின்னரும் | 98% | 98% |

(ii) ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்திலும் குறிப்பிட்ட அந்த வருடத்தில் நிதியுடன் சேர்க்கவென இடைக்கால பங்கிலாப விகிதத்தினை நிறுவனம் தீர்மானிக்கும். வருடத்தின் இறுதியில் அந்த வருடத்திற்கான உண்மையான பங்கிலாப விகிதம் நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படவிருக்கிறது. வருட ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்ட இடைக்கால விகிதத்தை குறிப்பட்ட வருடத்தின் ஆகக்குறைந்த பங்கிலாப விகிதமென நிறுவனம் உத்தரவாதமளிக்கும்.

(iii) முதலீட்டுக் கணக்கில் இருந்து கீழ்காணும் கட்டணங்கள் கழிக்கப்படவிருக்கின்றன:

(அ) முதல் அட்டவணையின் பகுதி II-இல் குறிப்பிடப்பட்டுள்ள முதன்மை நன்மையின் கீழ் வழங்கப்படும் வாழ்க்கை பாதுகாப்பிற்கான செலவுக்காக மாத ரிஸ்க் பிரீமியம் வசூலிக்கப்படும். இந்த ரிஸ்க் பிரீமியம், ஆபத்து உள்ள தொகைக்கு கணக்கிடப்படுகிறது, அதாவது முதன்மை நன்மை மற்றும் முதலீட்டு கணக்கிற்கிடையிலான வித்தியாசம் மற்றும் உறுதி செய்யப்பட்ட வாழ்க்கை நபரின் தற்போதைய பிறந்த நாளை அண்மித்த வயதின் அடிப்படையில் x 1.4 ஆண்டுகள் என கணக்கிடப்படும்.

(ஆ) நிறுவனம் வழங்கும் முதலீடு, நிர்வாகம், பெறுதல் மற்றும் பிற சேவைகளை கையாளுவதற்காக, முதலீட்டு கணக்கில் ஆண்டுக்கு 1% வீதம் மாதாந்திர நிதி மேலாண்மை கட்டணம் (FMC) விதிக்கப்படுகிறது.

வாழ்க்கை காப்பீட்டின் செலவுக் கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் மரண விகிதங்களைப் பார்க்க Annexure II-ஐப் பார்க்கவும்.

Specimen

**2.6 விளக்கமளிக்கப்பட்ட முதிர்ச்சிக்கால நன்மைகள்**

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் தெரிவிக்கப்பட்ட விளக்கமளிக்கப்பட்ட முதிர்ச்சிக்கால நன்மைகள் சம்பந்தப்பட்ட பங்குலாப விகிதங்களின் அடிப்படையிலான விளக்கமளிக்கப்பட்ட திரட்டிய நிதியாகும். லோயல்டி போனஸ் சேர்ந்த முதிர்வுப் பயனோடு இணைந்ததாகும் அடிப்படை நன்மைகளின் முடிவு தினத்திலன்று கிடைக்கும் முதிர்ச்சி நன்மைகள் பற்றிய முன்னறிவித்தலை வழங்கும் வகையில் இது அமைந்துள்ளது. மாதாந்தக் கட்டணக் கொடுப்பனவுகளின் திகதிகளில் பிரகடனம் செய்யப்பட்ட உண்மையான பங்குலாபங்களின் அடிப்படையில் நிறுவனத்தினால் வழங்கப்படும் உண்மையான முதிர்ச்சி பெறுமதி தங்கியிருக்கும்.

**2.7 கைதுறப்புப் பெறுமதி**

காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று (03) வருடகாலம் பூர்த்தியடைந்த பின்னரும் மூன்று வருடகால மாதாந்தக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னரும் காப்புறுதிப்பத்திரம் கைதுறப்பு பெறுமதியை பெற்றுக்கொள்ளும். காப்புறுதிப்பத்திரத்தின் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட எந்தவொரு மேலதிக நன்மைகளும், கைதுறப்புப் பெறுமதியைப் பெற்றுத்தரமாட்டது.

நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும் கைதுறப்புப் பெறுமதியிலிருந்து காப்புறுதிப்பத்திரம் சம்பந்தமாக நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய எத்தகைய கடன் தொகையும் கழிக்கப்பட்ட தொகை, காப்புறுதிப்பத்திரப் பெறுமதிகளை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களினால் நிறுவனத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதை அடுத்து பெற்றுக்கொள்ளப்படலாம். காப்புறுதிப்பத்திரம் கைதுறக்கப்பட்டதன் பின்னர், செலுத்தப்படும் மாதாந்தக் கட்டணங்கள் நிறுவனத்தின் எத்தகைய சட்டக்கட்டுப்பாட்டையும் உருவாக்க மாட்டாது.

நிகர கைதுறப்பு பெறுமதி = கைதுறப்பு செய்யும் தினத்தில் முதலீட்டு கணக்கு மதிப்பு - கைதுறப்பு கட்டணம் - கடன் நிலுவை (பொருந்தினால்)

கைதுறப்பு கட்டணம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது

கைதுறப்பு கட்டணம = கைதுறப்பு செய்யும் தினத்தில் முதலீட்டு கணக்கு மதிப்பு - கைதுறப்பு கட்டணம்%

கைதுறப்பு கட்டணங்களுக்கு இணைப்பு 1 ஐ பார்க்கவும்.

**2.8 மாதாந்தக் கட்டணம் செலுத்தப்படாமை**

சலுகைக்காலத்திற்குப் பின்னரும் மாதாந்தக்கட்டணம் செலுத்தபாட்டிருந்தால், கீழ்க்கணும் நிபந்தனைகள் பொருந்தும்.

(i) குறிப்பிட்ட ஒரு காப்புறுதிப்பத்திரம் கைதுறப்புப் பெறுமதியைப் பெற்றிராவிட்டால், அந்தப் பத்திரம் காலாவதியானதாக கருதப்படும். அத்தகைய காலாவதித் தினத்தின் பின்னர் எழும் எந்தவொரு கோரிக்கை சம்பந்தமாகவும் எத்தகைய அனுகூலங்களும் வழங்கப்படமாட்டாது.

(ii) மேலே 2.7 ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் காப்புறுதிப்பத்திரம் கைதுறப்புப் பெறுமதியை பெற்றிருந்தால், அந்த காப்புறுதிப் பத்திரம் ஒப்படைப்புப் பெறுமதி காப்புறுதிப்பத்திரமாக மாற்றப்பட்டு கீழே 2.9 ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளும் சிறப்புரிமைகளும் பொருந்தும்.

**2.9 ஒப்படைப்புப் பெறுமதி காப்புறுதிப்பத்திரங்களும் அனுகூலங்களை இழக்காத நிலையும் (Paid up)**

காப்புறுதிப்பத்திரத்திற்கு உரித்துடையவரின் நிருபணத்தை அடுத்து அவரால் விடுக்கப்பட்ட எழுத்துமூலமன விண்ணபத்தின் பேரில் அந்த காப்புறுதிப்பத்திரம் கைதுறப்புப் பெறுமதியை அடைந்த எந்தவொரு காலத்தின் பின்னரும் அதனை ஒப்படைப்பு பெறுமதி காப்புறுதிப்பத்திரமாக மாற்றும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது. விண்ணபத்தின் பேரில் அல்லது மேலே 2.8 (II) வில் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் மாற்றும் பொழுது கீழ்காணும் சிறப்புரிமைகளும் நிபந்தனைகளும் இயல்பாகவே பொருந்தும்.

specimen

(i) ஒப்படைப்புப் பெறுமதி பெறப்பட்ட பிறகு: கிரேஸ் காலத்தில் (period of grace), வழமையான பிரீமியங்கள் செலுத்தப்படவில்லை என்றால், முதலீட்டு கணக்கில் வருடாந்து லாபவீதங்கள் சேர்க்கப்படும் மற்றும் கட்டணங்கள் கழிக்கப்படும். முதிர்வில், முதலீட்டு கணக்கில் உள்ள தொகை செலுத்தப்படும்.

(ii) முன் மரணம் ஏற்பட்டால், முதலீட்டு கணக்கில் உள்ள தொகை செலுத்தப்படும். இருப்பினும், மரண தேதி முதல் தவறவிட்ட முதல் பிரீமியம் செலுத்த வேண்டிய தேதியில் இருந்து நூறு எண்பது (180) நாட்கள் காலத்திற்குள் இருந்தால், அடிப்படை காப்பீட்டு தொகை அல்லது முதலீட்டு கணக்கில் உள்ள தொகை எது அதிகமோ அதுவே செலுத்தப்படும், ஆனால் நிலுவையில் உள்ள பிரீமியம் தொகை கழிக்கப்படும்.

(iii) காப்பீட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் லாயல்டி போனஸ் மற்றும் அனைத்து கூடுதல் நன்மைகளும் தானாகவே முடிவடையும், மேலும் மாற்றம் செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு எழும் எந்தவொரு கோரிக்கைக்கும் நன்மைகள் வழங்கப்படமாட்டாது.

(iv) மாற்றம் செய்யப்பட்ட பிறகு எந்தவொரு பிரீமியம் செலுத்தப்பட்டாலும் அல்லது ஏற்கப்பட்டாலும், காப்பீட்டு திட்டம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்காவிட்டால், அதனால் எந்தவொரு புதிய பொறுப்பும் உருவாகாது.

**2.10 காலாவதியான காப்புறுதிப்பத்திரத்தின் மீளாய்வு/புனரமைப்புபுனரமைப்பு**

பிரீமியம் செலுத்தப்படாத காரணமாக காலாவதியான அல்லது சுயமாக ஒப்படைப்புப் பெறுமதிக் காப்புறு-தியாக ஆக மாற்றப்பட்டதோ ஆகிய காப்பீட்டு திட்டம், காப்பீட்டு பெறுநர் உயிருடன் இருக்கும் காலத்தில், முதன்மை நன்மைக்கான இறுதி பிரீமியம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன், கீழ்க்கண்ட விதிமுறைகளின் அடிப்படையில் மீண்டும் செயல்படுத்தப்படலாம்.்.மீளமைக்கப்படலாம்.

(1) தவறவிட்ட முதல் பிரீமியம் செலுத்த வேண்டிய தேதியில் இருந்து ஆறு மாதங்களுக்குள், நிலுவையில் உள்ள அனைத்து பிரீமியம் தொகையையும் செலுத்துவதன் மூலம்.

(2) தவறவிட்ட முதல் பிரீமியம் செலுத்த வேண்டிய தேதியில் இருந்து ஆறு மாதங்களை கடந்த பிறகு, மீளமைப்புக் கட்டணங்களுடன் அனைத்து நிலுவை பிரீமியங்களையும் செலுத்தி, காப்பீட்டு பெறுநரின் காப்பீட்டு தகுதியை உறுதி செய்யும் மருத்துவ சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டால், நிறுவனத்திற்கு எந்தச் செலவுமின்றி காப்பீடு மீளமைக்கப்படும்.

காப்புறுத்தி மீளாய்வு/ புதுப்பித்தல் அல்லது மேலதிக அனுகூலங்களில் மீளாய்வு/ புதுப்பித்தல் நிறுவனத்தின் விருப்பத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.

**2.11 காப்புறுதிப்பத்திரத்தில் மாற்றங்கள்**

காப்புறுதிப்பத்திரத்தில் மாற்றங்கள் எற்படுத்தப்பட வேண்டுமென்ற காப்புறுதிப்பத்திர உரிமையாளரின் கோரிக்கையை, அவசியம் எனக்கருதப்படும் நிபந்தனைகளினதும், வரையறைகளினதும் அடிப்படையில் நிறுவனம் அதன் சொந்த நிர்ணயத்தின் அடிப்படையில் ஆராயும்.

நிறுவனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரால் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்ட காப்புறுதிப்பத்திர புறக்குறிப்பு இல்லாமல், இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் சிறப்புரிமைகளும் நிபந்தனைகளும் மாற்றப்படவோ விட்டுக்கொடுக்கப்படவோமாட்டாது.

**2.12 பங்கிலாபங்கள்**

ஓவ்வொரு வருடமும் டிசம்பர் 31 ஆம் திகதி பங்கிலாபத்தொகை மூலதனக் கணக்கில் சேர்க்கப்படும். நிறுவனத்தின் காப்புறுதி நிபுணரினால் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் முதலீட்டு கணக்கு சேர்க்கக்கூடிய நிறுவனத்தின் ஆயுள்காப்புறுதி நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் பகிர்ந்தளிக்கக்கூடிய மூலதன வருமானத்தின் நூறு சதவிகிதம் (100%) பங்கிலாபமாகும்.

Specimen

**2.13 லோயல்டி அனுகூலம்**

காப்பீட்டு திட்டத்தின் முழு காலத்திற்கு தேவையான பிரீமியங்கள் ஒவ்வொன்றும் அதன் செலுத்த வேண்டிய தேதியில் இருந்து 180 நாட்களுக்குள் முழுமையாக செலுத்தப்பட்டால், நிறுவனத்தால் முதிர்வு நன்மையாகக் கிடைக்கும் தொகையின் 10% (அதாவது, இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் முதிர்வு தேதியில் உள்ள முதலீட்டு கணக்கின் மதிப்பு) லாயல்டி போனஸாகக் கணக்கில் சேர்க்கப்படும்.

**2.14 காப்புறுதிப்பத்திரத்தின் மீதான கடன்கள்**

ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும் நிலையில், காப்புறுதியின் கைதுறப்புப் பெறுமதியில் தொண்ணூறு சதவீதத்தை (90%) அதிகரிக்காத வகையில், நிறுவனத்தினால் காலாகாலத்தில் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதங்களுக்கான நியதி நிபந்தனைகளின் பிராகாரம் வழங்கப்படும். கடன் வழங்கப்படும் போது நிறுவனத்தினால் பேணப்படும் நியம கடன் உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த கடன்கள் அமைந்திருக்கும்.

காபப்பு றுதி அமுலிலுள்ள காலப்பகுதியில் கடன் தொகையை காப்புறுதிதாரர் மீளச் செலுத்த வேண்டும், அவ்வாறு செலுத்தத் தவறும் நிலையில், காப்புறுதி திட்டத்தின் முதிர்வு தொகையிலிருந்து நிலுவையிலுள்ள வட்டி மற்றும் கடன் முதல் தொகை போன்றன அறவிடப்படும். தவணைக்கட்டணங்கள் அல்லது.்.மற்றும் கடன் மீளச் செலுத்துகைகள் போன்றன தவறவிடப்பட்டிருந்ததன் காரணமாக நிலுவையிலுள்ள கடன் தொகை கைதுறப்புப் பெறுமதியை விட அதிகமாக காணப்பட்டால், காப்புறுதி முன்னறிவித்தல்கள் எதுவுமின்றி இரத்துச் செய்யப்படும் என்பதுடன், நிறுவனம் நிலுவையிலுள்ள கடன் மற்றும் வட்டி தொகையை காப்புறுதிதாரரிடமிருந்து அறவிடும்.

**2.15 உரிமை மாற்றம்**

உரிமை மாற்றம் தொடர்பான எழுத்துமூல அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டு பதிவு செய்யப்படாதவிடத்து இந்த காப்புறுதிப் பத்திரத்தின் உரிமை மாற்றம், நிறுவனத்தை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. உரிமை மாற்றம் சம்பந்தமான எழுத்துமூல அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டதும், அத்தகைய உரிமை மாற்றத்தை பதிவு செய்ய முன்னர், நிறுவனத்தின் மனநிறைவுக்கென பார்வையிடுவதற்கு சகல முன் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு கோரும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது. உரிமை மாற்றத்தை பதிவு செய்யுமிடத்து, அதன் செல்லுபடியாகும் தன்மை அல்லது சட்டப்பயன்பாடு சம்பந்தமாக எத்தகைய பொறுப்பையும் நிறுவனம் ஏற்றுக் கொள்ளாத அதேசமயத்தில், அதன் உள்ளடக்கம் பற்றி எந்தவித கருத்தையும் வெளியிடமாட்டாது.

**2.16 வாரிசாக நியமனம்**

(i) காப்புறுதிப்பத்திரம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் நிறுவனத்திற்கு திருப்தியளிக்கும் வகையில் எழுத்துமூலமான அறிவித்தலை விடுப்பதன் மூலம் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் வாரிசை/வாரிசுகளை நியமிக்க அல்லது உரியமுறையில் நியமிக்கப்பட்ட வாரிசை/வாரிசுகளை காப்புறுதியாளர் மாற்ற முடியும்.

(ii) எந்தவொரு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் உட்பட்ட, வகையில் காப்புறுதி செய்தவரிடமிருந்து பெற்ற எழுத்து மூலமான கோரிக்கையை நிறுவனத்தினால் பதிவு செய்யப்பட்டால் மாத்திரமே வாரிசு மாற்றம் செல்லுபடியாகும்.

(iii) வாரிசு ஒருவர் மாற்றப்பட்டால் எழுத்துமூல அறிவித்தலின் திகதியில் இருந்தே அந்த மாற்றம் நிகழ்ந்ததாக கருதப்படும். வாரிசாக நியமிக்கப்பட்டவர் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் தொகைகளை நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டதும், இந்தப் பத்திரத்தின் பிரகாரமான பொறுப்புக்களை நிறுவனம் செல்லுபடியான முறையில் பூர்த்தி செய்ததாக கருதப்படும். பணம் பெற்றமை சம்பந்தமாக வாரிசாக நியமிக்கப்பட்டவரின் பற்றுச்சீட்டு, கொடுப்பனவு இடம்பெற்றதற்கான இறுதி நிரூபணமாகும்.

(iv) காப்புறுதி செய்தவர் இறக்கும் சமயத்தில் வாரிசு எவரும் இல்லாவிட்டால், வழங்கப்பட வேண்டிய தொகை காப்புறுதி செய்தவருக்கு அல்லது அவரது மரணச்சொத்துக்கு வழங்கப்படும்.

(v) இந்த காப்புறுதியின் எந்த ஒரு உரிமை மாற்றமும் ஒரு நியமனத்தின் தற்போதைய பின்னுரித்தாளரின்

Specimen

நியமனத்தை ரத்து செய்யும் விளைவைக் கொண்டிருக்கும். மேற்கண்ட பாலிசியை மறு ஒதுக்கீடு செய்த பிறகு, காப்புறுதிதார் நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பு கொடுக்க வேண்டும், புதிய நியமனத்தை நியமிக்க வேண்டும் அல்லது முந்தைய நியமனத்தை மீண்டும் நியமிக்க வேண்டும்.

(vi) காப்புறுதி செய்தவர் இறப்பதன் காரணமாக ஏற்படும் நன்மைகளின் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே வாரிசின் நியமனம் கருத்திற்கொள்ளப்படும்.

### 2.17 உரிமைகோரல்கள் கையாளல் செயன்முறை

உங்களின் உரிமைகோரல் தொடர்பான உடன உதவி மற்றும் வேறேதும் கோரிக்கைகளுக்கு, பின்வரும் நாளிகைகளினூடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

- அழைப்பு நிலைய பொது இலக்கம்: 0112 990 990
- ஹொட்லைன்: 1330 (இயங்கும் நேரம்: 24X7)
- நிறுவன மின்னஞ்சல்: info@unionassurance.com

உரிமைகோரல் செயன்முறையின் ஒரு அங்கமாக, உங்கள் உரிமைகோரலின் மதிப்பீட்டிற்காக பின்வரும் நியம ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிப்பதை உறுதிசெய்யவும். உரிமைகோரல் வகையின் அடிப்படையில் தேவையான நியம ஆவணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு உரிமைகோரலும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன், உரிமை கோரலுடன் தொடர்புடைய இதர அல்லது மேலதிக ஆவணங்களை உரிமைகோருபவரிடமிருந்து கம்பனியால்பிஎல்சியின் உரிமைகோரல் பிரிவு கோரும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். மேலும், கோரப்பட்ட அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் உரிய நேரத்தில் சமர்ப்பிப்பது உரிமைகோரல் மதிப்பீட்டு செயல்முறைக்கு முக்கியமானது என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்:

- மருத்துவசார் உரிமைகோரல்கள்
  - உரிமைகோரல் படிவம்
  - நோய் இனங்காணல் ஆவணம்
  - அனுகூலங்களை பெற்றுக் கொள்வதற்கான பற்றுச்சீட்டுகள் மற்றும் பணக் கொடுப்பனவு அசல் ரசீதுகள்
  - சம்பந்தப்பட்ட மருத்துவ ஆய்வு அறிக்கைகள்

- உயிரிழப்புசார் உரிமைகோரல்கள்
  - உரிமைகோரல் படிவம்
  - மரணச் சான்றிதழ்
  - காப்புறுதி ஆவணம் / காப்புறுதி சான்றிதழ்
  - பின்னுருத்தாளி / களின் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ்
  - பின்னுருத்தாளி வாழ்க்கைத் துணை எனில் திருமண சான்றிதழ்
  - மரண விசாரணை அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை (அவசியமாயின்)

- பாரதூரமான நோய் நிலைசார் உரிமைகோரல்கள்
  - உரிமைகோரல் படிவம்
  - தனியார் மருத்துவ அறிக்கை (PMAR)

- அங்கவீனசார் உரிமைகோரல்கள்
  - உரிமைகோரல் படிவம்
  - தனியார் மருத்துவ அறிக்கை (PMAR)

குறிப்பிட்ட காப்புறுதி நிபந்தனைகளுக்கு, காப்புறுதி ஆவணத்தின் பொருத்தமான நிபந்தனைகளை பார்க்கவும். உரிமைகோரலின் அளவு, வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய ஆவணங்கள் மற்றும் உரிமைகோருபவரின் அடையாளம் உறுதிப்படுத்தல் போன்றன அடங்கலாக சகல ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டதிலிருந்து 14 நாட்களினுள் உரிமைகோரல்கள் செலுத்தப்படும்.

Specimen

**2.18 தற்கொலை**

காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி அல்லது பத்திரத்தின் மீளாய்வு/புனரமைப்பு திகதி, இவற்றில் எது பிந்தியதோ அந்தத் திகதியில் இருந்து பன்னிரண்டு (12) மாதங்களுக்குள்ளாக காப்புறுதி செய்தவர் சித்த சுவாதீனத்தோடு அல்லது சித்த சுவாதீனமற்ற நிலையில் தற்கொலை செய்து கொண்டால், நிதி தொடர்பான விடயங்களில் நல்லெண்ண அடிப்படையில் மூன்றாம் தரப்பினரால் பெறுமதி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நலன்கள் மற்றும் மரணம் நிகழ்ந்த திகதிக்கு முன்னராக அத்தகைய நலன்கள் நிறுவனத்தினால் எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான பதில் வழங்கப்பட்டிருந்தாலேயொழிய ஏனைய சூழ்நிலையில் காப்புறுதி பத்திரம் செல்லுபடியற்றதாகும்.

**2.19 பொறுப்புக்களில் இருந்து பூரண விடுவிப்பு**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் எத்தகைய கொடுப்பனவுகளையும் செய்வதற்கு நிறுவனம் பொறுப்புடையதாகாது.

(i) எந்தவொரு யுத்தம் மற்றும் யுத்த நிலைமையோடு ஒப்பிடக்கூடிய தாக்குதல், பயங்கரவாத நடவடிக்கை, ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரியின் நடவடிக்கை, கிளர்ச்சி, யுத்த பிரகடனம் செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் நிகழும் எந்தவொரு யுத்தம், உள்நாட்டு போர், கலகம், அதிகாரிகளுக்கு எதிர்ப்பு, புரட்சி, அரசாங்க - உள்ளூராட்சி மற்றும் அதிகார சபையின் உத்தரவின் பிரகாரமான பறிமுதல் அல்லது தேசியமயப்படுத்தல், வன்செயல்களின் அடிப்படையில் உண்மையான அரசாங்கம் ஒன்றை பதவி நீக்கம் செய்யவென எந்தவொரு அமைப்பின் பெயரால் அல்லது தொடர்பால் நபர் ஒருவர் மேற்கொள்ளும் எத்தகைய நடவடிக்கையும் அல்லது,

(ii) யுத்தம், கிளர்ச்சி, கலகம், அதிகாரிகளுக்கு எதிர்ப்பு, பயங்கரவாத நடவடிக்கை என்பனவற்றை அடக்கவென ஆயுதப்படை அல்லது பொலிஸைச் சேர்ந்த எந்தவொரு அங்கத்தவராலும் மேற்கொள்ளப்பட்ட எத்தகைய நடவடிக்கை காரணமாகவும் அல்லது அவ்வாறான யுத்தம், கிளர்ச்சி, கலகம், புரட்சி, அதிகாரிகளுக்கு எதிர்ப்பு, பயங்கரவாத நடவடிக்கை என்பனவற்றில் எந்தவொரு சம்பவத்தோடும் காப்புறுதி செய்தவர் நேரடியாகவோ அல்லது நேரடியற்ற வகையிலோ தொடர்பு கொண்டிருந்ததை அடுத்து அவரை கைது செய்யவென மேற்கொள்ளும் நடவடிக்கையின் போது முறைப்பாடு செய்யப்பட்ட மரணம் அல்லது விபத்து சம்பவித்திருந்தால் அல்லது ஏற்பட்டிருந்தால், அல்லது

(iii) இந்தப் காப்புறுதிப்பத்திரத்தின் கீழான பிரேரனை, பிரகடனம், ஏனைய ஆவணங்கள், இந்தக் காப்புறுதிப்பத்திரம் சம்பந்தமான அல்லது தேவைப்படும் சகல முக்கியமான விடயங்களையும் வெளிப்படையாக அறிவிக்க ஆயுள் காப்புறுதி செய்தவர் தவறிய அல்லது அலட்சியப்படுத்திய நிலையில் அல்லது

(iv) வஞ்சகமாக அல்லது அநீதியாக இந்தக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அல்லது

(v) காப்பீடு பெற்றவர் எந்தவொரு சட்டத்தையும் மீறியிருந்தால் மற்றும்/அல்லது காப்புறுதி செய்தவரின் சட்டத்துக்கு முரணான எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெற்றிருத்தால் அல்லது

(vi) காப்பீடு பெற்றவர் எந்தவொரு சட்டத்தையும் மீறியிருந்தால் மற்றும்/அல்லது காப்புறுதி செய்தவர் குற்றச்செயலுடன் தொடர்புகொண்டுள்ளதை அடுத்து கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அல்லது ஆத்திரமூட்டப்பட்டதையடுத்து இடம்பெற்ற தாக்குதலில் ஏற்பட்ட காயங்களினால்.

இந்த உட்பிரிவின் கீழான எத்தகைய பொறுப்புகளினதும் உரிமைகளை நிறுவனம் கைவிடுமானால், முறைப்பாடு செய்யப்பட்ட மரணம் அல்லது விபத்து மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு செயற்பாட்டலும் அல்லது சம்பவத்தினாலும் ஏற்படவில்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பு இந்தப்பத்திரத்தின் கீழான நன்மைகளை கோருபவரை அல்லது கோருபவர்களைச் சார்ந்ததாகும்.

Specimen

**2.20 மாதாந்தக் கட்டணங்கள் இழப்பு**

பிரேரணை அல்லது பிரகடனம் என்பவற்றில் அல்லது ஒப்பந்தத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட வேறு ஏதாவது ஆவணங்களில் விபரங்களை வெளியிடாமை அல்லது உண்மையற்ற தவறான உறுதிமொழிகள் இடம்பெற்றிருந்ததன் அடிப்படையில், இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் பிரகாரமான பொறுப்புக்கள் தள்ளுபடி செய்யப்படுமிடத்து, இந்தக் காப்புறுதி செல்லுபடியற்றதாக கருதப்பட்டு செலுத்தப்படாத சகல மாதாந்தக் கட்டணங்களும் இதன் நிபந்தனைகளுக்கு அமைய பறிமுதல் செய்யப்படும்.

**2.21 காணாமற் போனவர்கள்**

காப்புறுதி செய்தவர் உயிருடன் இருந்தால் அவரிடம் இருந்து வழமையான தகவல்களைப் பெற்றுக்கொள்பவர்கள், அவரைப்பற்றி ஒரு (01) வருடகாலத்திற்கு எதுவும் அறிந்திராத சூழ்நிலையில் காப்புறுதி செய்தவரின் மரணம் உறுதிப்படுத்தப்படுமானால், அவரிடமிருந்து எத்தகைய தகவல்களும் கிடைக்காத தருணத்திலிருந்து கணக்கிடப்பட்ட ஏழு (07) வருடங்கள் முடியும் வரை இந்தக் காப்புறுதியின் கீழ் எந்தவொரு தொகையும் வழங்கப்படமாட்டது.

**2.22 இரத்துச் செய்வதற்கான உரிமை**

முதலாவது அட்டவணையின் முதலாவது பகுதியில் தெரிவிக்கப்படதன் பிரகாரம், காப்புறுதிப்பத்திரத்தின். திகதியில் இருந்து இருபத்தி ஒரு (21) நாட்களுக்குள் (Cooling-off period/free-look period) காப்புறுதிப்பத்திர ஆவணத்தை நிறுவனத்திற்கு.

திருப்பி அனுப்புவதன் மூலம் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தை நீக்க முடியும். அத்தகைய நீக்கம் இடம்பெறுமானால் காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரால் வைத்திய பரிசோதனை மற்றும் ஆய்வுகூடப் பரிசோதனை என்பனவற்றுக்கான செலவீனங்களை, மொத்த மாதாந்தக் கொடுப்பனவில் இருந்து கழித்த பின்னர் எஞ்சிய தொகையை, நிறுவனம் மீளளிக்கும்.

காப்புறுதிப்பத்திரத்தின் காப்புறுதிக்கான ரசீது திகதியில் இருந்து இருபத்தி ஒரு (21) நாட்களின் பின்னர் காப்புறுதிப்பத்திரம் நீக்கப்பட்டால், கைதுறப்புப் பெறுமதியைத் தவிர வேறு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**2.23 செல்லுபடித்தன்மை**

காப்புறுதி ஆரம்பிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு அல்லது மீளமைக்கப்பட்டு இவற்றில் எது பிந்தியதோ, அதிலிருந்து இரண்டு (02) வருடங்கள் செயலில் இருந்த பின்னர், கம்பனியுடன் காப்புறுதி செய்வதற்கு போலியான ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை உறுதி செய்ய எவ்விதமான ஆதாரங்களும் இல்லாதபட்சத்தில் இந்த காப்புறுதிப்பத்திரத்தின் செல்லுபடித்தன்மை பற்றி கம்பனி எவ்விதமான சிக்கல்களையும் ஏற்படுத்தாது.

**2.24 வரிவிதிப்பு**

நிறுவனமானது ஆயுள்காப்புறுதியாளர், பின்னுருத்தாளர் அல்லது உரிமைக்கோரிக்கையினைப் பெற்றுக்கொள்பவரின் மீது ஏதேனும் சட்டம், ஆணை, ஒழுங்கு அல்லது வேறுஏதேனும் வகையில் அமுல்படுத்தக்கூடிய வரி மற்றும் வேறு கொடுப்பனவுகளுக்காக முதலீட்டுக்கணக்கு மற்றும் ஆயுள் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய நன்மைகள் எவற்றையேனும் குறைப்பதனை உசிதமானதாக நிறுவனம் கருதுமாயின் அதனை குறைப்பதற்கான அதிகாரத்தினை கொண்டுள்ளது.

**2.25 குறைகள் / முறைப்பாடுகள் கையாளல் மற்றும் முரண்பாடு தீர்த்தல் செயன்முறை**

முறைப்பாடு கையாளல் கொள்கையினூடாக, கம்பனியால் வழங்கப்படும் சேவைகள் அல்லது காப்புறுதித் திட்டங்களுடன் தொடர்புடைய ஏதேனும் குறைகளை கையாள்வது பற்றிய விதிமுறைகள் வழங்கப்படுகின்றன. முறைப்பாடுகளை முறையாகவும் வினைத்திறனான வகையிலும் தீர்க்கப்படுவதற்கான கட்டமைக்கப்பட்ட வழிமுறையை இந்தக் கொள்கை உறுதி செய்கின்றது.

Specimen

(i) முறைப்பாடுகளை பதிவு செய்யும் முறைகள்

- வாடிக்கையாளர் சேவை ஹொட்லைன்: வாடிக்கையாளர் சேவை ஹொட்லைன் இலக்கமான 0112 990 990 அல்லது குறுகிய இலக்கம் 1330 உடன் தொடர்பு கொள்ளல்.
- எழுத்துமூல முறைப்பாடு: கம்பனி தலைமையகத்தில் எழுத்து மூல முறைப்பாட்டை சமர்ப்பித்தல்.
- நேரடி விஜயம்: கம்பனி தலைமையகம் அல்லது எந்தவொரு கிளைக்கும் விஜயம் செய்தல்.
- கூட்டாண்மை WhatsApp இல.: கூட்டாண்மை WhatsApp இலக்கமான 0771 330 000 ஊடாக எழுத்து மூல முறைப்பாட்டை அனுப்பல்.
- கூட்டாண்மை மின்னஞ்சல்: info@unionassurance.com க்கு எழுத்து மூல முறைப்பாட்டை மின்னஞ்சல் வாயிலாக அனுப்பல்.

முறைப்பாட்டை பதிவு செய்ததன் பின்னர், கணனி கட்டமைப்பினால் தயாரிக்கப்பட்ட முறைப்பாட்டு பதிவு இலக்கத்துடனான பதிவை ஏற்றுக் கொண்டமையை உறுதி செய்து 3 வேலை நாட்களுக்குள் காப்புறுதிதாரரக்கு பதில் அனுப்பப்படும். பிணக்கு தீர்க்கும் செயன்முறையின் போது அவர்களின் முறைப்பாடுகள் பற்றி பின்தொடர்வதற்கு இந்த பதிவு இலக்கம் உதவியாக அமையும். கம்பனி முறைப்பாடு கையாளல் செயன்முறை பற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு www.unionassurance.com எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.

(ii) தீர்வு வழங்கும் காலப் பகுதி:

முறைப்பாடுகள் சாதாரணமாக முறைப்பாடு கிடைத்து 14 வேலை நாட்களுக்குள் தீர்க்கப்படும். மேலதிக கால அவகாசம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில், காப்புறுதிதாரருக்கு அதற்கான காரணங்கள் வழங்கப்பட்டு, தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் பற்றி அறிவிக்கப்படும்.

(iii) முரண்பாடு தீர்த்தல்:

ஆரம்ப தீர்ப்பு தொடர்பில் காப்புறுதிதாரரக்கு திருப்தி கொள்ளாவிடின், கம்பனியால் பிஎல்சியிடமிருந்து தீர்ப்பு அல்லது பதில் கிடைத்து 4 வாரங்களினுள் மாற்று முரண் தீர்ப்பு (ADR) பொறிமுறையாக நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு மேன்முறையீடாக வழங்கப்படலாம். கம்பனியால் தீர்வு / பதில் கிடைத்து, 4 வாரங்களுக்குள் காப்புறுதிதாரரக்கு பதில் எதுவும் கிடைக்காத சந்தர்ப்பத்தில், காப்புறுதிதாரரக்கு கிடைக்க வேண்டியிருக்கும் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளுடன் தொடர்புடைய சகல விடயங்களும் மூடப்படும்.

கம்பனியால் வழங்கிய தீர்வுடன் உடன்படாத சந்தர்ப்பத்தில், காப்பீடு செய்யப்பட்டவரால் குறித்த முறைப்பாட்டை காப்புறுதி குறைகேள் அதிகாரி அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அல்லது இலங்கையினுள் இயங்கும் ஏதேனும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கான உரிமையை காப்புறுதிதாரர் கொண்டிருப்பார். இதனூடாக, ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களை பின்பற்றி பக்கசார்பற்ற தீர்வுக்கு வருவது உறுதி செய்யப்படும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) விபரங்கள்.

- விசாரணைகள் பணிப்பாளர்
  இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
  11 ஆம் மாடி, கிழக்கு டவர், உலக வர்த்தக மையம், கொழும்பு 01
  தொலைபேசி : 0112396184-9 / 0112335167
  மின்னஞ்சல்: investigation@ircsl.gov.lk / info@ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரியின் விபரங்கள்
  இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி
  இல 01, பெதஸ்தா இடம், மிலகிரிய, பம்பலப்பிட்டி.
  தொலைபேசி : 0114528671, 0112505542
  மின்னஞ்சல் : info@insuranceombudsman.lk
  இணையம் : www.insuranceombudsman.lk

Specimen

**2.26 முதன்மை நன்மையின் கீழ் உள்ள வரம்புகள்**

முதன்மை நலனுக்கான தகுதிக்கு பின்வரும் வரம்புகள் பொருந்தும்.

| வகை | குறைந்தபட்சம் (ஆண்டுகள்) | அதிகபட்சம் (ஆண்டுகள்) |
|---|---|---|
| வயது | 18 | 65 |
| காப்பீட்டு காலம் | 10 | 30 |

Specimen

**அட்டவணை இல. 3**

## 3. மேலதிக ஆயுள்காப்புறுதி (குறைநிரப்பு) நன்மைகளுக்கான அட்டவணைகள்

### 3.1 விபத்து மரண நன்மைகள் (ADB)

#### 3.1.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவில் ஏற்புடையதாகுமென தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே விபத்து மரண நன்மைகள் (ADB) ஏற்புடையதாகுமென கருதப்படும்.

கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையிலும், ஆயுட்காப்புறுதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கையிலும், இந்த அனுகூலம் சம்பந்தமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையிலும், காப்புறுதி செய்தவரின் மரணம், விபத்தின் காரணமாகவே ஏற்பட்டதென நிறுவனத்திற்கு திருப்தியளிக்கும் நிரூபணம், விபத்து நடந்து தொண்ணூறு (90) நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலும், முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவின் கீழ் விபத்து மரண நன்மை (ADB) எனத் தெரிவிக்கப்பட்ட காப்புறுதிப்பணம் வழங்கப்படும்.

#### 3.1.2 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்

காப்புறுதி செய்தவரின் எத்தகைய குறிப்பிடத்தக்க தொழில் மாற்றமும் (14) பதின்நான்கு நாட்களுக்குள் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் கீழான நன்மைகளை பெறுவதற்குரிய பகுதிகள் மீள அங்கீகரிக்கப்பட வேண்டும். தேகாரோக்கியம் சம்பந்தமான பிரேரணைகள்/மற்றும் சுகாதார பிரகடனங்களில் விவரிக்கப்பட்டதற்கு வேறுபாடான எந்தவொறு தொழிலிலும் காப்புறுதி செய்தவர் ஈடுபட்டிருந்தால், அதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு கோரிக்கைக்கும் நிறுவனம் பொறுப்பாளியாகமாட்டாது.

#### 3.1.3 நிபந்தனைகள்

(i) காப்ப்புறுதி செய்தவர் சம்பந்தமான விபத்து மரணங்கள் கீழ்க்காணும் விதங்களில் ஏற்பட்டிருக்க வேண்டும,
- (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இந்த அனுகூலம் முடிவடையும் திகதிக்கு முன்னர் அல்லது,
- (ஆ) ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரின் 70வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், இவற்றில் எது முந்தியதோ அது.

(ii) விபத்து மரண அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும்.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், மேலதிக குறைநிரப்பு அனுகூலங்களும் செயலிழக்கும்.

(iv) கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது
- (அ) இலாபத்தில் பங்கெடுத்தல்
- (ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்.

(v) விபத்து உயிரிழப்பு காப்பீடு உள்ளடங்கலாக எந்தவொரு காப்புறுதியாளரினாலும் வழங்கப்படும் நஷ்டஈட்டுத்தொகை என்பது ஐம்பது மில்லியன் ரூபாய்க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (ரூ.50,000,000/-).

(vi) விபத்து அல்லது நோய் காரணமான முழுமையானதும், நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் (TPS) அல்லது விபத்துக்காரணமான முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் (TPA) அல்லது விபத்து அல்லது நோயின் காரணமான முழுமையான நிரந்தர இயலாமையின் மாதாந்த கட்டுபண நன்மையை விட்டுக்கொடுத்தல் (WP) என்பன காரணமான பொறுப்புகள் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இந்த நன்மை முடிவுக்கு வரும்.

Specimen

### 3.1.4 இந்த நன்மைக்கு ஏற்புடைய தவிர்ப்புக்கள்

பின்வரும் நிலைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புடைய வகையில் ஆயுள் காப்புறுதிதாரரின் உயிரிழிப்பு சம்பவிக்குமாயின், விபத்து மரண அனுகூலத்தின் கீழ் எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை நிறுவனம் கொண்டிருக்காது,

(i) தற்கொலை முயற்சி அல்லது சுயமாக அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மற்றும்/அல்லது

(ii) மதுபானம், போதைப்பொருட்கள் அல்லது மனமயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வஸ்துக்களை மிகையாக உட்கொள்வதால் விளையும் விபத்துகள் அல்லது நோய்கள் மற்றும் போதையுடன் வாகனம் ஓட்டுதல் அடங்காலாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருத்தல் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மட்டத்தை விடவும் கூடுதலான அளவு மதுபானம் இரத்தத்தில் கலந்திருக்கையில் வாகனம் ஓட்டுதல் மற்றும்/அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட விமானச் சேவை நிறுவனத்தில் கட்டணம் செலுத்திய பயணி என்ற நிலைக்கு அப்பால் விமானப் போக்குவரத்து அல்லது விமானச் சாகசத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நிகழக்கூடிய விபத்து, அந்த சமயத்தில் காப்புறுதியாளர் விமானத்தில் எதுவித கடமைகளையோ அங்கு செல்ல வேண்டிய தேவைகளையோ கொண்டிருக்காத நிலை மற்றும்/அல்லது

(iv) யுத்தம் மற்றும் யுத்தத்துடன் ஒப்பிடக்கூடிய நிலைமைகள், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு பகையாளியின் செயல், ஆயுத மோதல்கள், (போர்ப்பிரகடனம் செய்து அல்லது செய்யாமல் நிகழும்) போர் போன்ற சம்பவங்கள், சிவில் யுத்தம், கலகம், கிளர்ச்சி, புரட்சி, அபகரிப்பு அல்லது எந்தவொரு பொது அல்லது உள்ளூராட்சி அரசாங்கம் அல்லது அதிகார சபையின் உத்தரவின் பிரகாரத்திலான தேசியமயமாக்கல் எந்தவொரு அரசாங்கத்தையும் வன்முறையை பிரயோகித்து கவிழ்க்க முனையும் நோக்கத்தை கொண்ட எந்தவொரு நிறுவனத்தினதும் பெயரால் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய வகையில் இயங்கக்கூடிய நபரொருவரின் செயல்கள் மற்றும்/அல்லது

(v) பாதுகாப்பு படைகளின் அல்லது விமானப் படையின் கடல் அல்லது இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆயுதப் பயன்பாடு தேவைப்படுகின்ற அல்லது பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களை போன்றவர்களை தாக்கும் நோக்கில் இராணுவ அதிகாரிகள் உத்தரவிற்கமைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கேற்றல் மற்றும்/அல்லது

(vi) அணுசக்தி அபாயங்கள்: உதாரணமாக அணுசக்தியின் தாக்கங்களுக்கு உட்படுதல் (அணுக்கசிவு, அணுக்கசிவால் விளையக்கூடிய நச்சித்தன்மை, அணுசக்திப் பின்விளைவுகள்) அல்லது எந்தவொரு வகையும் சேர்ந்த அணுக் கழிவு அல்லது இரசாயனக் கலப்பால் விளையும் நச்சுத்தன்மை மற்றும்/அல்லது

(vii) ஸ்கூபா டைவிங், மோட்டார் சைக்கிளோட்டம், பரசூட் விளையாட்டு, மலையேறுதல், மலைகளில் தொங்குதல் அல்லது பாதங்களைப் பயன்படுத்தாத ஓட்டப்பந்தயங்கள், துடுப்பு வலித்தல், மங்கீஜம்ப், வேட்டையாடுதல், ஸ்ரீபல் சேஸிங், போலோ விளையாட்டு, குளிர்கால விளையாட்டுக்கள், ஐஸ் ஹொக்கி போன்றவை உள்ளடக்கிய ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத அபாயகரமான நடவடிக்கைகள் அல்லது கம்பனி எழுத்துமூலம் இணக்கம் கண்டிருந்தாலன்றி தொழில்சார் மட்டத்திலான ஏதேனும் விளையாட்டுக்கள். மற்றும்/அல்லது

(viii) பனிமலைச்சரிவுகள், மண்சரிவுகள், பூகம்பம், வெள்ளம், பூகம்பங்களால் அல்லது எரிமலைக்குமுறல்களால் ஏற்படக்கூடிய சுனாமி அல்லது பேரலைகள், புயல், சூறாவளி, சுழல் காற்று போன்றவை அடங்கலாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத இயற்கைப் பேரிடர்கள் மற்றும்/அல்லது

Specimen

### 3.2 விபத்து அல்லது நோய் காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் (TPS)

#### 3.2.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் விபத்து அல்லது நோய் காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் ஏற்புடையதென காண்பிக்கப்பட்டிருந்தால் அத்தகைய அனுகூலம் பிரயோகிக்கத்தக்கதாகும்.

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் பொதுவான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கும் கீழே குறிப்பிடப்பட்ட பிரத்தியேக நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளும் உட்பட்ட வகையிலும், ஆயுட்காப்புறுதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கையிலும், இந்த அனுகூலம் சம்பந்தமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையிலும் விபத்து அல்லது நோய் காரணமாக,

(i) காப்புறுதி செய்தவர், விபத்து அல்லது சுகயீனம் காரணமாக முழுமையாகவும், நிரந்தரமாகவும் அங்கவீனமடைந்திருத்தல் மற்றும/அல்லது,

(ii) அத்தகைய வலதுகுறைந்த நிலை (180) நூற்றியென்பது நாட்களுக்கு மேல் நீடித்து, அதன் பின்னர், நிரந்தரமான இயலாமை என ஏற்றுக்கொள்ளப்படல் மற்றும்,

(iii) வருமானத்தை பெறவென எந்தவொரு தொழிலை அல்லது உயர் தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருத்தல்,

காப்புறுதி செய்யப்பட்ட பணம், ஐந்து (5) சமமான வருடாந்த தவணை கொடுப்பனவாக வழங்கப்படும். இதில் முதலாவது தவணைப்பணம், அத்தகைய இயலாமைக்கான பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலன்றும், ஏனைய தவணைக் கொடுப்பனவுகள், முழுமையானதும், நிரந்தரமானதுமான இயலாமையை தொடர்ந்து காப்புறுதிப்பத்திரத்தின் ஒவ்வொரு ஆண்டு இறுதியின் போதும் வழங்கப்படும்.

காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைந்தால் அல்லது சகல தவணைப்பணக் கொடுப்பனவுகளுக்கும் முன்னராக காப்புறுதி செய்தவரின் மரணம் சம்பவிக்குமானால், வழங்கப்படாத தவணைக் கொடுப்பனவுகள், இந்தக் காப்புறுதிப் பத்திரத்திற்கான வழமையான கொடுப்பனவுக் கோரிக்கையுடன் சேர்த்து வழங்கப்படும்.
விபத்து மற்றும் சுகயீனம் காரணமாக ஏற்படக்கூடிய முழுமையானதும், நிரந்தரமானதுமான இயலாமை என்பது காப்புறுதிப்பத்திரத்தின் பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும் என்பதுடன், குறித்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

#### 3.2.2 காத்திருக்கும் காலம்

I. அனுகூலம் ஆரம்பிக்கப்பட்ட திகதி அல்லது
II. காப்புறுதிப்பத்திரத்தின் திகதி அல்லது
III. காப்புறுதிப்பத்திரம் மீளாய்வு / புனரமைக்கப்பட்ட திகதி
IV. காலப்போக்கில் இந்த அனுகூலம் உள்ளடக்கப்பட்டிருந்தால், அனுகூலம் உள்ளடக்கப்பட்டு நூ ற்றியெண்பது (180) நாட்கள் இவற்றில் எது பிந்தியதோ

அந்தத்திகதியில் இருந்து (30) முப்பது நாட்களுக்குள் ஏற்படும் நோயினால் முழுமையானதும், நிரந்தரமானதுமான இயலாமை ஏற்பட்டால், அத்தைகைய இயலாமை இந்த அனுகூலத்தின் கீழ் கோரிக்கை சமர்ப்பிக்கப்படத்தகுதியற்றதாகும்.

#### 3.2.3 கட்டுப்பணத்தொகையை திருத்தியமைப்பதில் கம்பனிக்குள்ள உரிமைகள் மற்றும் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

முதல் பட்டியலில் பாகம் 02 இல் காட்டப்பட்டுள்ளவாறு இந்த அனுகூலத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணமானது அனுகூலம் ஆரம்பமாகும் திகதியில் இருந்து ஒரு (01) வருட காலத்திற்கு மாத்திரம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு காப்புறுதி ஆண்டும் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு அறிவித்து முப்பது (30) நாட்களின் பின்னர், கட்டுப்பண திருத்தங்களை அல்லது இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் மாற்ற கம்பனிக்கு உரிமை உள்ளது என்பதுடன் கட்டுப்பண மாற்றம்

Specimen

அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சார்ந்த திருத்தமானது காப்புறுதியின் அடுத்த காப்புறுதி ஆண்டு தொடக்கம் அமுலாகும்.

### 3.2.4 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்

காப்புறுதி செய்தவரின் எத்தகைய குறிப்பிடத்தக்க தொழில் மாற்றமும் (14) பதின்நான்கு நாட்களுக்குள் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் கீழான நன்மைகளை பெறுவதற்குரிய இடங்கள் மீள அங்கீகரிக்கப்பட வேண்டும். தேகாரோக்கியம் சம்பந்தமான பிரேரணைகள் மற்றும் பிரகடனங்களில் விவரிக்கப்பட்டதற்கு வேறுபாடான எந்தவொறு தொழிலிலும் இயலாமை ஏற்பட்ட காலத்தில் காப்புறுதி செய்தவர் ஈடுபட்டிருந்தால், அதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு கோரிக்கைக்கும் நிறுவனம் பொறுப்பாளியாகமாட்டாது.

### 3.2.5 அறிவித்தலும் கோரிக்கைக்கான சான்றுகளும்

கோரிக்கைக்கு அடிப்படையாகவுள்ள எந்தவொரு காயம் அல்லது நோய் சம்பந்தமான எழுத்து மூலமான அறிவித்தல் காப்புறுதி செய்தவரின் பிரகடன விவரிப்பில் குறிப்பிடப்பட்ட முன்னைய மற்றும் தற்போதைய வதிவிடத்தின் முகவரியுடன் காயம் அல்லது நோய் ஏற்பட்ட நாளில் இருந்து ஆகக்குறைந்தது அறுபது (60) நாட்களுக்குள் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அருகில் உள்ள கிளை நிலையங்களுக்கு வழங்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட அந்தக் காலப்பகுதியினுள் அறிவித்தல் விடுக்கப்பாடதவிடத்து அத்தகைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது விடுவதற்குரிய உரிமை நிறுவனத்திற்கு உண்டு. நிறுவனத்திற்கு கோரிக்கைகான செலவீனங்களுக்கு மட்டுமே இயலாமைக்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 3.2.6 தொடர்ச்சியான இயலாமைக்கான நிரூபணம்

விபத்து அல்லது நோய் காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமைக்கான நிரூபணத்தை திருப்திகரமானதென நிறுவனம் ஏற்றுக்கொண்ட போதிலும், அத்தகைய இயலாமை தொடர்ந்தும் உள்ளதற்கான சான்றை காப்புறுதி செய்தவரிடம் இருந்து நியாயமான இடைவெளிகளில் நிறுவனத்திற்கு எவ்வித செலவும் இன்றி பெற்றுக்கொள்ளும் உரிமை நிறுவனத்திற்கு உண்டு. காப்புறுதி செய்தவர் அத்தகைய சான்றை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அல்லது சம்பளம், ந்ட்ஈடு, இலாபம் என்பவற்றை சம்பாதிக்க அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான எந்தவொரு வேலை, தொழில், உயர்தொழில் என்பனவற்றில் ஈடுபட அல்லது வேலை செய்ய காப்புறுதி செய்தவருக்கு இயலுமான நிலையில் கொடுப்பனவு நிறுத்தப்படும்.

### 3.2.7 நிபந்தனைகள்

(i) விபத்து அல்லது நோய் காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை கீழ்க்காணும் வகையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இந்தக் அனுகூலம் முடிவடையும் திகதிக்கு முன்னர் அல்லது

(ஆ) ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரின் 70வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், இவற்றில் எது முந்தியதோ அது.

(ii) அவ் அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும். இந்த அனுகூலத்தை மீள செயற்படுத்துவதை தவிர்ப்பதற்கான அல்லது மறுப்பதற்கான அதிகாரத்தை நிறுவனம் கொண்டுள்ளது.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், விபத்து அல்லது நோய்கரருனமபக முழுமையபனதும் நிரந்தரமபனதுமான இயவபமை அறுகூலம் செயலிழக்கும்.

(iv) கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது,

(அ) இலாபத்தில் பங்கெடுத்தல்

(ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்.

Specimen

(v) இந்த காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அனுகூலங்களிலிருந்து, தங்கியிருப்பவர், அனுகூலம் பெறுபவர் அல்லது வாரிசாக நியமிக்கப்பட்டவருக்கு எவ்வித பயனையும் பெறுவதற்கான உரிமை இல்லை.

(vi) முழுமையான மற்றும் நிரந்தர அங்கவீன காப்பீடு உள்ளடங்கலாக எந்தவொரு காப்புறுதியாளரினாலும் வழங்கப்படும் ந்ட்ஈட்டுத்தொகை என்பது ஐம்பது மில்லியன் ரூபாய்க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (ரூ.50,000,000/).

(vii) இந்த காப்புறுதியின் கீழ் நீடிக்கப்பட்ட பகுதியளவு நிலையான அங்கவீன அனுகூலம் (EPD) என்பதன் கீழ் ந்ட்ஈட்டை உள்வாங்கி, நீடிக்கப்பட்ட பகுதியளவு நிலையான அங்கவீன அனுகூலம் (EPD) என்பதற்கு கொடுப்பனவை மேற்கொண்டிருந்தால், அந்தத் தொகை நிறுவனத்தினால் காப்புறுதிதாரருக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.

### 3.2.8 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய தவிர்ப்புக்கள்

பின்வரும் நிலைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புடைய வகையில் ஆயுள் காப்புறுதிதாரரின் விபத்துஅல்லது தோய் காரணமாக முழுமையானதும் நித்தரமான இய்லாமை அனுகூலத்தின் கீழ் எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை நிறுவனம் கொண்டிருக்காது,

(i) தற்கொலை முயற்சி அல்லது சுயமாக அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மற்றும்/அல்லது

(ii) மதுபானம், போதைப்பொருட்கள் அல்லது மனமயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வஸ்துக்களை மிகையாக உட்கொள்வதால் விளையும் விபத்துகள் அல்லது நோய்கள் மற்றும் போதையுடன் வாகனம் ஓட்டுதல் அடங்காலாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருத்தல் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மட்டத்தை விடவும் கூடுதலான அளவு மதுபானம் இரத்தத்தில் கலந்திருக்கையில் வாகனம் ஓட்டுதல் மற்றுமஃஅல்லது

(iii) சம்பந்தப்பட்டவரின் விண்ணப்பப்படிவத்தின் சுகாதார பிரகடனப்பகுதியில் காப்புறுதியாளர் அல்லது அவரில் தங்கியிருப்பவரால் வெளிப்படுத்தப்பட்டு ஆயுட்காப்புறுதி உறுதி தெரிவிக்கப்பட்ட திகதிக்கு முன்னால் நிறுவனத்தினால் எழுத்து மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆயுட்காப்புறுதிப்பத்திர அல்லது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தில் வெளிப்படுத்தப்படாது முன்கூட்டியே இருந்த சகல நிலைமைகள் மற்றுமஃஅல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட விமானச் சேவை நிறுவனத்தில் கட்டணம் செலுத்திய பயணி என்ற நிலைக்கு அப்பால் விமானப் போக்குவரத்து அல்லது விமானச் சாகசத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நிகழக்கூடிய விபத்து, அந்த சமயத்தில் காப்புறுதியாளர் விமானத்தில் எதுவித கடமைகளையோ அங்கு செல்ல வேண்டிய தேவைகளையோ கொண்டிருக்காத நிலை மற்றும்/அல்லது

(v) யுத்தம் மற்றும் யுத்தத்துடன் ஒப்பிடக்கூடிய நிலைமைகள், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு பகையாளியின் செயல், ஆயுத மோதல்கள், (போர்ப்பிரகடனம் செய்து அல்லது செய்யாமல் நிகழும்) போர் போன்ற சம்பவங்கள், சிவில் யுத்தம், கலகம், கிளர்ச்சி, புரட்சி, அபகரிப்பு அல்லது எந்தவொரு பொது அல்லது உள்ளூராட்சி அரசாங்கம் அல்லது அதிகார சபையின் உத்தரவின் பிரகாரத்திலான தேசியமயமாக்கல் எந்தவொரு அரசாங்கத்தையும் வன்முறையை பிரயோகித்து கவிழ்க்க முனையும் நோக்கத்தை கொண்ட எந்தவொரு நிறுவனத்தினதும் பெயரால் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய வகையில் இயங்கக்கூடிய நபரொருவரின் செயல்கள் மற்றும்/அல்லது

(vi) பாதுகாப்பு படைகளின் அல்லது விமானப் படையின் கடல் அல்லது இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆயுதப் பயன்பாடு தேவைப்படுகின்ற அல்லது பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களை போன்றவர்களை தாக்கும் நோக்கில் இராணுவ அதிகாரிகள் உத்தரவிற்கமைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கேற்றல் மற்றுமஃஅல்லது

Specimen

(vii) அணுசக்தி அபாயங்கள்: உதாரணமாக அணுசக்தியின் தாக்கங்களுக்கு உட்படுதல் (அணுக்கசிவு, அணுக்கசிவால் விளையக்கூடிய நச்சித்தன்மை, அணுசக்திப் பின்விளைவுகள்) அல்லது எந்தவொரு வகையும் சேர்ந்த அணுக் கழிவு அல்லது இரசாயனக் கலப்பால் விளையும் நச்சுத்தன்மை மற்றும்/அல்லது

(viii) ஸ்கூபா டைவிங், மோட்டார் சைக்கிளோட்டம், பரசூட் விளையாட்டு, மலையேறுதல், மலைகளில் தொங்குதல் அல்லது பாதங்களைப் பயன்படுத்தாத ஓட்டப்பந்தயங்கள், துடுப்பு வலித்தல், மங்கீஜம்ப், வேட்டையாடுதல், ஸ்ரீபல் சேஸிங், போலோ விளையாட்டு, குளிர்கால விளையாட்டுக்கள், ஐஸ் ஹொக்கி போன்றவை உள்ளடக்கிய ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத அபாயகரமான நடவடிக்கைகள் அல்லது கம்பனி எழுத்துமூலம் இணக்கம் கண்டிருந்தாலன்றி தொழில்சார் மட்டத்திலான ஏதேனும் விளையாட்டுக்கள் மற்றும்/அல்லது

(ix) பனிமலைச்சரிவுகள், மண்சரிவுகள், பூகம்பம், வெள்ளம், பூகம்பங்களால் அல்லது எரிமலைக்குமுறல்களால் ஏற்படக்கூடிய சுனாமி அல்லது பேரலைகள், புயல், சூறாவளி, சுழல் காற்று போன்றவை அடங்கலாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத இயற்கைப் பேரிடர்கள் மற்றும்/அல்லது

(x) விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயத்தின் விளைவாக மற்றும் அதன் தொடர்ச்சியாக விளைந்த தொற்றுக்கள் தவிர நஞ்சூட்டலின் விளைவுகள்.

Specimen

### 3.3 விபத்து காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் (TPA)

#### 3.3.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் விபத்து காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை அனுகூலம் (TPA) ஏற்புடையதென காண்பிக்கப்பட்டிருந்தால் அத்தகைய அனுகூலம் பிரயோகிக்கத்தக்கதாகும்.

இக்காப்புறுதியில் 1ம் அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள, விபத்து காரணமாக முழுமையானதும் நிரந்தரமான இயலாமை அனுகூலத்திற்கான அடிப்படை காப்பீடானது ஆயுள் காப்புறுதியாளருக்கு கீழ்வரும் நிலைகளில் செலுத்தப்படலாம்.

(i) காப்புறுதி செய்தவர், விபத்து காரணமாக சம்பவம் நடைபெற்ற தினத்திலிருந்து தொண்ணூறு (90) நாட்களுக்குள் முழுமையாகவும், நிரந்தரமாகவும் அங்கவீனமடைந்திருத்தல் மற்றும்,

(ii) அத்தகைய அங்கவீன நிலை (180) நூற்றியெண்பது நாட்களுக்கு மேல் நீடித்து, அதன் பின்னர், நிரந்தரமான இயலாமை என ஏற்றுக்கொள்ளப்படல் மற்றும்,

(iii) வருமானத்தை பெறவென எந்தவொரு தொழிலை அல்லது உயர் தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருத்தல்,

காப்புறுதி செய்யப்பட்ட பணம், ஐந்து (05) சமமான வருடாந்த தவணை கொடுப்பனவாக வழங்கப்படும். இதில் முதலாவது தவணைப்பணம், அத்தகைய இயலாமைக்கான பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலன்றும், ஏனைய தவணைக் கொடுப்பனவுகள், இயலாமையை தொடர்ந்து காப்புறுதிப்பத்திரத்தின் ஒவ்வொரு ஆண்டு இறுதியின் போதும் வழங்கப்படும்.

காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைந்தால் அல்லது சகல தவணைப்பணக் கொடுப்பனவுகளுக்கும் முன்னராக காப்புறுதி செய்தவரின் மரணம் சம்பவிக்குமானால், வழங்கப்படாத தவணைக் கொடுப்பனவுகள், இந்தக் காப்புறுதிப் பத்திரத்திற்கான வழமையான கொடுப்பனவுக் கோரிக்கையுடன் சேர்த்து வழங்கப்படும்.

விபத்து மற்றும் சுகயீனம் காரணமாக ஏற்படக்கூடிய முழுமையானதும், நிரந்தரமானதுமான இயலாமை என்பது காப்புறுதிப்பத்திரத்தின் பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும் என்பதுடன், குறித்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

#### 3.3.2 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்

காப்புறுதி செய்தவரின் எத்தகைய குறிப்பிடத்தக்க தொழில் மாற்றமும் பதின்நான்கு (14) நாட்களுக்குள் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் கீழான நன்மைகளை பெறுவதற்குரிய இடங்கள் மீள அங்கீகரிக்கப்பட வேண்டும். தேகாரோக்கியம் சம்பந்தமான பிரேரணைகள் மற்றும் பிரகடனங்களில் விபரிக்கப்பட்டதற்கு வேறுபாடான எந்தவொறு தொழிலிலும் இயலாமை ஏற்பட்ட காலத்தில் காப்புறுதி செய்தவர் ஈடுபட்டிருந்தால், அதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு கோரிக்கைக்கும் நிறுவனம் பொறுப்பாளியாகமாட்டாது.

#### 3.3.3 அறிவித்தலும் கோரிக்கைக்கான சான்றுகளும்

கோரிக்கைக்கு அடிப்படையாகவுள்ள எந்தவொரு காயம் அல்லது நோய் சம்பந்தமான எழுத்து மூலமான அறிவித்தல் காப்புறுதி செய்தவரின் முன்னைய மற்றும் தற்போதைய வதிவிடத்தின் முகவரியுடன் காயம் அல்லது நோய் ஏற்பட்ட நாளில் இருந்து ஆகக்குறைந்தது அறுபது (60) நாட்களுக்குள் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அருகில் உள்ள கிளைக்கு வழங்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட அந்தக்காலப்பகுதியினுள் அறிவித்தல் விடுக்கப்பாடதவிடத்து அத்தகைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாதுவிடுவதற்குரிய உரிமை நிறுவனத்திற்கு உண்டு. நிறுவனத்திற்கு எத்தகைய செலவையும் ஏற்படுத்தாத வகையில் இயலாமைக்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

Specimen

### 3.3.4 தொடர்ச்சியான இயலாமைக்கான நிரூபணம்

விபத்து அல்லது நோய் காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமைக்கான நிரூபணத்தை திருப்திகரமானதென நிறுவனம் ஏற்றுக்கொண்ட போதிலும், அத்தகைய இயலாமை தொடர்ந்தும் உள்ளதற்கான சான்றை காப்புறுதி செய்தவரிடம் இருந்து நியாயமான இடைவெளிகளில் நிறுவனத்திற்கு எவ்வித செலவும் இன்றி பெற்றுக்கொள்ளும் உரிமை நிறுவனத்திற்கு உண்டு. காப்புறுதி செய்தவர் அத்தகைய சான்றை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அல்லது சம்பளம், நட்டஈடு, இலாபம் என்பவற்றை சம்பாதிக்க அல்லது பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான எந்தவொரு வேலை, தொழில், உயர்தொழில் என்பனவற்றில் ஈடுபட அல்லது வேலை செய்ய காப்புறுதி செய்தவருக்கு இயலுமான நிலையில் கொடுப்பனவு நிறுத்தப்படும்.

### 3.3.5 நிபந்தனைகள்

(i) விபத்து காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை கீழ்க்காணும் வகையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.
   (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இந்தக் அனுகூலம் முடிவடையும் திகதிக்கு முன்னர் அல்லது
   (ஆ) ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரின் 70 வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், இவற்றில் எது முந்தியதோ அது.

(ii) இவ்அனுகூலம் அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும்.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், இவ்அனுகூலமும் செயலிழக்கும்.

(iv) கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது,
   (அ) இலாபத்தில் பங்கெடுத்தல்
   (ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்.

(v) இந்த காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அனுகூலங்களிலிருந்து, தங்கியிருப்பவர், அனுகூலம் பெறுபவர் அல்லது வாரிசாக நியமிக்கப்பட்டவருக்கு எவ்வித பயனையும் பெறுவதற்கான உரிமை இல்லை.

(vi) முழுமையான மற்றும் நிரந்தர அங்கவீன காப்பீடு உள்ளடங்கலாக எந்தவொரு காப்புறுதியாளரினாலும் வழங்கப்படும் நட்டஈட்டுத்தொகை என்பது ஐம்பது மில்லியன் ரூபாய்க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (ரூ.50,000,000/-).

(vii) இந்த காப்புறுதியின் கீழ் நீடிக்கப்பட்ட பகுதியளவு நிலையான அங்கவீன அனுகூலம் (EPD) என்பதன் கீழ் நட்டஈட்டை உள்வாங்கி, நீடிக்கப்பட்ட பகுதியளவு நிலையான அங்கவீன அனுகூலம் (EPD) என்பதற்கு கொடுப்பனவை மேற்கொண்டிருந்தால், அந்தத் தொகை நிறுவனத்தினால் காப்புறுதிதாரருக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.

### 3.3.6 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய தவிர்ப்புக்கள்

பின்வரும் நிலைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புடைய வகையில் ஆயுள் காப்புறுதிதாரரின் உயிரிழிப்பு சம்பவிக்குமாயின், விபத்து காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான அங்கவீன அனுகூலத்தின் கீழ் எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை நிறுவனம் கொண்டிருக்காது,

(i) தற்கொலை முயற்சி அல்லது சுயமாக அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மற்றும்/அல்லது

(ii) மதுபானம், போதைப்பொருட்கள் அல்லது மனமயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வஸ்துக்களை மிகையாக

Specimen

உட்கொள்வதால் விளையும் விபத்துகள் அல்லது நோய்கள் மற்றும் போதையுடன் வாகனம் ஓட்டுதல் அடங்காலாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருத்தல் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மட்டத்தை விடவும் கூடுதலான அளவு மதுபானம் இரத்தத்தில் கலந்திருக்கையில் வாகனம் ஓட்டுதல் மற்றும்/அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட விமானச் சேவை நிறுவனத்தில் கட்டணம் செலுத்திய பயணி என்ற நிலைக்கு அப்பால் விமானப் போக்குவரத்து அல்லது விமானச் சாகசத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நிகழக்கூடிய விபத்து, அந்த சமயத்தில் காப்புறுதியாளர் விமானத்தில் எதுவித கடமைகளையோ அங்கு செல்ல வேண்டிய தேவைகளையோ கொண்டிருக்காத நிலை மற்றும்/அல்லது

(iv) யுத்தம் மற்றும் யுத்தத்துடன் ஒப்பிடக்கூடிய நிலைமைகள், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு பகையாளியின் செயல், ஆயுத மோதல்கள், (போர்பிரகடனம் செய்து அல்லது செய்யாமல் நிகழும்) போர் போன்ற சம்பவங்கள், சிவில் யுத்தம், கலகம், கிளர்ச்சி, புரட்சி, அபகரிப்பு அல்லது எந்தவொரு பொது அல்லது உள்ளூராட்சி அரசாங்கம் அல்லது அதிகார சபையின் உத்தரவின் பிரகாரத்திலான தேசியமயமாக்கல் எந்தவொரு அரசாங்கத்தையும் வன்முறையை பிரயோகித்து கவிழ்க்க முனையும் நோக்கத்தை கொண்ட எந்தவொரு நிறுவனத்தினதும் பெயரால் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய வகையில் இயங்கக்கூடிய நபரொருவரின் செயல்கள் மற்றும/அல்லது

(v) பாதுகாப்பு படைகளின் அல்லது விமானப் படையின் கடல் அல்லது இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆயுதப் பயன்பாடு தேவைப்படுகின்ற அல்லது பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களை போன்றவர்களை தாக்கும் நோக்கில் இராணுவ அதிகாரிகள் உத்தரவிற்கமைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கேற்றல் மற்றும/அல்லது

(vi) அணுசக்தி அபாயங்கள்: உதாரணமாக அணுசக்தியின் தாக்கங்களுக்கு உட்படுதல் (அணுக்கசிவு, அணுக்கசிவால் விளையக்கூடிய நச்சித்தன்மை, அணுசக்திப் பின்விளைவுகள்) அல்லது எந்தவொரு வகையும் சேர்ந்த அணுக் கழிவு அல்லது இரசாயனக் கலப்பால் விளையும் நச்சுத்தன்மை மற்றும்/அல்லது

(vii) ஸ்கூபா டைவிங், மோட்டார் சைக்கிளோட்டம், பரசூட் விளையாட்டு, மலையேறுதல், மலைகளில் தொங்குதல் அல்லது பாதங்களைப் பயன்படுத்தாத ஓட்டப்பந்தயங்கள், துடுப்பு வலித்தல், மங்கீஜம்ப், வேட்டையாடுதல், ஸ்ரீபல் சேஸிங், போலோ விளையாட்டு, குளிர்கால விளையாட்டுக்கள், ஐஸ் ஹொக்கி போன்றவை உள்ளடக்கிய ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத அபாயகரமான நடவடிக்கைகள் அல்லது கம்பனி எழுத்துமூலம் இணக்கம் கண்டிருந்தாலன்றி தொழில்சார் மட்டத்திலான ஏதேனும் விளையாட்டுக்கள். மற்றும்/அல்லது

(viii) பனிமலைச்சரிவுகள், மண்சரிவுகள், பூகம்பம், வெள்ளம், பூகம்பங்களால் அல்லது எரிமலைக்குமுறல்களால் ஏற்படக்கூடிய சுனாமி அல்லது பேரலைகள், புயல், சூறாவளி, சுழல் காற்று போன்றவை அடங்கலாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத இயற்கைப் பேரிடர்கள் மற்றும்/அல்லது

Specimen

## 3.4 விஸ்தரிக்கப்பட்ட ஓரளவு நிரந்தரமான இயலாமை அனுகூலம் (EPD)

### 3.4.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் விபத்து காரணமாக விஸ்தரிக்கப்பட்ட ஓரளவு நிரந்தரமான இயலாமை அனுகூலம் ஏற்புடையதென காண்பிக்கப்பட்டிருந்தால் அத்தகைய அனுகூலம் பிரயோகிக்கத்தக்கதாகும்.

கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட வகையிலும் ஆயுட்காப்புறுதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கையிலும், இந்த அனுகூலம் சம்பந்தமான கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையிலும், விபத்தின் காரணமாக ஏற்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட இயலாமைகள் ஏதாவதொன்றினால் காப்புறுதி செய்தவர் பாதிக்கப்பட்டுள்ளாரென நிறுவனத்திற்கு திருப்தி அளிக்கும் நிரூபணம், அத்தகைய இயலாமை முழுமையாகவும் நேரடியாகவும் விபத்தினால் ஏற்பட்டதென்றும் வேறு எந்தக் காரணிகளும் இதில் சம்பந்தப்படவில்லை எனவும், விபத்து இடம்பெற்று தொண்ணூறு (90) நாட்களுக்குள் நடைபெற்றதாகவும் காணப்படுமிடத்து, இத்தகைய இயலாமை என்ற விபரணத்தின் கீழ்குறித்துரைக்கப்பட்ட தொகையை நிறுவனம் வழங்கும்.

அவ்வாறான காயங்களினால் ஒன்றுக்கு மேற்பட்ட இயலாமை ஏற்படுமானால், ஆகக்கூடிய தொகை செலுத்தப்பட வேண்டிய இயலாமைக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்கப்படும்.

விபத்துக்காரணமாக ஏற்படும் விஸ்தரிக்கப்பட்ட ஓரளவு நிரந்தரமான இயலாமை அனுகூலத்துக்கான கொடுப்பனவு கீழே தரப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

(i) உடல் அவயத் துண்டிப்பு அல்லது அவயவ உபயோகதின் முழு அளவிலான இழப்பீடு என்பனவற்றினால் ஏற்பட்ட மொத்த இழப்பீடு:-

| | |
|---|---|
| a. ஒரு அவயவம் காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 50% |
| b. ஒளி அறிவுணர்வு தவிர்ந்த ஒரு கண் பார்வை காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 50% |
| c. ஒரு கண்ணின் கண்ணாடி வில்லை காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 50% |

(ii). முழுமையானதும் நிரந்தரமானதுமான இழப்பீடு

| | |
|---|---|
| a. இரு காதுகளினதும் கேட்கும் சக்தி காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 75% |
| b. ஒரு காதின் கேட்கும் சக்தி காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 30% |
| c. பேசும் சக்தி காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 50% |

(iii). அவயவத் துண்டிப்பு அல்லது முழுமையான, நிரந்தரமான பாவனையின் இழப்பால் ஏற்பட்ட முழுமையான இழப்பீடு

| | |
|---|---|
| a. ஒரு கையின் பெருவிரலும் நான்கு விரல்களும் காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 50% |
| b. ஒரு கையின் நான்கு விரல்கள் காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 40% |
| c. பெருவிரல் (இரண்டு மூட்டுக்கள்) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 25% |
| d. பெருவிரல் (ஒரு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 10% |
| e. சுட்டுவிரல் (மூன்று மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 15% |
| f. சுட்டுவிரல் (இரண்டு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 08% |
| g. சுட்டுவிரல் (ஒரு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 04% |
| h. நடுவிரல் (மூன்று மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 10% |
| i. நடுவிரல் (இரண்டு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 04% |
| j. நடுவிரல் (ஒரு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 02% |
| k. மோதிரவிரல் (மூன்று மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 08% |
| l. மோதிரவிரல் (இரண்டு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 04% |
| m. மோதிரவிரல் (ஒரு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 02% |
| n. சின்ன விரல் (மூன்று மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 08% |
| o. சின்ன விரல் (இரண்டு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 04% |
| p. சின்ன விரல் (ஒரு மூட்டு) காப்புறுதி | செய்யப்பட்ட தொகையில் 02% |

specimen

q. ஒரு காலின் சகல விரல்களும் காப்புறுதி செய்யப்பட்ட தொகையில் 17%
r. கால் பெருவிரல் (இரண்டு மூட்டு) காப்புறுதி செய்யப்பட்ட தொகையில் 05%
s. கால் பெருவிரல் (ஒரு மூட்டு) காப்புறுதி செய்யப்பட்ட தொகையில் 02%
t. காலின் எந்தவொரு விரலும் காப்புறுதி செய்யப்பட்ட தொகையில் 03%

**3.4.2 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்**

காப்புறுதி செய்தவரின் எத்தகைய குறிப்பிடத்தக்க தொழில் மாற்றமும் (14) பதின்நான்கு நாட்களுக்குள் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் கீழான நன்மைகளை பெறுவதற்குரிய இடங்கள் மீள அங்கீகரிக்கப்பட வேண்டும். தேகாரோக்கியம் சம்பந்தமான பிரேரணைகள் மற்றும் பிரகடனங்களில் விபரிக்கப்பட்டதற்கு வேறுபாடான எந்தவொறு தொழிலிலும் இயலாமை ஏற்பட்ட காலத்தில் காப்புறுதி செய்தவர் ஈடுபட்டிருந்தால், அதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு கோரிக்கைக்கும் நிறுவனம் பொறுப்பாளியாகமாட்டாது.

**3.4.3 அறிவித்தலும் கோரிக்கைக்கான சான்றுகளும்**

கோரிக்கைக்கு அடிப்படையாகவுள்ள எந்தவொரு காயம் அல்லது நோய் சம்பந்தமான எழுத்துமூலமான அறிவித்தல் காப்புறுதி செய்தவரின் பிரகடன விபரிப்பில் குறிப்பிடப்பட்ட முன்னைய மற்றும் தற்போதைய வதிவிடத்தின் முகவரியுடன் காயம் அல்லது நோய் ஏற்பட்ட நாளில் இருந்து ஆகக்குறைந்தது அறுபது (60) நாட்களுக்குள் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அருகில் உள்ள கிளை நிலையங்களுக்கு அல்லது அருகில் உள்ள கிளைக்கு வழங்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட அந்தக் காலப்பகுதியினுள் அறிவித்தல் விடுக்கப்படாதவிடத்து அத்தகைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது விடுவதற்குரிய உரிமை நிறுவனத்திற்கு உண்டு. நிறுவனத்திற்கு எத்தகைய செலவையும் ஏற்படுத்தாத வகையில் இயலாமைக்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**3.4.4 நிபந்தனைகள்**

(i) விபத்து காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான இயலாமை கீழ்க்காணும் வகையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.
   (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இந்தக் அனுகூலம் முடிவடையும் திகதிக்கு முன்னர் அல்லது
   (ஆ) ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரின் 70வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், இவற்றில் எது முந்தியதோ அது.

(ii). விபத்து மரண அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும்.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், மேலதிக குறைநிரப்பு அனுகூலங்களும் செயலிழக்கும்.

(iv) கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது,
   (அ) இலாபத்தில் பங்கெடுத்தல்
   (ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்.

(v) இந்த காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அனுகூலங்களிலிருந்து, தங்கியிருப்பவர், அனுகூலம் பெறுபவர் அல்லது வாரிசாக நியமிக்கப்பட்டவருக்கு எவ்வித பயனையும் பெறுவதற்கான உரிமை இல்லை.

(vi). முழுமையான மற்றும் நிரந்தர அங்கவீன காப்பீடு உள்ளடங்கலாக எந்தவொரு காப்புறுதியாளரினாலும் வழங்கப்படும் நட்டஈட்டுத்தொகை என்பது ஐம்பது மில்லியன் ரூபாய்க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (ரூ.50,000,000/-).

(vii) இந்த காப்புறுதியின் கீழ் நட்டஈடு முழுமையான மற்றும் நிரந்தரமான அங்கவீன அனுகூலம் (TPS or TPA) அல்லது கட்டண அனுகூலம் விலக்கப்படல் அனுகூலம் (WP) என்பவற்றின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்தால், எவ்வித அனுகூலங்களும் வழங்கப்படமாட்டாது.

Specimen

### 3.4.5 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய தவிர்ப்புக்கள்

பின்வரும் நிலைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புடைய வகையில் ஆயுள் காப்புறுதிதாரரின் உயிரிழிப்பு சம்பவிக்குமாயின், விஸ்தரிக்கப்பட்ட ஓரளவு நிரந்தரமான இயலாமை அனுகூலத்தின் கீழ் எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை நிறுவனம் கொண்டிருக்காது,

(i) தற்கொலை முயற்சி அல்லது சுயமாக அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மற்றும்/அல்லது

(ii) மதுபானம், போதைப்பொருட்கள் அல்லது மனமயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வஸ்துக்களை மிகையாக உட்கொள்வதால் விளையும் விபத்துகள் அல்லது நோய்கள் மற்றும் போதையுடன் வாகனம் ஓட்டுதல் அடங்காலாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருத்தல் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மட்டத்தை விடவும் கூடுதலான அளவு மதுபானம் இரத்தத்தில் கலந்திருக்கையில் வாகனம் ஓட்டுதல் மற்றும்/அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட விமானச் சேவை நிறுவனத்தில் கட்டணம் செலுத்திய பயணி என்ற நிலைக்கு அப்பால் விமானப் போக்குவரத்து அல்லது விமானச் சாகசத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நிகழக்கூடிய விபத்து, அந்த சமயத்தில் காப்புறுதியாளர் விமானத்தில் எதுவித கடமைகளையோ அங்கு செல்ல வேண்டிய தேவைகளையோ கொண்டிருக்காத நிலை மற்றும/அல்லது

(iv) யுத்தம் மற்றும் யுத்தத்துடன் ஒப்பிடக்கூடிய நிலைமைகள், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு பகையாளியின் செயல், ஆயுத மோதல்கள், (போர்பிரகடனம் செய்து அல்லது செய்யாமல் நிகழும்) போர் போன்ற சம்பவங்கள், சிவில் யுத்தம், கலகம், கிளர்ச்சி, புரட்சி, அபகரிப்பு அல்லது எந்தவொரு பொது அல்லது உள்ளூராட்சி அரசாங்கம் அல்லது அதிகார சபையின் உத்தரவின் பிரகாரத்திலான தேசியமயமாக்கல் எந்தவொரு அரசாங்கத்தையும் வன்முறையை பிரயோகித்து கவிழ்க்க முனையும் நோக்கத்தை கொண்ட எந்தவொரு நிறுவனத்தினதும் பெயரால் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய வகையில் இயங்கக்கூடிய நபரொருவரின் செயல்கள் மற்றும/அல்லது

(v) பாதுகாப்பு படைகளின் அல்லது விமானப் படையின் கடல் அல்லது இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆயுதப் பயன்பாடு தேவைப்படுகின்ற அல்லது பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களை போன்றவர்களை தாக்கும் நோக்கில் இராணுவ அதிகாரிகள் உத்தரவிற்கமைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கேற்றல் மற்றும/அல்லது

(vi) அணுசக்தி அபாயங்கள்: உதாரணமாக அணுசக்தியின் தாக்கங்களுக்கு உட்படுதல் (அணுக்கசிவு, அணுக்கசிவால் விளையக்கூடிய நச்சித்தன்மை, அணுசக்திப் பின்விளைவுகள்) அல்லது எந்தவொரு வகையும் சேர்ந்த அணுக் கழிவு அல்லது இரசாயனக் கலப்பால் விளையும் நச்சுத்தன்மை மற்றும்/அல்லது

(vii) ஸ்கூபா டைவிங், மோட்டார் சைக்கிளோட்டம், பரசூட் விளையாட்டு, மலையேறுதல், மலைகளில் தொங்குதல் அல்லது பாதங்களைப் பயன்படுத்தாத ஓட்டப்பந்தயங்கள், துடுப்பு வலித்தல், மங்கீஜம்ப், வேட்டையாடுதல், ஸ்ரீபல் சேஸிங், போலோ விளையாட்டு, குளிர்கால விளையாட்டுக்கள், ஐஸ் ஹொக்கி போன்றவை உள்ளடக்கிய ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத அபாயகரமான நடவடிக்கைகள் அல்லது கம்பனி எழுத்துமூலம் இணக்கம் கண்டிருந்தாலன்றி தொழில்சார் மட்டத்திலான ஏதேனும் விளையாட்டுக்கள். மற்றும்/அல்லது

(viii) பனிமலைச்சரிவுகள், மண்சரிவுகள், பூகம்பம், வெள்ளம், பூகம்பங்களால் அல்லது எரிமலைக்குமுறல்களால் ஏற்படக்கூடிய சுனாமி அல்லது பேரலைகள், புயல், சூறாவளி, சுழல் காற்று போன்றவை அடங்கலாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத இயற்கைப் பேரிடர்கள் மற்றும்/அல்லது

Specimen

### 3.5 மரணத்தின் மீதான மேலதிக அனுகூலம் (LTB)

#### 3.5.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

மரணத்தின் மீதான மேலதிக அனுகூலம் (டுவுடீ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவில் ஏற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே அவ்வாறான நன்மைகள் ஏற்புடையதாகுமென கருதப்படும்.

கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டுபாடுகளுக்கு உட்பட்ட வகையிலும் ஆயுட்காப்புறுதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கையிலும், இந்த அனுகூலம் சம்பந்தமான கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையிலும், காப்புறுதிப்பத்திரம் முடிவடையும் தினத்திற்கு முன்னர் காப்புறுதி செய்தவரது மரணம் இடம்பெற்றதையடுத்து, முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவின் கீழ் டுவுடீ எனத் தெரிவிக்கப்பட்ட காப்புறுதிப்பணம் வழங்கப்படும்.

#### 3.5.2 நிபந்தனைகள்

(i) ஆயுள் காப்புறுதி செய்தவரின் மரணம் கீழ்காணும் வகையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்:-
- (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இந்தக் அனுகூலம் முடிவடையும் திகதிக்கு முன்னர் அல்லது
- (ஆ) ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரின் 75வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், இவற்றில் எது முந்தியதோ அது.

(ii). விபத்து மரண அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும். இந்த அனுகூலத்தை மீள செயற்படுத்துவதை தவிர்ப்பதற்கான அல்லது மறுப்பதற்கான அதிகாரத்தை நிறுவனம் கொண்டுள்ளது.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், மேலதிக குறைநிரப்பு அனுகூலங்களும் செயலிழக்கும்.

(iv) கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது
- (அ) இலாபத்தில் பங்கெடுத்தல்
- (ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்

**3.5.3 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய விசேட தவிர்ப்புக்கள்** - இல்லை

Specimen

### 3.6 வாழ்க்கைத்துணை காப்புறுதி அனுகூலங்கள் (SPB)

#### 3.6.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவின் கீழ் வாழ்க்கைத்துணை மேலதிக அனுகூலங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே அவ்வாறான நன்மைகள் ஏற்புடையதாகுமென கருதப்படும்.

வாழ்க்கைத்துணையின் மரணம் நிகழும் பட்சத்தில் காப்புறுதி செய்யப்பட்ட முழுத் தொகைக்கும் காப்புறுதிப்பத்திரம் செல்லுபடியானதாக இருந்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நன்மைகள் சம்பந்தமான மாதாந்தக் கட்டுப்பணம் உரிய முறையில் செலுத்தப்பட்டிருந்தால், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் தவிர்ப்புக்களுக்கும் உட்பட்ட வகையில் ஸ்ரீடீ எனக் குறிக்கப்பட்ட காப்புறுதித் தொகையை நிறுவனம் வழங்கும்.

#### 3.6.2 நிபந்தனைகள்

(i) வாழ்க்கைத்துணையின் மரணம் கீழ்காணும் வகையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்:-
 (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இந்தக் அனுகூலம் முடிவடையும் திகதிக்கு முன்னர் அல்லது
 (ஆ) வாழ்க்கைத்துணையின் 75 வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், இவற்றில் எது முந்தியதோ அது.

(ii) வாழ்க்கைத்துணை காப்புறுதி அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும்.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், மேலதிக குறைநிரப்பு அனுகூலங்களும் செயலிழக்கும்.

(iv) கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது
 (அ) இலாபத்தில் பங்கெடுத்தல்
 (ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்

(v) வாழ்க்கைத்துணையின் ஆயுட்காலத்தில் இந்த நன்மைகளைப் பெறவென பயன்பெறுபவர் ஒருவரை சட்டபூர்பமாக நியமிக்க அல்லது இந்த நன்மைகளை மற்றொருதரப்பினருக்கு உரிமை மாற்றவென நியமிக்கும் அதிகாரத்தை கொண்டிருக்கமாட்டார்.

(vi) ஆயுள் காப்பீட்டாளர்க்கு மரணம் எட்படல் இந்த நன்மையின் கீழ் இருக்கும் கப்பீடும் நிருத்தப்படும்

**3.6.3 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய விசேட தவிர்ப்புக்கள்** - இல்லை

Specimen

### 3.7 யூனியன் சுவமக அனுகூலங்கள் (SMB)

#### 3.7.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவில் ஏற்றுக்கொள்ள முடியுமெனத் யூனியன் சுவமக அனுகூலங்கள் தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே அவ்வாறான நன்மைகள் ஏற்புடையதாகுமென கருதப்படும். ஆயுட்காப்புறுதி செய்தவர் அல்லது அயுட்காப்புறுதி செய்தவரின் வாழ்க்கைத்துணை ஆகியோரின் பெயர்கள் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே இந்த அனுகூலத்தை பெற முடியும்.

கிழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையிலும் ஆயுட்காப்புறுதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கையிலும், இந்த அனுகூலம் சம்பந்தமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையிலும், காப்புறுதிப்பத்திரம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் முதற்தடவையாக காப்புறுதி செய்தவர் அல்லது அவரது வாழ்க்கைத்துணை கீழ் குறிப்பிடப்பட்ட எதாவது ஒரு ஆபத்தான நோய் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டு சத்திர சிகிச்சை இடம்பெற்றிருந்ததாக (ANGIOPLASTY தவிர) நிறுவனத்திற்கு திருப்தியளிக்கும் நிரூபணம் சமர்ப்பிக்கப்படுமிடத்து முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவின் கீழ் எனத் தெரிவிக்கபட்ட காப்புறுதிப்பணத்தை நிறுவனம் வழங்கும்.

ANGIOPLASTY சிகிச்சை சம்பந்தப்பட்டமட்டில் சுவமக அனுகூலத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட தொகையின் (50) ஐம்பது சதவீதமான தொகை நபர் ஒருவருக்கு மேற்கொள்ளப்படும். இதனூடாக கோரக்கூடிய ஆகக்கூடிய தொகை ஒரு மில்லியன் (ரூ.1,000,000/-) மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

#### 3.7.2 காத்திருக்கும் காலம்

ANGIOPLASTY சத்திர சிகிச்சைக்கான கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுக்கான காலம்,

I. காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து (90) தொண்ணூறு நாட்கள், அல்லது
II. காப்புறுதியின் திகதி, அல்லது
III. மீளாய்வு/புனரமைக்கப்பட்ட திகதி, அல்லது
IV. காப்புறுதி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்த அனுகூலம் சேர்க்கப்பட்டிருந்தால் அவ்வாறு சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்கு பிந்தியதாக இருத்தல். இதில் எது பிந்தியதோ அது பொருந்தும்.

ANGIOPLASTY சத்திர சிகிச்சைக்கான அனுகூலம் பின்வருவனவற்றிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்கு பின்னர் இடம்பெற்றிருக்க வேண்டும்,

I. காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி, அல்லது
II. காப்புறுதியின் திகதி, அல்லது
III. மீளாய்வு/புனரமைக்கப்பட்ட திகதி
இதில் எது பிந்தியதோ அது பொருந்தும்.

#### 3.7.3 ஆபத்தான நோய்கள் - வரைவிலக்கணம்

I. புற்று நோய் - (Cancer)

கேடு விளைவிக்கும் கட்டியொன்றின் பிரசன்னம் உறுதியான திசுவியல் ஆய்வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கேடு விளைவிக்கும் கலங்களினது கட்டுப்பாடற்ற வளர்ச்சி பரவுகை, திசுக்களின் படையெடுப்பு என்பவற்றினால் குணாதிசயப்படுத்தப்படும். நோய் நிருணயமானது ஒரு விசேட வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விசேடமாக குறித்துறைக்கப்பட்டு விலக்கப்படாவிடத்து குருதிப்புற்று நோய், கேடு விளைவிக்கும் நிணநீர்ச் சுரப்பிப் புற்று நோய் மற்றும் எலும்பு மச்சை புற்று நோய் (myelodysplastic syndrome) என்பன இந்த வரையறையின் கீழ் உள்ளடக்கபடும்.

Specimen

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

- திசுவியல் ஆய்வினால் புற்றுநோயின் ஆரம்பநிலை, பரவலடையாத புற்று நோய் அல்லது இருந்த இடத்திலேயான புற்று நோய் என வகைப்படுத்தப்படும் நோய்கள் ( மார்பக பாற்சுரப்பிகளில் ஏற்படும் இருந்த இடத்திலேயான புற்று நோய் மற்றும் கர்ப்பப்பை வாயில் ஏற்படும் இயல்புப்பிறழ்ந்த வளர்ச்சி (Dysplasia) சிஜஎன் -1, சிஜஎன் -2 மற்றும் சிஜஎன் -3 என்பன உட்பட)
- க்ளீசன் மதிப்பெண் (Gleason Score) I விட அதிகமாக இருப்பதாக அல்லது குறைந்தபட்சம் மருத்துவ டி.என்.எம் வகைப்பாடு T2N0M0 க்கு முன்னேறியதாக வகைப்படுத்தப்படாத எந்தவொரு விறைப்பை புற்றுநோய்

- குறைந்த பட்சம் பினெட் நிலை பீ (Binet Stage B) க்கு முன்னேறியதாக வகைப்படுத்தப்படாத நாள்பட்ட லிம்போசைடிக் லுகேமியா (Chronic lymphocytic leukaemia)

- நோய்த்திசு வேறு திசுக்களுக்கு பரவுதலுக்கான சான்றுகள் இல்லாத அடித்தள திசுக்களின் புற்றுநோய் மற்றும் தோல் புற்றுநோய் மற்றும் கேடு விளைவிக்கும் மெலனோமா நிலை ஐயு (T1aN0M0)

- 1 செ.மீ க்கும் குறைவான விட்டம் கொண்ட மற்றும் திசுவியல் ஆய்வினால் வு1C0ஆ0 என விவரிக்கப்படுகின்ற பாப்பில்லரி கேடயச் சுரப்பி புற்றுநோய் (Papillary thyroid cancer)

- திசுவியல் ஆய்வின்படி வுய என விவரிக்கப்படுகின்ற சிறுநீர்ப்பையின் பாப்பில்லரி மைக்ரோ கார்சினோமா (Papillary micro Carcinoma of Bladder)

- இரத்தச்சிவப்பணு மிகை மற்றும் அத்தியாவசிய தட்டணுப் பெருக்கம் (Polycythemia rubra vera and essential thrombocythemia)

- விசேடதன்மை தீர்மானிக்கப்படாத மோனோக்ளோனல் காமோபதி (Monoclonal gammopathy of undetermined significance)

- ஹெலிகோபாக்டர் ஒழிப்புடன் சிகிச்சையளிக்க முடியுமான இரைப்பை நிணநீர்த் திசுக்களின் லிம்போமா (Gastric MALT Lymphoma)

- ஏ.ஜே.சி.சி புற்றுநோய் நிலை கையேடு, ஏழாவது பதிப்பு (2010) (AJCC Cancer Staging Manual, Seventh Edition) படிஇரைப்பை-குடல்வழி திசுக்களின் ஸ்ட்ரோமல் கட்டியின் (Gastrointestinal stromal tumour (GIST)) நிலை I மற்றும் II

- வேதியியல் மருத்துவம் அல்லது கதிர்வீச்சு சிகிச்சை தேவைப்படாத சருமத்தின் நிணநீர்த் திசுப் புற்று (cutaneous lymphoma)

- திசுவியல் ஆய்வினால் வு1அஉை என விவரிக்கப்படுகின்ற வேதியியல் மருத்துவம் அல்லது கதிர்வீச்சு சிகிச்சை அல்லது மார்பகற்று அறுவை சிகிச்சை தேவைப்படாத நுண்ணியபரவலுடைய மார்பக புற்றுநோய்

- திசுவியல் ஆய்வினால் ஐயு1 என விவரிக்கப்படுகின்ற வேதியியல் மருத்துவம் அல்லது கதிர்வீச்சு சிகிச்சை அல்லது கருப்பை நீக்க அறுவை சிகிச்சை தேவைப்படாத நுண்ணியபரவலுடைய கருப்பை வாய் புற்றுநோய்

## II. இதயத்தசைநார் இறப்பு **(Myocardial Infarction)**

முதன்முறையாக ஏற்படும் இதயத் தசைநார் இறப்பு அல்லது மாரடைப்பு எனப்படுவது, சம்பந்தப்பட்ட பகுதிக்கான போதாத இரத்த விநியோகத்தின் விளைவாக இதயத் தசைநாரின் ஒரு பகுதி இறத்தல் ஆகும். இதயத் தசைநார் இறப்புக்கான நோய் நிர்ணயம் பின்வரும் சகல நியதிகளாலும் சான்றுப் படுத்தப்படும்.

Specimen

i. இதயத் தசைநார் இறப்பு நோய் நிர்ணயத்துடன் ஒத்த பொதுவான மருத்துவ அறிகுறிகளின் வரலாறு (எ.கா. வழக்கமான மார்பு வலி)

ii. புதிய மின்னிருதயமானி (நுஊபு) மாற்றங்கள்.

iii. தசையிறப்பு குறிப்பு நொதியங்களின் உயர்வு. ட்ரொப்போனின் ஐ அல்லது வு அல்லது ஏனைய உயிர் இரசாயன குறிகாட்டிகளின் உயர்வு. பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

i. ஏனைய சடுதியான இதய நோய் குழுக்களின் நோய் அறிகுறி

ii. வேறு எவ்வகையிலுமான இருதய சுவர் நோய்கள்

iii. வெளிப்படையான இஸ்கிமிக் இதய நோய் இல்லாத நிலையில் அல்லது தமனி ஊடாக செய்யப்படும் இதய செயல்முறையை தொடர்ந்து ஏற்படும் ட்ரொப்போனின் ஐ அல்லது வு தசையிறப்பு குறிப்பு நொதியங்களின் உயர்வு.

III. பக்கவாதம் **(Stroke)**

பெருமூளை இரத்த நாளங்களில் நிகழும் நாளங்களின் உள் இடம்பெறும் இரத்த உறைவுஇ இரத்தக்கசிவு (மென்வலையத்தின் கீழ் (subarachnoid) இடம்பெறும் இரத்த இரத்தக்கசிவு உள்ளடங்களாக) அல்லது மூளையின் புறப்பகுதிகளில் உருவாகும் இரத்தக்கட்டிகளினால் ஏற்படும் மூளை திசுக்களின் மரணத்துடன்

i. சடுதியாக ஏற்பட்ட புதிய நரம்பியல் நோய்க்குறிகள்.

ii. மருத்துவ பரிசோதனையில் உறுதிபடுத்தப்பட்ட புதிய புறநிலை நரம்பியல் குறைபாடுகள்.

நரம்பியல் குறைபாடு குறைந்தது 3 மாதங்கள் தொடர்சியாக காணப்பட வேண்டும். இது சம்பந்தமான நோய் நிருணயமானது ஒரு விசேட நரம்பியல் நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், கதிரியக்க காட்சிபடங்களின் கண்டுபிடிப்புகளால் அத்தாட்சிபடுத்தப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட வறைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

i. இடைநிலை இஸ்கிமிக் தாக்குதல் (TIA) மற்றும் நீடித்த மீளக்கூடிய இஸ்கிமிக் நரம்பியல் குறைபாடுகள். (PRIND)

ii. மூளை திசு அல்லது இரத்த நாளங்களுக்கு ஏற்படும் அதிர்ச்சி காயம்

iii. பொது ஹைபோக்ஸியா (General Hypoxia), நோய்த் தொற்று, அழற்சி நோய், ஒற்றைத் தலைவலி அல்லது மருத்துவ தலையீடு காரணமாக நரம்பியல் குறைபாடுகள்.

iv. தெளிவாக தொடர்புடைய மருத்துவ அறிகுறிகள் இல்லாத தற்செயலான கதிரியக்க காட்சிபடங்களின் கண்டுபிடிப்புகள் (CT- அல்லது MRI- ஸ்கேன்) (வெளிப்படாத பக்கவாதம்)

IV. முடியுருநாடிச் சத்திரசிகிச்சை **(Coronary Artery Surgery)**

குறுகியுள்ள அல்லது தடைப்பட்டுள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இருதய தமனிகளை சரிசெய்வதற்காக இருதய தமனி மாற்றுவழி திசு பொருத்தல் (CABG) மூலம் மார்பெலும்பினை வெட்டி மேற்கொள்ளப்படுகின்ற திறந்த மார்பு சத்திரசிகிச்சைக்கு அல்லது சாவிதுளையிட்டு குறைந்தபட்ச ஊடறுத்தல் முறையினூடாக செய்யப்படும் முடியுருநாடிச் சத்திரசிகிச்சைக்கு மெய்யாகவே உட்படுதலாகும். சத்திரசிகிச்சையானது அவசியமாக இருந்தமை இருதய இயக்கப்படம் (ஊழசழயெசல யுபெழைபசயிால) மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், அது மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஒரு விசேட வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்படவும் வேண்டும்.



Specimen

பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

i. ணஇருதய ஒதமனியின் தடைநீக்கம் (angioplasty) அல்லது வேறேதும் உள்-தமனி செயன்முறைகள்

V. சிறுநீரக செயலிழப்பு **(Renal Failure)**

நாட்பட்ட மறுசீறமைக்கபட முடியாத இரு சிறுநீரகங்களின செயலிழப்பு. இதன் காரணமாக இருதயத்திற்குரிய அல்லது இரட்டைச் சீரச்சவ்விற்குரிய கிரமமான குருதிச் சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படுதல் அல்லது சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குருதிச் சுத்திகரிப்பானது மருத்துவ ரீதியாக அவசியப்பட்டு ஒரு விசேட சிறுநீரக வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

i. தற்காலிக குருதிச் சுத்திகரிப்புடனான சடுதியனான மறுசீறமைக்கபட கூடிய சிறுநீரக செயலிழப்பு

VI. பிரதான உறுப்புமாற்று சத்திரசிகிச்சை (Major Organ Transplant)

பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றினை பெற்றுக்கொள்கின்றவர் என்ற வகையில் அவற்றைப் ஓரினத்திசு ஒட்டு (Allograft) அல்லது தன்னொட்டு (isograft) முறையில் பொருத்துவதற்காக சத்திரசிகிச்சைக்கு உட்படுவதாகும்.

- இருதயம்
- சிறுநீரகம்
- ஈரல், (ஈரல் பிளவு மற்றும் உயிருள்ள நன்கொடையாளர் ஈரல் மாற்று அறுவை சிகிச்சை உட்பட)
- நுரையீரல் (வாழும் நன்கொடையாளர் மடல் மாற்று அல்லது ஒற்றை நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை உட்பட)
- எலும்புமச்சை (மொத்த எலும்பு மஜ்ஜை நீக்குதலுக்கு முந்தைய அலோஜெனிக் ஹீமாடோபாய்டிக் ஸ்டெம் செல் மாற்று)
- சிறுகுடல்
- கணையம்

பகுதி அல்லது முழு முகம், கை, கை மற்றும் கால் மாற்று அறுவை சிகிச்சை (இணைந்த திசு ஓரினத்திசு ஒட்டு மாற்று அறுவை சிகிச்சை (composite tissue allograft transplantation)) இந்த வரையறையின் கீழ் உள்ளடக்கபடும். மாற்று சிகிச்சைக்கு வழிவகுக்கும் நிலை ஒரு வேறு எந்த வழியிலும் சிகிச்சையளிக்க முடியாதது என விசேட நிபுணரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

i. பிற உறுப்புகள், உடல் பாகங்கள் அல்லது திசுக்களின் மாற்று (விழிவெண்படலம் மற்றும் தோல் உட்பட)
ii. பிற உயிரணுக்களின் இடமாற்றம் (ஐலட் செல்கள் மற்றும் ஸ்டெம் செல்கள் உட்பட ஹெமா ட்டோபாய்டிக் தவிர)

VII. பக்கவாதம் **(Paralysis)**

முள்ளந்தணடு அல்லது மூளையின் காயம் அல்லது நோயின் விளைவாக எந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூட்டுகளின் தசை செயல்பாட்டின் மீளப்பெற முடியாத முழுமையான இழப்பு. மூட்டு என்பது முழுமையான கை அல்லது முழுமையான கால் என வரையறுக்கப்படுகிறது. பக்கவாதம் 3 மாதங்களுக்கும் மேலாக இருக்க வேண்டும் என்பதுடன் விசேட நரம்பியல் வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டு மருத்துல மற்றும் நோய் கண்டறியும் கண்டுபிடிப்புகளால் அத்தாட்சிபடுத்தப்பட வேண்டும்.

Specimen

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- தனக்கு தானே ஏற்படுத்திகொண்ட காயங்கள் அல்லது உளவியல் கோளாறுகள் காரணமாக ஏற்பட்ட பக்கவாதம்.
- கிலெய்ன் பார்ரே (புரடைடயனை- டீயசசந- ளுலனெசழஅந) நோய் தொகுதி மூலம் ஏற்பட்ட பக்கவாதம்
- காலத்துக்குகாலம் அல்லது பரம்பரை காரணங்களால் ஏற்படும் பக்கவாதம்

## VIII. குருட்டுத்தன்மை (Blindness)

நோய் அல்லது காயத்தின் விளைவாக ஏற்படும் ஒளிவிலகல் திருத்தம் (Refractive correction), மருந்து அல்லது அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்ய முடியாத இரு கண்களின் முழுமையான பார்வை இழப்பு. முழுமையான பார்வை இழப்பானது சிறப்பான திருத்தத்திற்குப் பிறகு சிறந்த கண்ணில் 3/60 அல்லது அதற்கும் குறைவான பார்வைக் கூர்மை அல்லது (தசம குறியீட்டில் 0.05 அல்லது அதற்கும் குறைவான) அல்லது சிறப்பான திருத்தத்திற்குப் பிறகு சிறந்த கண்ணில் 10 பாகை ($10^o$) விட்டம் கொண்ட காட்சி புழத்தினால் அத்தாட்சிபடுத்தப்பட வேண்டும். நோயறிதலானது ஒரு ஆலோசகர் கண் மருத்துவர் உறுதிப்படுத்த வேண்டும்

## IX. இருதய வால்வுச் சத்திர சிகிச்சை (Heart Valve Surgery)

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுள்ள இதய வால்வுகளை மாற்ற அல்லது சரிசெய்ய அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவது. மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன உள்ளடக்கபடும்.

- மார்பெலும்பினை குறுக்காக வெட்டி மார்பினை திறந்து அல்லது பகுதியளவாக மார்பினை திறந்து அல்லது மார்பின் பக்கவாட்டு பகுதியினூடாக செய்யப்படும் இதய வால்வுகளை மாற்ற அல்லது சீர்செய்தலுக்கான சத்திர சிகிச்சை
- ரோஸ்-நடைமுறை (Ross-Procedure)
- வடிகுழாயுடான வால்வுமாற்றீடு
- டிரான்ஸ்கேத்தீட்டர் பெருந்தமனி வால்வு பொருத்துகை (TAVI)

அறுவைசிகிச்சை மருத்துவ ரீதியாக அவசியமானது என ஒரு ஆலோசக இருதயநோய் நிபுணர் அல்லது இருதய அறுவை சிகிச்சை நிபுணரால் தீர்மானிக்கப்பட்டு எக்கோ கார்டியோகிராம் அல்லது இருதய வடிகுழாய் கண்டுபிடிப்புகளால் ஆதரிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

i. டிரான்ஸ்கேத்தீட்டர் மிட்ரல் வால்வு செதுக்கல்

## X. பெருநாடியிலான நோயொன்றிற்கான சத்திர சிகிச்சை (Surgery for a Disease of the Aorta)

குறுகியுள்ள அல்லது தடைப்பட்டுள்ள அல்லது நோய்வாய்ப்பட்ட அல்லது பிரிவுபட்ட பெருநாடியினை சீர்செய்வதற்கானவொரு சத்திர சிகிச்சைக்கு மெய்யாக உட்படுதல். குறைந்தபட்ச ஊடுருவலுடன் இரத்தநாளங்களுக்கு ஊடாக செய்யப்படும் நடைமுறைகள் இந்த வரையறையின் கீழ் உள்ளடக்கபடும்.
அறுவைசிகிச்சை மருத்துவ ரீதியாக அவசியமானது என ஒரு ஆலோசக அறுவை சிகிச்சை நிபுணரால் தீர்மானிக்கப்பட்டு கதிரியக்க காட்சிபடங்களின் கண்டுபிடிப்புகளால் அத்தாட்சிபடுத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன

• மார்புக்கூடுசார் அல்லது அடிவயிற்று பெருநாடியின் எந்தவொரு கிளைகளுக்கும் அறுவை சிகிச்சை (ஆர்டோஃ பெமரல் அல்லது ஆர்ட்டோலியாக் (aortofemoral or aortoiliac) மாற்றுவழி பொருத்துகை உட்பட)

• பரம்பரையாக வரும் இணைப்பு திசு கோளாறுகள் (எ.கா. மார்பன் நோய்க்குறி, எஹ்லர்ஸ்-டான்லோஸ் நோய்க்குறி (Marfan syndrome, Ehlers Danlos syndrome)) தொடர்பான பெருநாடியின் அறுவை சிகிச்சை

• பெருநாடியின் ஏற்படும் விபத்துக்காயம் தொடர்பான அறுவை சிகிச்சை

Specimen

XI. பல்லின திசுக்கள் இறுகிப்போதல் (Multiple Sclerosis)

பின்வரும் நோய்நிருணய பிரமாணங்களால் உறுதி செய்யப்பட்டு ஒரு விசேட நரம்பியல் வைத்திய நிபுணரால் நோய்நிர்ணயமானது செய்யப்பட்ட பல்லின திசுக்கள் இறுகிப்போதல் நோயின் ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்.

- குறைந்தது 6 மாதங்கள் தொடர்ச்சியான காலத்திற்கு நீடித்திருக்கின்ற இயக்க அல்லது உணர்ச்சி செயல்பாட்டின் தற்போதைய மருத்துவ குறைபாடு,

- மூளையில் அல்லது முள்ளந்தண்டில் ஆக குறைந்த இரண்டு சிதைவுகளை காட்டுகின்ற நரம்புக் காப்புறையாக்க அழிவின் காந்த ஒத்திசைவு உருவரைவு (MRI)

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- பல்லின திசுக்கள் இறுகிப்போதல் நோய் என நிர்ணயம் செய்யப்படாத ஆனால் நரம்பியல் அல்லது கதிரியக்க ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட சாத்தியமான பல்லின திசுக்கள் இறுகிப்போதல் நோய் போன்று தோற்றமளிக்கும் நோய்.

- தனிமைப்படுத்தப்பட்ட விழி நரம்பு அழற்சி (Optic Neuritis) மற்றும் நரம்பு தண்டுவட விழி அழற்சி (neuromyelitis optica)

XII. இருதய நாள விஸ்தரிப்பு (Angioplasty - PTCA)

இருதய நாள விஸ்தரிப்பு ஆனது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதான முடியுறு நாளங்களில் ஏற்படும் குறைந்தபட்சம் 50 வீத தடையினை அல்லது ஒடுங்குதலை சரி செய்வதற்காக தோல்வழி இருதய நாள ஊடுருவல் (Percutaneous coronary intervention) முறைமை ஊடாக உறைகுழாய் (Stent) பாவனையுடன் அல்லது உறைகுழாய் பாவனையற்ற ஊதற்பை (Balloon Angioplasty) இருதய நாள விஸ்தரிப்பு ஆகும்.

நாள ஊடுருவல் மருத்துவ ரீதியாக அவசியமானது என ஒரு இருதயநோய் நிபுணரால் தீர்மானிக்கப் பட்டு இதயச் சாய நிழற்பட (CAG) கண்டுபிடிப்புகளால் அத்தாட்சி படுத்தப்பட வேண்டும்

இங்கு முடியுரு நாடி என குறிப்பிடபடுவது, இடது பிரதான முடியுரு நாடி, இடது முன்புற இறங்கு முடியுரு நாடி, இடது சுற்றுவளை முடியுரு நாடி, வலது முடியுரு நாடி ஆகியவற்றையாகும்

உறைகுழாய் செருகலில்லாமல் அல்லது பரிசோதனைக்காக செய்யப்படும் இதய இரத்தக்குழாய்வரைவி (Angiography) நடைமுறைகள் விலக்கப்பட்டுள்ளன.

XIII. அபல்லிக் சின்ட்ரோம் **(Apallic Syndrome)**

சுவாசம் மற்றும் இருதய செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் பிரதான தண்டு பாதிக்கப்படாது இருக்கையில் பெருமூளை அரைக்கோளங்களின் செயலிழப்பின் விளைவான உணர்வற்ற நிலை மற்றும் விழிப்புணர்வு இல்லாத ஒரு தாவர நிலை. திட்டவட்டமான நோயறிதல் பின்வரும் எல்லாவற்றாலும் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

- சுய மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய முழுமையான அறியாமை

- முழுமைமயாக மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள இயலாமை

- வெளிப்புற தூண்டுதல்களுக்கு திடமான அல்லது மறுஉருவாக்கக்கூடிய நடத்தை துலங்கள்களுக்கான எந்த சாட்சியங்களும் இல்லாமை

- மூளை தண்டினது செயல்பாடுகளின் துலங்களற்ற தன்மை

- பொருத்தமான நரம்பியல் அல்லது நரம்பியல் உளவியல் சோதனைகள் அல்லது இமேஜிங்

Specimen

நடைமுறைகளுடன் சிகிச்சையளிக்கக்கூடிய பிற நரம்பியல் அல்லது மனநல கோளாறுகளுக்குள் உள்வாங்கப்படாமை.

நோய் நிருணயமானது ஒரு விசேட நரம்பியல் வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டியதுடன் இந்த நிலைமை சிகிச்சைகளுக்கான பெறுபேறுகளில் முன்னேற்றமற்று குறைந்தது ஒரு மாதம் நிலவியுள்ளமை மருத்துவ ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

XIV. தீவிரமில்லாத மூளைக் கழலை **(Benign Brain Tumour)**

இது மூளை குழியில் அமைந்துள்ள மூளை, மூளை உறை, மூளை நரம்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள திசுக்களில் புற்றுநோய் அல்லாத மூளைக் கட்டீயின் வளர்ச்சியின் திட்டவட்டமான நோய் நிர்ணயம், கட்டி ஆகக்குறைந்தது பின்வருவனவற்றில் ஒன்றை கொண்டு சிகிச்சையளிக்கப்பட வேண்டும்.

- முழுமையான அல்லது முழுமையற்ற அறுவை சிகிச்சை மூலமான நீக்கம்
- ஸ்டீரியோடாக்டிக் கதிரியக்க அறுவை சிகிச்சை
- வெளிப்புற கற்றை கதிர்வீச்சு.

மருத்துவ காரணங்களால் சிகிச்சை தெறிவுகள் எதுவும் சாத்தியமில்லை என்றால், கட்டி ஒரு தொடர்ச்சியான நரம்பியல் குறைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும், இது கண்டறியப்பட்ட தேதியைத் தொடர்ந்து குறைந்தது 3 மாதங்களுக்கு ஆவணப்படுத்தப்பட வேண்டும். நோய் நிர்ணயம் ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணர் அல்லது நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரினால் உறுதிப்படுத்தபட்டு மற்றும் இமேஜிங் கண்டுபிடிப்புகளால் ஆதரிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- ஏதேனும் நீர்க்கட்டி, (Cyst) புவளர்ச்சிறுமணிகள், (Granuloma) இரத்தக்கட்டிகள் (ர்நயஅயவழஅய) அல்லது மூளையின் நரம்புகள், நாடிகள், சிரைகள் ஆகியவற்றில் வடிவக்கேடான அசாதாரண வளர்ச்சி,
- பிடியுடரி சுரப்பி கட்டி

XV. நாட்பட்ட ஈரல் நோய் **(Chronic Liver Diseases)**

ஆகக் குறைந்தது சைல்ட்-பக் (சைல்ட்-பக் வகுப்பு பி அல்லது சி). மதிப்பெண் 7 புள்ளிகளை காட்டுகின்ற கடுமையான ஈரல் நோயின் திட்டவட்டமான நோய் நிர்ணயம், (ஊாடைன-ீபா ஊடயளள). மதிப்பெண் பின்வரும் அனைத்து மாறிகள் மூலம் கணக்கிடப்பட வேண்டும்

- மொத்த பித்தச்செம்பசை அளவு (டீடைசைரடிடை)
- மொத்த ஆல்புமின் புரதவகை அளவு (யுடடிரஅடை)
- வயிற்றுநீர்க்கோர்வையின் தீவிரம் (யுளஉவைநள)
- சர்வதேச இயல்பாக்கப்பட்ட விகிதத்தின் (ஐசுே)
- ஹெபடிக் என்சிபலோபதி

Specimen

இங்கு நோய் நிர்ணயமானது ஒரு விசேட வயிறு மற்றும் ஈரல் தொடர்பான வைத்திய நிபுணரால் மேற்கொள்ளப்பட்டு இமேஜிங் கண்டுபிடிப்புகளால் ஆதரிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.
மதுபானம் அல்லது போதைப்பொருள் துர்ப்பாவனை காரணமாக ஏற்படுகின்ற கடுமையான ஈரல் நோய் (இரத்த குழாய் ஊடான ஔடத பயன்பாட்டினால் ஏற்பட்ட ஹெபடைடிஸ் பி அல்லது சி நோய்த்தொற்றுகள் உட்பட)

XVI. நாட்பட்ட நுரையீரல் நோய் (Chronic Lung Diseases)

பின்வரும் நோய்நிருணய பிரமாணங்களால் உறுதி செய்யப்பட்ட நாள்பட்ட சுவாசக் கோளாறினை தோற்றுவிக்கும் கடுமையான நுரையீரல் நோயின் ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்

- 1 மாத இடைவெளியில் குறைந்தது 2 சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட குநுஏ1 (ஒரு நொடியில் கட்டாயமாக வெளியேற்றும் அளவு) அளவு 40 வீதம் குறைவாக இருப்பது
- குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு நாளைக்கு குறைந்தது 16 மணிநேரம் உயிர்வாயு வழங்கல் சிகிச்சையுடன் கூடிய சிகிச்சை
- ஆக்ஸிஜனின் நிர்வாகம் இல்லாமல் அளவிடப்படும் தமனி இரத்த வாயு பகுப்பாய்வில் நாளத்தின் ஒட்சிசன் அழுத்தம் (PaO2) 55அஅர்ப (7.3 kPa) ஐயும் விடக் குறைவாக நிலையான வீழ்ச்சியைக் காட்டுதல்.

நோய் நிர்ணயமானது ஒரு விசேட வைத்திய நிபுணரினால் உறுதிப்படுத்த பட வேண்டும்

XVII. உணர்விழந்த முழு மயக்க நிலை **(Coma)**

வெளிப்புறத் துண்டல்களுக்கோ அல்லது உள்ளகத் தேவைகளுக்கோ, பிரதிப்பலிப்போ அல்லது துலங்கலோ அற்ற, உணர்விழந்த முழு மயக்க நிலையின் ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம், இது

- குறைத்தது 96 மணிநேரங்களுக்கு கிளாஸ்கோ கோமா அளவில் குறைந்தது 8 அல்லது அதற்கும் குறைவான மதிப்பெண் பெற வேண்டும்.

- உயிர் ஆதார முறைமைகளின் பயன்பாடு தேவைப்பட வேண்டும்.

- குறைந்தது உணர்விழந்த முழு மயக்க நிலை தொடங்கிய 30 நாட்களுக்குப் பிறகு மதிப்பிடப்பட தொடர்ச்சியான நரம்பியல் குறைபாடுகளை தோற்றுவிக்க வேண்டும்.

நோய்நிர்ணயமானது ஒரு விசேட நரம்பியல் வைத்திய நிபுணரால் செய்யப்பட வேண்டும்

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- மருத்துவ ரீதியாக தேவைபடுத்தப்பட்ட மயக்க நிலை.

- ஏதேனும் தனக்கு தானே ஏற்படுத்திகொண்ட காயங்கள் மது அல்லது போதைப் பொருட்பாவணை என்பவற்றின் விளைவான மயக்கநிலை

XVIII. கேட்டல் புலன் இழப்பு / செவிட்டு தன்மை **(Loss of HearingÆ Deafness)**

நோய் அல்லது விபத்து காரணமாக இரு செவிகளிலுமான முற்றுமுழுதான, நிரந்தரமான மீளப்பெற முடியாத கேள் திறன் அற்றுப்போதலின் திட்டவட்டமான நோய் நிர்ணயம். நோய் நிர்ணயமானது ஒரு ஆலோசகர் செவி, மூக்கு தொண்டை நோய் நிபுணரினால் உறுதிப்படுத்தபட்டு தூய தொனி செவியுணர்வு வரைபடத்தில் சராசரி செவித்திறனாது சிறந்த காதில் 500, 1000 மற்றும் 2000 ஹெர்ட்ஸில் 90 னடி ஐ விட அதிகமாக காணப்படும் கண்டுபிடிப்புகளால் அத்தாட்சிபடுத்தப்பட வேண்டும்.

Specimen

XIX. திடீர் நச்சுயிரிக் ஈரல் அழற்சி **(Fulminant Viral Hepatitis)**

பின்வரும் நோய்நிருணய பிரமாணங்களால் உறுதி செய்யப்பட்ட திடீர் நச்சுயிரிக் ஈரல் அழற்சி நோயின் ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்

- திடீர் நச்சுயிரிக் ஈரல் அழற்சி நோயின் வழக்கமான ஊனீரியல் தொடர் கோவை (Serological Course)
- ஹெபடிக் என்சிபலோபதி நோயின் வளர்ச்சி
- ஈரல் அளவில் சுருங்குதல்
- ஆதிகரித்த பித்தச்செம்பசை அளவு (Bilirubin)
- சர்வதேச இயல்பாக்கப்பட்ட விகிதத்தின் (INR) 1.5 க்கும் அதிகமான குருதி திறள் பிறழ்வு (Coagulopathy)
- அறிகுறிகள் தோன்றிய 7 நாட்களுக்குள் ஈரல் செயலிழப்பின் தோற்றம்
- ஏற்கனவே காணப்படாத ஈரல் நோயின் வரலாறு

இங்கு நோய் நிர்ணயமானது ஒரு விசேட வயிறு மற்றும் ஈரல் தொடர்பான வைத்திய நிபுணரால் மேற்கொள்ளப்பட வேண்டும்

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

• திடீர் நச்சுயிரிக் ஈரல் அழற்சி நோயின் பிற வைரஸ் அல்லாத காரணங்கள் (பாராசிட்டமால் அல்லது அஃப்லாடாக்சின் நஞ்சாதல் உட்பட)

• நாளத்துக்கு ஊடான ஔடத பயன்பாட்டின் விளைவான திடீர் நச்சுயிரிக் ஈரல் அழற்சி

XX. பேச்சு இழப்பு **(Loss of Speech)**

நோய் அல்லது பௌதீகரீதியான காயங்களின் பாதிப்பினால் ஏற்படும் முற்றுமுழுதான, மீளப்பெற முடியாத பேசும் ஆற்றலின் இழப்பின் திட்டவட்டமான நோய் நிர்ணயம். இக்குறைபாடு ஆகக் குறைத்தது தொடர்ச்சியாக 6 மாத காலத்திற்கு காணப்பட வேண்டும். நோய் நிர்ணயமானது ஒரு ஆலோசகர் செவி, மூக்கு தொண்டை நோய் நிபுணரினால் உறுதிப்படுத்தப் பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

உளவியல் சீர்குழைவு காரணமான பேசும் ஆற்றலின் இழப்பு

XXI. பாரதூரமான தீக்காயங்கள் **(Major Burns)**

தோலின் முழு அளவு ஆழமான திசுக்களுக்கு கீழான திசுக்களையும் அழிப்பதை உள்ளடக்கிய தீக்காயங்கள் (மூன்றாம் நிலை தீக்காயங்கள்) இது “தி ரூல் ஆஃப் நைன்ஸ்” (The rule of nines) அல்லது “லண்ட் அண்ட் ப்ரோடர்” விளக்கப்படம் (Lund and Browder Chart) ஆகியவற்றால் அளவிடப்படும் போது உடல் மேற்பரப்பில் குறைந்தது 20 வீதத்தை உள்ளடக்கி இருக்க வேண்டும்

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

• தனக்கு தானே ஏற்படுத்திகொண்ட மூன்றாம் நிலை தீக்காயங்கள்

• ஏதேனும் முதலாம் அல்லது இரண்டாம் நிலை தீக்காயங்கள்

Specimen

XXII. இயக்க நரம்புக்கல நோய் **(Motor Neurone Disease)**

பின்வருவனவற்றில் ஏதேனுமொரு இயக்க நரம்புக்கல நோயினது ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்.

- சையூட்டமற்ற பக்க மரப்பு நோய் (Amyotrophic lateral sclerosis - ALS or Lou Gehrig's disease)
- ஆரம்பநிலை பக்க மரப்பு நோய் (Primary lateral sclerosis (PLS))
- தீவிரமடையும் தசையிழைத் தேய்வு (Progressive muscular atrophy (PMA))
- தீவிரமடையம் குமிழ் புடைப்புப் பக்கவாதம் (Progressive bulbar palsy (PBP))

இந்த நோய் காரணமாக தினசரி வாழ்வின் 6 செயல்பாடுகளில் குறைந்தது 3 செயல்பாடுகளையாவது மீட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பின்றி குறைந்தது 3 மாதங்களாவது தொடர்ச்சியாக செய்ய இயலாத நிலையினை விளைவிக்க வேண்டும்

அன்றாட வாழ்தலின் நடவடிக்கைகளாவன:

• கழுவுதல் - குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயில் கழுவும் திறன் (குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயிற்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவது உட்பட) அல்லது பிற வழிகளில் திருப்திகரமாக கழுவும் திறன்.

• ஆடையணிவது மற்றும் ஆடைகளை அகற்றுவது - அனைத்து ஆடைகளையும் அணிந்துகொள்வது, மற்றும் தேவைப்பட்டால், ஏதேனும் பிணைப்புகள், செயற்கை கால்கள் அல்லது பிற சிகிச்சை சாதனங்களை கழற்றுவது, பாதுகாப்பது மற்றும் அவிழ்ப்பது

• உணவருந்துதல் - உணவு தயாரிக்கப்பட்டு கிடைக்கும்போது உணவருந்தும் திறன்.

• தனிப்பட்ட சுகாதாரத்தை பராமரித்தல் - கழிப்பறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது குடல் மற்றும் சிறுநீர்ப்பை செயல்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் தனிப்பட்ட சுகாதாரத்தை திருப்திகரமாக பராமரிக்கும் திறன்.

• அறைகளுக்கு இடையில் செல்வது - சமனான தரையில் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்லும் திறன்.

• படுக்கைக்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுதல் - படுக்கையில் இருந்து ஒரு நேரான நாற்காலி அல்லது சக்கர நாற்காலியில் இறங்கி மீண்டும் படுக்கைக்கு திரும்பும் திறன்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

• ஓன்றுக்கு மேற்பட்ட நரம்புகளின் இயக்க நரம்புமண்டல நோய் மற்றும் உடல் தசையழற்சி (ஆரடவகைழஉயட அழவழச நெரசழியவால (MMN) யனெ தைெடரளழைெ டிழனல அலழளவைளை)

• இளம்பிள்ளை வாதத்துக்கு பின்னரான நோய்குழுக்கள் (Post-polio syndrome)

• முதுகெலும்பு தசைநார் சிதைவு. (ளிைெயட அரளஉரடயச யவசழிால)

XXIII. தசை இழைய வளர்ச்சிக்குறைவு **(Muscular Dystrophy)**

பின்வருவனவற்றில் ஏதேனுமொரு தசை இழைய வளர்ச்சிக்குறைவு நோயினது ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்.

• டுஹென தசை இழைய வளர்ச்சிக்குறைவு னுரஉாநநெ ஆரளஉரடயச னுலளவசழிால (DMD)

• பெக்கர் தசை இழைய வளர்ச்சிக்குறைவு (டீநஉமநச ஆரளஉரடயச னுலளவசழிால (BMD)

Specimen

- எமெரி-ட்ரீ/பஸ் தசை இழைய வளர்ச்சிக்குழைவு (Emery-Dreifuss Muscular Dystrophy (EDMD))
- லிம்ப்-கர்டில் தசை இழைய வளர்ச்சிக்குழைவு (Limb-Girdle Muscular Dystrophy (LGMD))
- பேசியோஸ்காபுலோஹுமரல் தசை இழைய வளர்ச்சிக்குழைவு (Facioscapulohumeral Muscular Dystrophy (FSHD))
- மயோடோனிக் டிஸ்ட்ரோபி வகை 1 (எம்எம்டி அல்லது ஸ்டீனெர்ட் நோய்) (Myotonic Dystrophy Type 1 (MMD or Steinert's Disease))
- ஓகுலோபார்னீஜியல் தசை இழைய வளர்ச்சிக்குழைவு (Oculopharyngeal Muscular Dystrophy (OPMD))

இந்த நோய் காரணமாக தினசரி வாழ்வின் 6 செயல்பாடுகளில் குறைந்தது 3 செயல்பாடுகளையாவது மீட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பின்றி குறைந்தது 3 மாதங்களாவது தொடர்ச்சியாக செய்ய இயலாத நிலையினை விளைவிக்க வேண்டும்

அன்றாட வாழ்தலின் நடவடிக்கைகளாவன:

- கழுவுதல் - குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயில் கழுவும் திறன் (குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயிற்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவது உட்பட) அல்லது பிற வழிகளில் திருப்திகரமாக கழுவும் திறன்.
- ஆடையணிவது மற்றும் ஆடைகளை அகற்றுவது, அனைத்து ஆடைகளையும் அணிந்துகொள்வது, மற்றும் தேவைப்பட்டால், ஏதேனும் பிணைப்புகள், செயற்கை கால்கள் அல்லது பிற சிகிச்சை சாதனங்களை கழற்றுவது, பாதுகாப்பது மற்றும் அவிழ்ப்பது
- உணவருந்துதல் - உணவு தயாரிக்கப்பட்டு கிடைக்கும்போது உணவருந்தும் திறன்.
- தனிப்பட்ட சுகாதாரத்தை பராமரித்தல் - கழிப்பறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது குடல் மற்றும் சிறுநீர்ப்பை செயல்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் தனிப்பட்ட சுகாதாரத்தை திருப்திகரமாக பராமரிக்கும் திறன்.
- அறைகளுக்கு இடையில் செல்வது - சமனான தரையில் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்லும் திறன்.
- படுக்கைக்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுதல் - படுக்கையில் இருந்து ஒரு நேரான நாற்காலி அல்லது சக்கர நாற்காலியில் இறங்கி மீண்டும் படுக்கைக்கு திரும்பும் திறன்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

மயோடோனிக் தசை இழைய வளர்ச்சிக்குழைவு மற்றும் மயோட்டோனியாவின் பிற வடிவங்கள்

XXIV. நுரையீரல் நாள இரத்த உயரழுத்தம் (Pulmonary Arterial Hypertension)

பின்வரும் நோய்நிருணய பிரமாணங்களால் உறுதி செய்யப்பட்ட நுரையீரல் நாள இரத்த உயரழுத்த்தின் ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்

- 3 மாத காலத்திற்கான சாதாரண செயல்பாட்டைக் காட்டிலும் குறைவான செயற்பாடுகளின் போது கூட ஏற்படுகின்ற சோர்வு, படபடப்பு, மூச்சுத் திணறல் அல்லது மார்பு வலி போன்றவற்றால் ஏற்படும் உடல் செயல்பாடுகளின் வரம்பு (நியூயார்க் ஹார்ட் அசோசியேடின் வகைப்பாட்டின் III அல்லது ஐஏ வகுப்பு)

Specimen

- ஓய்வாக இருக்கின்ற நிலையில் வலது இதய வடிகுழாய் மூலம் அளவிடப்படும் 25 அஅர்ப அளவை விட கூடுதலாக காணப்படுகின்ற நுரையீரல் தமனி அழுத்தம்

நோய் நிர்ணயமானது ஒரு ஆலோசக இருதயநோய் நிபுணர் அல்லது நுரையீரல் நிபுணரினால் உறுதிப்படுத்த பட வேண்டும் மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- நுரையீரல், இதயம் அல்லது உடல் மண்டல நோயின் (ளலளவநஅளை னுளைநயளநள) இரண்டாம் நிலை நுரையீரல் உயர் இரத்த அழுத்தம்
- நாள்பட்ட இரத்தக்கட்டி அடைப்பு (Thromboembolic) நுரையீரல் உயர் இரத்த அழுத்தம்
- போதை அல்லது ஔடதங்களால் தூண்டப்பட்ட நுரையீரல் நாள உயர் இரத்த அழுத்தம்

XXV. அல்சீமரின் நோய் (65 வயதுக்கு முன்னர்) **(Alzhelmer's Disease-Before 65 years of Age)**

பின்வரும் எல்லாவற்றாலும் சான்றுப்படுத்தப்பட அல்சீமரின் நோயினது ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்.

- அறிவுசார் செயற்பாடுகளின் இழப்புடன் சம்பந்தப்பட்ட நினைவாற்றல் மற்றும் நிர்வாக செயல்பாடுகளின் குறைபாடு (வரிசைப்படுத்துதல், ஒழுங்கமைத்தல், சுருக்கம் மற்றும் திட்டமிடல்) இதன் விளைவாக மன மற்றும் சமூக செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க இழப்பு ஏற்படுதல்
- ஆளுமை மாற்றம்
- அறிவுசார் செயல்பாடுகளின் தொடர்ச்சியான இழப்பின் படிப்படியான வளர்ச்சி.
- இடையூறு அற்ற உணர்வு நிலை
- வழக்கமான நரம்பியல் மற்றும் நரம்பியல் கண்டுபிடிப்புகள் (எ.கா. சி.டி ஸ்கேன்)

நோய்க்கு நிலையான மேற்பார்வை தேவைப்பட வேண்டும் (தினமும் 24 மணிநேரம்) (65 வயதிற்கு முன்). நோயறிதல் மற்றும் மேற்பார்வையின் அவசியத்தை ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணர் உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

மூளை அல்லது மண்டல கோளாறுகள் அல்லது மனநல நிலைமைகள் காரணமாக நினைவிழப்பின் (டிமென்யா - னுநஅநவெயை) பிற வடிவங்கள்

XXVI. தசையூட்டமற்ற பக்க மரப்பு நோய் (Amyotrophic Lateral Sclerosis)

தசையூட்டமற்ற பக்க மரப்பு நோயினது ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம். இந்த நோய் காரணமாக தினசரி வாழ்வின் 6 செயல்பாடுகளில் குறைந்தது 3 செயல்பாடுகளையாவது மீட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பின்றி குறைந்தது 3 மாதங்களாவது தொடர்ச்சியாக செய்ய இயலாத நிலையினை விளைவிக்க வேண்டும் அன்றாட வாழ்தலின் நடவடிக்கைகளாவன:

- கழுவுதல் - குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயில் கழுவும் திறன் (குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயிற்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவது உட்பட) அல்லது பிற வழிகளில் திருப்திகரமாக கழுவும் திறன்.
- ஆடையணிவது மற்றும் ஆடைகளை அகற்றுவது, அனைத்து ஆடைகளையும் அணிந்துகொள்வது, மற்றும் தேவைப்பட்டால், ஏதேனும் பினைப்புகள், செயற்கை கால்கள் அல்லது பிற சிகிச்சை சாதனங்களை கழற்றுவது, பாதுகாப்பது மற்றும் அவிழ்ப்பது



Specimen

- உணவருந்துதல் - உணவு தயாரிக்கப்பட்டு கிடைக்கும்போது உணவருந்தும் திறன்.

- தனிப்பட்ட சுகாதாரத்தை பராமரித்தல் - கழிப்பறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது குடல் மற்றும் சிறுநீர்ப்பை செயல்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் தனிப்பட்ட சுகாதாரத்தை திருப்திகரமாக பராமரிக்கும் திறன்.

- அறைகளுக்கு இடையில் செல்வது - சமனான தரையில் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்லும் திறன்.

- படுக்கைக்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுதல் - படுக்கையில் இருந்து ஒரு நேரான நாற்காலி அல்லது சக்கர நாற்காலியில் இறங்கி மீண்டும் படுக்கைக்கு திரும்பும் திறன்.

நோய் நிர்ணயம் ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணரால் உறுதிபடுத்தப்பட்டு நரம்பு கடத்தல் ஆய்வுகள் (நேசளந உழனெரஉவழைெ ளவரனநைள - ஊேளுு) மற்றும் தசை மின்னியக்கப் பதிவியல் (Electromyography -EMG) ஆகியவற்றால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- இயக்க நரம்புகள நோயின் பிற வடிவங்கள்

- ஒன்றுக்கு மேற்பட்ட நரம்புகளின் இயக்க நரம்புமண்டல நோய் மற்றும் உடல் தசையழற்சி (ஆரடவகைழஉயட அழவழச நெரசழியவால (MMN) and inclusion body myositis)

- இளம்பிள்ளை வாதத்துக்கு பின்னரான நோய்குழுக்கள் (Post-polio syndrome)

- முதுகெலும்பு தசைநார் சிதைவு. (Spinal muscular atrophy)

- பலவகை தசையழற்சி மற்றும் தோல் தசையழற்சி (Polymyositis and dermatomyositis)

XXVII. சிவப்பணு வளர்ச்சியற்ற இரத்தசோகை **(Aplastic Anaemia)**

நியூற்றோபினியா (நெரவசழிநெயை), திறொம்போசைடோப்பீனியா (வாசழஅடிழஉலவழிநெயை) என்பனவற்றை தோற்றுவிக்கும் தீவிரமான எலும்பு மச்சை செயலிழப்பு நோயினது ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம். இந்த நிலைக்கு இரத்தமாற்றத்துடன் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றுடன் சிகிச்சையளிக்க வேண்டும்:

- மச்சையினைத் தூண்டும் காரணிகள்

- நோயெதிர்ப்பு மருந்துகள்

- எலும்பு மச்சை மாற்றீடு

நோயறிதலை ஒரு ஆலோசகர் குருதியியல் நிபுணரால் உறுதிபடுத்தப்பட்டு எலும்பு மஜ்ஜை திசுவியல் பரிசோதனை மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

XXVIII. மூளையழற்சி **(Encephalitis)**

கண்டறியப்பட்ட தேதியைத் தொடர்ந்து குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தொடர்ச்சியான நரம்பியல் குறைப்பாட்டினை தோற்றுவிக்கும் கடுமையான வைரஸ் மூளையழற்சியின் ஒரு திட்டவட்டமான நோயறிதல். நோயறிதல் ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டு வழக்கமான மருத்துவ அறிகுறிகள் மற்றும் மூளை தண்டுவட நீர்மம் (உநசநடிசழளிையெட கடரனை) அல்லது மூளை திசுவியல் பரிசோதனை மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.



Specimen

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ் (HIV) தொற்றின் போதான மூளையழற்சி
- பாக்டீரியா அல்லது ஓரணு உயிரிசார் (protozoal) தொற்றுகளால் ஏற்படும் மூளையழற்சி
- மயால்ஜிக் அல்லது பரனியோபிளாஸ்டிக் என்செபலோமைலிடிஸ் (Myalgic or paraneoplastic encephalomyelitis)

XXIX. பாரிய தலை அதிர்ச்சிகாயம் **(Major Head Trauma)**

தலையில் ஏற்பட்ட அதிர்ச்சிகரமான காயத்தின் விளைவாக மூளையின் செயல்பாட்டின் ஏற்பட்ட தடங்கள் குறித்த திட்டவட்டமான நோயறிதல். தலையில் ஏற்பட்ட அதிர்ச்சிகரமான காயம் தினசரி வாழ்வின் 6 செயல்பாடுகளில் குறைந்தது 3 செயல்பாடுகளையாவது மீட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பின்றி குறைந்தது 3 மாதங்களாவது தொடர்ச்சியாக செய்ய இயலாத நிலையினை விளைவிக்க வேண்டும்

அன்றாட வாழ்தலின் நடவடிக்கைகளாவன:

- கழுவுதல் - குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயில் கழுவும் திறன் (குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயிற்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவது உட்பட) அல்லது பிற வழிகளில் திருப்திகரமாக கழுவும் திறன்.
- ஆடையணிவது மற்றும் ஆடைகளை அகற்றுவது, அனைத்து ஆடைகளையும் அணிந்துகொள்வது, மற்றும் தேவைப்பட்டால், ஏதேனும் பிணைப்புகள், செயற்கை கால்கள் அல்லது பிற சிகிச்சை சாதனங்களை கழற்றுவது, பாதுகாப்பது மற்றும் அவிழ்ப்பது
- உணவருந்துதல் - உணவு தயாரிக்கப்பட்டு கிடைக்கும்போது உணவருந்தும் திறன்.
- தனிப்பட்ட சுகாதாரத்தை பராமரித்தல் - கழிப்பறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது குடல் மற்றும் சிறுநீர்ப்பை செயல்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் தனிப்பட்ட சுகாதாரத்தை திருப்திகரமாக பராமரிக்கும் திறன்.
- அறைகளுக்கு இடையில் செல்வது - சமனான தரையில் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்லும் திறன்.
- படுக்கைக்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுதல் - படுக்கையில் இருந்து ஒரு நேரான நாற்காலி அல்லது சக்கர நாற்காலியில் இறங்கி மீண்டும் படுக்கைக்கு திரும்பும் திறன்.

நோய் நிர்ணயம் ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணரால் அல்லது ஆலோசகர் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணரால் செய்யப்பட்டு கதிரியக்க காட்சிபடங்களின் கண்டுபிடிப்புகளால் (ஊவு- அல்லது ஆசுஐ- ஸ்கேன்) அத்தாட்சிபடுத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

மது அல்லது போதைப் பொருட்பாவணை என்பவற்றின் விளைவான அல்லது தனக்கு தானே ஏற்படுத்திகொண்ட ஏதேனும் பாரிய தலை அதிர்ச்சிகாயம்,

XXX. மையவிழையத்துக்குரிய சிறைப்பை நோய் **(Medullary Cystic Disease)**

பின்வரும் எல்லாவற்றாலும் சான்றுப்படுத்தப்பட மையவிழையத்துக்குரிய சிறைப்பை நோயினது ஒரு திட்டவட்டமான நோய் நிர்ணயம்.

Specimen

- இரண்டு சிறுநீரகங்களின் மையவிழையம் (அநனரடடய) மற்றும் புற மையவிழையம் (உழசவஉைழஅநனரடடயசல) பகுதியில் பல நீர்க்கட்டிகளைக் காட்டும் அல்ட்ராசவுண்ட், எம்.ஆர்.ஐ அல்லது சி.டி ஸ்கேன் காட்சிபடங்கள்.

- புற மையவிழையம் (உழசவஉைழஅநனரடடயசல) சந்திப்பில் குழாய் நலிவு, அடித்தள சவ்வு தடித்தல் மற்றும் நீர்க்கட்டி உருவாக்கம் ஆகியவற்றின் பொதுவான திசுவியல் ஆய்வு கண்டுபிடிப்புகள்

- நிமிடத்திற்கு 40 மில்லி லீட்டருக்கு குறைவான சிறுநீர்க்குழல் திரட்டு வடிகட்டுதல் வீதம் (புகுசு) (ஆனுசுனு சூத்திரம்)

நோய் நிர்ணயம் ஒரு ஆலோசகர் சிறுநீரக வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- பல குறும்பைச் சிறுநீரகக் கட்டிகள் (Polycystic kidney disease)

- மல்டிசிஸ்டிக் சிறுநீரக டிஸ்ப்ளாசியா மற்றும் மெடுல்லரி ஸ்பொஞ் சிறுநீரகம் (Multicystic renal dysplasia and medullary sponge kidney)

- வேறு எந்த சிறைப்பை சிறுநீரக நோய்

XXXI. நடுக்குவாதம் (பாக்கின்சன்) நோய் (65வது வயதுக்கு முன்பாக) (Parkinson's Disease - Before 65 years of age)

முதன்மை காரணமறியா நடுக்குவாதம் (Idiopathic Parkinsion) நோயின் திட்டவட்டமான நோயறிதல், இது பின்வரும் மருத்துவ வெளிப்பாடுகளில் குறைந்தது இரண்டு வெளிப்பாடுகளால் சாட்சியமளிக்கப்பட வேண்டும்.

- தசை விறைப்பு (Muscle rigidity)

- நடுக்கம் (Tremor)

- தளர் இயக்கம் (இயக்கத்தின் அசாதாரண மந்தநிலை, உடல் மற்றும் மன துலங்கள்களின் மந்தநிலை (Bradykinesia)

காரணமறியா நடுக்குவாதம் நோய் (65 வயதிற்கு முன்னர்) விளைவாக தினசரி வாழ்வின் 6 செயல்பாடுகளில் குறைந்தது 3 செயல்பாடுகளையாவது மீட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பின்றி குறைந்தது 3 மாதங்களாவது தொடர்ச்சியாக செய்ய இயலாத நிலை தோன்ற வேண்டும்

அன்றாட வாழ்தலின் நடவடிக்கைகளாவன:

- கழுவுதல் - குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயில் கழுவும் திறன் (குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயிற்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவது உட்பட) அல்லது பிற வழிகளில் திருப்திகரமாக கழுவும் திறன்.

- ஆடையணிவது மற்றும் ஆடைகளை அகற்றுவது, அனைத்து ஆடைகளையும் அணிந்துகொள்வது, மற்றும் தேவைப்பட்டால், ஏதேனும் பினைப்புகள், செயற்கை கால்கள் அல்லது பிற சிகிச்சை சாதனங்களை கழற்றுவது, பாதுகாப்பது மற்றும் அவிழ்ப்பது

- உணவருந்துதல் - உணவு தயாரிக்கப்பட்டு கிடைக்கும்போது உணவருந்தும் திறன்.

- தனிப்பட்ட சுகாதாரத்தை பராமரித்தல் - கழிப்பறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது குடல் மற்றும் சிறுநீர்ப்பை செயல்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் தனிப்பட்ட சுகாதாரத்தை திருப்திகரமாக பராமரிக்கும் திறன்.

Specimen

- அறைகளுக்கு இடையில் செல்வது - சமனான தரையில் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்லும் திறன்.

- படுக்கைக்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுதல் - படுக்கையில் இருந்து ஒரு நேரான நாற்காலி அல்லது சக்கர நாற்காலியில் இறங்கி மீண்டும் படுக்கைக்கு திரும்பும் திறன்.

நோய் நிர்ணயம் ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணரால் செய்யப்பட வேண்டும்.

தினசரி வாழ்வின் செயல்பாடுகளிலிருந்து தங்கியிருக்காதஇ ஆழ்ந்த மூளை தூண்டுதல் அறிகுறிகளைக் கட்டுப்படுத்த ஒரு நியூரோஸ்டிமுலேட்டரைப் பொருத்துவது, இந்த வரையறையின் கீழ் உள்ளடங்கும். பொருத்துதலானது ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணர் அல்லது நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மூலமாக தீர்மானிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- இரண்டாம் நிலை நடுக்குவாதம் (பார்கின்சோனிசம்) (மருந்து-அல்லது நச்சினால் தூண்டப்பட்ட பார்கின்சோனிசம் உட்பட)

- அவசியமான நடுக்கம் (நுளளநவெயைட வசநஅழச)

- பிற சிதைவடைகின்ற நரம்பியல் கோளாறுகள் தொடர்பான பார்கின்சோனிசம் ( ீயசமமைளெழளைஅ சநடயவநன வழ ழவாநச நெரசழனநபநநெசயவளைந னளைழசனநச)

XXXII. மண்டலிய செம்முருடு (சிஸ்டமிக் லுபஸ் எரிதிமெடோசஸ் - Systemic Lupus Erythematosus)

பின்வரும் மருத்துவ வெளிப்பாடுகள் எல்லாவற்றாலும் சான்றுப்படுத்தப்பட்ட மண்டலிய செம்முருடு நோயின் திட்டவட்டமான நோயறிதல்:

- ஆன்டிநியூக்ளியர் ஆன்டிபாடிகள் (ஏ.என்.ஏ) (Antinuclear antibodies) (ANA) அல்லது யவெை-னளனுயே யவெைழனநைள இருப்பது போன்ற வழக்கமான ஆய்வக கண்டுபிடிப்புகள்.

- மண்டலிய செம்முருடு (லூபஸ் எரித்மாடோசஸுடன்) தொடர்புடைய அறிகுறிகள் (பட்டாம்பூச்சி சொறி, ஒளி உணர்திறன் சீரச்சவ்வழற்சி) (Butterfly rash, Photosensitivity, serositis)

- இயக்க ஊக்கி மருந்துகளினாலான அல்லது வேறு நோய் மாற்றியமைக்கும் எதிர்ப்பு மருந்துகள் மூலமான (corticosteroids or other immunosuppressants) தொடர்ச்சியான சிகிச்சை.

மேலும், பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு அங்க ஈடுபாடுகள் இனங்காணப்பட வேண்டும்:

- குறைந்தபட்சம் நாளொன்றுக்கு 0.5 கிராம் புரோட்டினூரியாவுடன் லூபஸ் நெஃப்ரிடிஸ் மற்றும் நிமிடத்திற்கு 60 மில்லி லீட்டருக்கு குறைவான சிறுநீர்க்குழல் திரட்டு வடிகட்டுதல் வீதம் (புகுசு) (ஆனுசுனு சூத்திரம்)

- லிப்மேன் சாக்ஸ் இதய உள்ளுறை அழற்சி அல்லது இதயத்தசையழற்சி (டுபைஅயெ-ளுயஉமள நனெழஉயசனவைளை ழச அலழஉயசனவைளை)

- மூளை தண்டுவட நீர்மம் (உநசநடிசழளிiயெட கடரனை ) பரிசோதனை அல்லது மூளை மின்அலைப்பதிவி (நுநுபு) மூளை பரிசோதனை மூலம் சான்றுப்படுத்தப்படுகின்ற குறைந்தது 3 மாத காலத்திற்கான நரம்பியல் பற்றாக்குறைகள் அல்லது வலிப்புத்தாக்கங்கள். தலைவலி, அறிவாற்றல் மற்றும் மனநல கோளாறுகள் குறிப்பாக விலக்கப்படுகின்றன.

நோய் கண்டறிதலை ஒரு ஆலோசகர், வாதவியல் வைத்தியர் அல்லது சிறுநீரகவியல் நோய் நிபணரால் உறுதிப்படுத்தபட வேண்டும்.

Specimen

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன:

- டிஸ்காய்டு லூபஸ் எரித்மாடோசஸ் அல்லது சப்அகுட் கட்னியஸ் லூபஸ் எரித்மாடோசஸ் (Discoid lupus erythematosus or subacute cutaneous lupus erythematosus)

- ஔடதங்களால் தூண்டப்பட்ட மண்டலிய செம்முருடு (Drug-induced lupus Erythematosus)

XXXIII. கடுமையான கீல்வாத மூட்டுவலி **(Severe Rheumatic Arthritis)**

பின்வரும் மருத்துவ வெளிப்பாடுகள் எல்லாவற்றாலும் சான்றுப்பபடுத்தப்பட்ட கடுமையான கீல்வாத மூட்டுவலி நோயின் திட்டவட்டமான நோயறிதல்.

- நோயறிதலின் போது 6 வார காலத்திற்கு மேற்பட்ட ஆகக் குறைந்தது 20 மூட்டுகளில் வீக்கத்தின் பொதுவான அறிகுறிகள் (மூட்டு வலி, வீக்கம், நொய்வு) (arthralgia, swelling, tenderness)

- முடக்கு காரணி நேர்மறை நிலை (குறைந்தது மேல் சாதாரண மதிப்பை விட இரண்டு மடங்கு அதிகமான) மற்றும் / அல்லது சிட்ரூலின் எதிர்ப்பு ஆன்டிபாடிகளின் இருப்பு

- இயக்க ஊக்கி மருந்துகளினாலான (உழசவளைழளவநசழனைள ) தொடர்ச்சியான சிகிச்சை

- “நோய் மாற்றியமைக்கும் எதிர்ப்பு மருந்துகள்” (Disease Modifying Anti-Rheumatic Drugs) (எ.கா. மெத்தோட்ரெக்ஸேட் பிளஸ் சல்பசலாசின் / லெ/ப்ளூனோமைடு) (e.g. methotrexate plus sulfasalazine/ leflunomide) அல்லது குறைந்தபட்சம் 6 மாத காலத்திற்குள் ஒரு டி.என்.எ/ப் (TNF inhibitor) தடுப்பானின் கலவையுடன் சிகிச்சை

நோயறிதலை ஒரு ஆலோசக வாதவியல் வைத்தியர் உறுதிப்படுத்த வேண்டும்

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

எதிர்வினை மூட்டுவலி, சொரியாடிக் ஆர்த்ரிடிஸ் மற்றும் செயல்படுத்தப்பட்ட மூட்டு முடக்குவாதம் (Reactive arthritis, psoriatic arthritis and activated osteoarthritis)

XXXIV. இளம் பிள்ளை வாதம் / போலியோ **(Poliomyelitis)**

மூட்டு தசைகளை முடங்குகின்ற பக்கவாதத்திற்கு இட்டுசெல்லும் அல்லது சுவாச தசைகள் முடங்குகின்ற சடுதியான போலியோ வைரஸ் தொற்று நோயின் திட்டவட்டமான நோயறிதல். பக்கவாதம் கண்டறியப்பட்ட நாளிலிருந்து குறைந்தது 3 மாதங்களுக்கு மருத்துவ ரீதியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

நோயறிதல் ஒரு ஆலோசகர் நரம்பியல் நிபுணரால் உறுதிப்படுத்தப் படுவதுடன் போலியோ வைரஸ் இருப்பதை நிரூபிக்கும் ஆய்வக சோதனைகளால் சான்றுப்படுத்தப்பட வேண்டும

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- பக்கவாதம் இல்லாமல் போலியோ வைரஸ் தொற்று (Poliovirus infections without paralysis)

- பிற என்டோவைரஸ் நோய்த்தொற்றுகள் (Other enterovirus infections)

- குய்லின்-பார் நோய்க்குறி அல்லது குறுக்கு தண்டுவட அழற்சி (Guillain-Barré syndrome or transverse myelitis)

Specimen

XXXV. முடிவு நிலை சுகவீனம் **(Terminal Illness)**

ஒரு மேம்பட்ட அல்லது விரைவாக தீவிரமடையும் நோயின் திட்டவட்டமான நோயறிதல், இது ஆலோசனை மருத்துவர்ழூ மற்றும் காப்பீட்டு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீன மருத்துவரின் கருத்தில் குணப்படுத்த முடியாதது எனவும் 12 மாதங்களுக்குள் மரணத்திற்கு வழிவகுக்கும் எனவும் அடையாளங்கானப்பட வேண்டும். காப்பீட்டாளரருக்கு நோய் அறிகுறிகளின் தீவிரத்தை குறைப்பதற்கான சிகிச்சையை தவிர்த்து செயல்திறமுடைய நோய்த்தடுப்பு சிகிச்சை வழங்கப்பட கூடாது. ஈட்டிய நோய்த் தடைக் காப்புக் குறைப்பாட்டு நோயின் (AIDS) காரணமான முடிவு நிலை சுகவீனம் விளக்கப்பட்டுள்ளது. முடிவு நிலை சுகவீனத்தின் நோய் நிர்ணயமானது இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டு நிருவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியரொருவரால் செய்யப்பட வேண்டும்.

XXXVI. இதயத் தசையிடர் (Cardiomyopathy)

பின்வரும் முதன்மை இருதய தசையிடர் நோய்களில் ஒன்றின் திட்டவட்டமான நோயறிதல்

- விரிவடைந்த இருதய தசையிடர் நோய் (Dilated Cardiomyopathy)
- மிகுவளர் இருதய தசையிடர் நோய் (தடைசெய்யக்கூடிய அல்லது தடைசெய்யாத) (ர்லிநசவசழிாஉை ஊயசனழைஅலழியவால (obstructive or non-obstructive)
- கட்டுப்படுத்தும் இருதய தசையிடர் நோய் (Restrictive Cardiomyopathy)
- அரித்மோஜெனிக் வலது இதயக் கீழறை இருதய தசையிடர் நோய் (Arrhythmogenic Right Ventricular Cardiomyopathy)

இந்த நோய் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்:

- குறைந்தது 3 மாத இடைவெளியில் இரண்டு முறை அளவிடப்பட்ட 40 வீதத்திற்க்கும் குறைவான இடது இதயக் கீழறை வெளியேற்ற பின்னம் (LVEF).
- 3 மாத காலத்திற்கான சாதாரண செயல்பாட்டைக் காட்டிலும் குறைவான செயற்பாடுகளின் போது கூட ஏற்படுகின்ற சோர்வு, படபடப்பு, மூச்சுத் திணறல் அல்லது மார்பு வலி போன்றவற்றால் ஏற்படும் உடல் செயல்பாடுகளின் வரம்பு (நியூயார்க் ஹார்ட் அசோசியேடின் வகைப்பாட்டின் III அல்லது ஐஏ வகுப்பு)
- திடீர் இருதய இறப்பைத் தடுப்பதற்காக ஒரு பொருத்தக்கூடிய கார்டியோவர்டர் டிஃபிபிரிலேட்டர் (ஐசிடி) பொருத்துதல் (Cardioverter Defibrillator)

நோயறிதலானது ஒரு ஆலோசக இருதயநோய் நிபுணர் அல்லது இருதய அறுவை சிகிச்சை நிபுணரால் தீர்மானிக்கப்பட்டு இதய எதிரொலி வரைபடம் (எக்கோ கார்டியோகிராம் - echocardiogram) அல்லது காந்த ஒத்ததிர்வு தோற்றுருவாக்கல் (MRI) இருதய கணினி வரைவி (CT Scan) கண்டுபிடிப்புகளால் ஆதரிக்கப்பட வேண்டும்.

கார்டியோவர்டர் டி/பிபிரிலேட்டர் (Irpb) பொருத்துதல் மருத்துவ இரீதியாக அவசியம் என ஒரு ஆலோசக இருதயநோய் நிபுணரரல் தீர்மானிக்கப்பட வேண்டும்

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- இரண்டாம் நிலை (இஸ்கிமிக், வால்வுலர், வளர்சிதை மாற்ற, நச்சு அல்லது உயர் இரத்த அழுத்தம்) இருதய தசையிடர் நோய் ளுநஉழனெயசல (ischaemic, valvular, metabolic, toxic or hypertensive) உயசனழைஅலழியவால

Specimen

- இதயத்தசை அழற்சி காரணமாக இதயக் கீழறை செயல்பாட்டின் இடைநிலை குறைப்பு (Transient reduction of left ventricular function due to myocarditis)

- மண்டலிய நோய்கள் காரணமான இருதய தசையிடர் நோய் (Cardiomyopathy due to systemic diseases)

- ஒழுங்கற்ற இதயத்துடிப்பு காரணமாக ஒரு பொருத்தக்கூடிய கார்டியோவர்டர் டி/பிபிரிலேட்டர் (ஐசிடி) பொருத்துதல் (எ.கா. ப்ருகடா அல்லது நீண்ட- ஞவு- நோய்க்குறி) (e.g. Brugada or Long-QT-Syndrome)

XXXVII. மூட்டுகளின் இழப்பு **(Loss of limbs)**

ஒரு விபத்து அல்லது மருத்துவ ரீதியாக தேவைப்படுத்தப்படும் காரணங்களுக்காக, மணிக்கட்டு அல்லது கணுக்கால் மூட்டு அல்லது அதற்கு மேல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கங்கள் முழுவதுமாக துண்டிக்கப்படுவதற்கான திட்டவட்டமான நோயறிதல். நோயறிதலை ஒரு விசேட நிபுணரால் உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- தனக்கு தானே ஏற்படுத்திகொண்ட காயங்கள் காரணமான அவயங்களின் துண்டிப்பு.

XXXVIII. திசுஅழுகல் நோய் (நெக்ரோடைசிங் பாஸ்சிடிஸ் - **Necrotising Fasciitis**)

பின்வரும் மருத்துவ வெளிப்பாடுகள் எல்லாவற்றாலும் சான்றுப்பபடுத்தப்பட்ட திசுஅழுகல் (நெக்ரோடைசிங் பாஸ்சிடிஸ்) நோயின் திட்டவட்டமான நோயறிதல்.

- கை கால்கள் அல்லது உடற்பகுதியின் தோலடி திசுக்களின் இரண்டாம் நிலை திசுஅழுகலுடன் ஆழ்ந்த திசுப்படலத்தில் அமைந்துள்ள அதிகரித்து செல்லும், வேகமாக பரவும் பாக்டீரியா தொற்று.

- காய்ச்சல் மற்றும் சி-ரியாக்டிவ் புரதம் (சிஆர்பி) அளவுகளில் விரைவான அதிகரிப்பு

- அனைத்து திசுஅழுகல்களின் அறுவை சிகிச்சை மூலமான அகற்றல்

போர்னியரின் திசுஅழுகல் (Fournier's gangrene) இந்த வரையறையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. நோயறிதல் ஒரு ஆலோசகர் அறுவை சிகிச்சை நிபுணர் உறுதிப்படுத்த வேண்டும் மற்றும் நுண்ணுயிரியல் அல்லது திசுவியல் கண்டுபிடிப்புகளால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கனத்தில் பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன.

- வாயு தசையழுகல் (புயள புயபெசநநெ)

- நீரிழிவு, நரம்பியல் அல்லது வாஸ்குலர் நோய்களால் ஏற்படும் தசையழுகல்

XXXIX. சுயாதீன இருப்பின் இழப்பு **– (Loss of Independent Existence)**

தினசரி வாழ்வின் 6 செயல்பாடுகளில் குறைந்தது 3 செயல்பாடுகளையாவது மீட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பின்றி குறைந்தது 3 மாதங்களாவது தொடர்ச்சியாக செய்ய இயலாத நிலையின் (65 வயதிற்கு முன்னர்) திட்டவட்டமான நோய் நிர்ணயம்.

அன்றாட வாழ்தலின் நடவடிக்கைகளாவன:

- கழுவுதல் - குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயில் கழுவும் திறன் (குளியல் தொட்டி அல்லது தூவாலைக்குழாயிற்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவது உட்பட) அல்லது பிற வழிகளில் திருப்திகரமாக கழுவும் திறன்.



Specimen

- ஆடையணிவது மற்றும் ஆடைகளை அகற்றுவது, அனைத்து ஆடைகளையும் அணிந்துகொள்வது, மற்றும் தேவைப்பட்டால், ஏதேனும் பிணைப்புகள், செயற்கை கால்கள் அல்லது பிற சிகிச்சை சாதனங்களை கழற்றுவது, பாதுகாப்பது மற்றும் அவிழ்ப்பது

- உணவருந்துதல் - உணவு தயாரிக்கப்பட்டு கிடைக்கும்போது உணவருந்தும் திறன்.

- தனிப்பட்ட சுகாதாரத்தை பராமரித்தல் - கழிப்பறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது குடல் மற்றும் சிறுநீர்ப்பை செயல்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் தனிப்பட்ட சுகாதாரத்தை திருப்திகரமாக பராமரிக்கும் திறன்.

- அறைகளுக்கு இடையில் செல்வது - சமனான தரையில் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்லும் திறன்.

- படுக்கைக்கு உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறுதல் - படுக்கையில் இருந்து ஒரு நேரான நாற்காலி அல்லது சக்கர நாற்காலியில் இறங்கி மீண்டும் படுக்கைக்கு திரும்பும் திறன். நோயறிதலை ஒரு விசேட நிபுணரால் உறுதிப்படுத்த வேண்டும்.

### 3.7.4 கட்டுப்பணத்தொகையை திருத்தியமைப்பதில் கம்பனிக்குள்ள உரிமைகள் மற்றும் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

இந்த அனுகூலத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணமானது அனுகூலம் ஆரம்பமாகும் திகதியில் இருந்து ஒரு (01) வருட காலத்திற்கு மாத்திரம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு காப்புறுதி ஆண்டும் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு அறிவித்து முப்பது (30) நாட்களின் பின்னர், கட்டுப்பண திருத்தங்களை அல்லது இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் மாற்ற கம்பனிக்கு உரிமை உள்ளது என்பதுடன் கட்டுப்பண மாற்றம் அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சார்ந்த திருத்தமானது காப்புறுதியின் அடுத்த காப்புறுதி ஆண்டு தொடக்கம் அமுலாகும்.

### 3.7.5 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்

காப்புறுதி செய்தவரின் எத்தகைய குறிப்பிடத்தக்க தொழில் மாற்றமும் (14) பதின்நான்கு நாட்களுக்குள் உடனடியாக நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் கீழான நன்மைகளை பெறுவதற்குரிய இடங்கள் மீள அங்கீகரிக்கப்பட வேண்டும். தேகாரோக்கியம் சம்பந்தமான பிரேரணைகள் மற்றும் பிரகடனங்களில் விபரிக்கப்படதற்கு வேறுபாடான எந்தவொறு தொழிலிலும் நோய் ஏற்பட்ட காலத்தில் காப்புறுதி செய்தவர் ஈடுபட்டிருந்தால், அதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு கோரிக்கையையும் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது.

### 3.7.6 அறிவித்தலும் கோரிக்கைக்கான சான்றுகளும்

கோரிக்கைக்கான எந்தவொரு அறிவித்தலும் இயன்றளவு விரைவில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது கிளை நிலையங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மிக மோசமான சுகவீனம் ஏற்பட்டதாக, நிர்ணயம் செய்யப்பட்ட தினத்தில் இருந்து (30) முப்பது நாட்களுக்குக் குறைவடையாமல் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுவது அவசியம். இத்தகைய கால எல்லைக்குள் கோரிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தால். அவ்வாறான கோரிக்கையை நிராகரிக்கும் உரிமையை நிறுவனம் கொண்டிருக்கும்.

### 3.7.7 நிபந்தனைகள்

(i) கீழ்க்காணும் அடிப்படையில் சுவமக நன்மை முடிவுக்கு வரும்.
   - (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இந்தக் அனுகூலம் முடிவடையும் திகதியில் அல்லது
   - (ஆ) ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரின் 70வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், இவற்றில் எது முந்தியதோ அது. அல்லது
   - (இ) காப்புறுதி முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் எனக் காப்புறுதி செய்தவர் எழுத்துமூலம் கோரி,

Specimen

காப்புறுதிப்பத்திரமும் உரிய முறையில் கையொப்பதுடன் சம்மதமும் தெரிவிக்கப்பட்டிருந்தால் அல்லது காப்புறுதிப்பத்திரம் காலாவதியானால், கைதுறப்பு பெறுமதிக்கென ஒப்படைக்கப்பட்டால் அல்லது ஒப்படைப்பு பெறுமதியாக மாற்றப்பட்டிருந்தால்.

(ii) மேலதிக அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும்.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், சுவமக அனுகூலங்களும் செயலிழக்கும்.

(iv). கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது:-
(அ) இலாபத்தில் பங்கெடுத்தல்
(ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்த

(v) ஆபத்தான நோய் சம்பந்தமான நிர்ணயத்தை நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர் மேற்கொள்ள வேண்டும். இதற்கு ஆதரமாக நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மருத்துவ மற்றும் ஏனைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது அவசியம்.

(vi) ஆபத்தான் நோயினால் பாதிக்கப்படவரென ஆயுள் காப்புறுதி செய்தவர்/செய்தவர்களை பரிசோதனை செய்வதற்கு நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர் ஒருவரை அல்லது நிபுணர்களை நியமிக்கும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

(vii) ஆயுள் காப்புறுதி செய்தவர் ஆபத்தான நோயினால் பதிக்கப்பட்டவர் என மருத்துவ நிர்ணயம் செய்யப்பட்டு அத்தகைய நிர்ணயத்தின் (30) முப்பது நாட்களுக்குள் அவரின் மரணம் இடம்பெறுமானால், முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அடிப்படையில் அனுகூலத்தில் இருந்து, இந்த அனுகூலத்தின் பிரகாரம் கொடுக்கப்பட வேண்டிய/ கொடுக்கப்பட்ட தொகை கழிக்கப்படும்.

(viii) ஆபத்தான நோய்க்கான கோரிக்கைத் தொகை கொடுக்கப்பட்டதை தொடர்ந்து ஆயுள் காப்புறுதி செய்தவர்/செய்தவர்கள் உயிர் வாழ்ந்திருந்தால், ஏனைய அனுகூலத்திற்கான கட்டணங்களை ஆயுள் காப்புறுதி செய்தவர்/செய்தவர்கள் தொடர்ந்தும் செலுத்துவது அவசியம்.

(ix) இந்த அட்டவணையின் கீழ் வழங்கப்படும் அனுகூலத்திற்கான கோரிக்கை மூலமான எந்தவொரு கொடுப்பனவையும் பெறுவதற்கு சட்டபூர்வமான பிரதிநிதி, நியமிக்கப்பட்டவர், பயன்பெறுனர் ஆகியோர் உரிமையற்றவராவர்.

(x) நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட சகல காப்புறுதித்திட்டங்களுக்காகவும் தனிநபர் ஒருவருக்கு இந்த அனுகூலத்துக்காக வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய தொகை ஐந்து மில்லியன் ரூபாயாக (ரூ.5,000,000) மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு காப்புறுதியாளரினாலும் இந்த அனுகூலத்துக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய தொகை பத்து மில்லியன் (ரூ.10,000,000) ரூபாயாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(xi) ஆயுள் காப்புறுதி செய்தவரின் வாழ்நாளின் போது இந்த அனுகூலத்தை பெறுவதற்காகவோ அல்லது பயன்பெறுனர் ஒருவரை நியமிக்க அல்லது இந்த அனுகூலத்தை மற்றொருவருக்கு சாட்டுதல் செய்ய வாழ்க்கைத்துணைக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.

(xii) இருதயநோய் சிகிச்சையை ஈடு செய்வதற்கான அனுகூலம், காப்புறுதி செய்தவர்ஃசெய்தவர்களின் (55வது) ஐம்பத்தைந்தாவது பிறந்த தினத்திற்கு முன்னர் இந்த அனுகூலத்திற்கு விண்ணப்பித்திருந்தால் மாத்திரமே நடைமுறைக்கு வரும்.

Specimen

### 3.7.8 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய தவிர்ப்புக்கள்

பின்வரும் நிலைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புடைய வகையில் ஆயுள் காப்புறுதிதாரரின் உயிரிழிப்பு சம்பவிக்குமாயின், சுவமக அனுகூலத்தின் கீழ் எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை நிறுவனம் கொண்டிருக்காது,

(i) தற்கொலை முயற்சி அல்லது சுயமாக அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மற்றும்/அல்லது

(ii) மதுபானம், போதைப்பொருட்கள் அல்லது மனமயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வஸ்துக்களை மிகையாக உட்கொள்வதால் விளையும் விபத்துகள் அல்லது நோய்கள் மற்றும் போதையுடன் வாகனம் ஓட்டுதல் அடங்காலாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருத்தல் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மட்டத்தை விடவும் கூடுதலான அளவு மதுபானம் இரத்தத்தில் கலந்திருக்கையில் வாகனம் ஓட்டுதல் மற்றும்/அல்லது

(iii) காப்புறுதியில் அல்லது கம்பனியின் வேறு திருத்தங்களில் விபரிக்கப்பட்டவாறு, காப்புறுதி ஊர்ஜிதமாக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னதாக காப்புறுதி செய்தவர்ஃ வாழ்க்கைத்துணை பிரேரணை படிவத்தின்ஃதனிநபர் விண்ணப்பப் படிவத்தின் சுகாதாரப் பிரகடனப் பிரிவில் எழுத்து மூலம் பிரகடனம் செய்து அவற்றை கம்பனி ஏற்றுக் கொண்டிருந்தாலன்றி, முன்னர் இருந்திருக்கக்கூடிய நிலைமைகள் மற்றும/அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட விமானச் சேவை நிறுவனத்தில் கட்டணம் செலுத்திய பயணி என்ற நிலைக்கு அப்பால் விமானப் போக்குவரத்து அல்லது விமானச் சாகசத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நிகழக்கூடிய விபத்து, அந்த சமயத்தில் காப்புறுதியாளர் விமானத்தில் எதுவித கடமைகளையோ அங்கு செல்ல வேண்டிய தேவைகளையோ கொண்டிருக்காத நிலை மற்றும/அல்லது

(v) யுத்தம் மற்றும் யுத்தத்துடன் ஒப்பிடக்கூடிய நிலைமைகள், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு பகையாளியின் செயல், ஆயுத மோதல்கள், (போர்பிரகடனம் செய்து அல்லது செய்யாமல் நிகழும்) போர் போன்ற சம்பவங்கள், சிவில் யுத்தம், கலகம், கிளர்ச்சி, புரட்சி, அபகரிப்பு அல்லது எந்தவொரு பொது அல்லது உள்ளூராட்சி அரசாங்கம் அல்லது அதிகார சபையின் உத்தரவின் பிரகாரத்திலான தேசியமயமாக்கல் எந்தவொரு அரசாங்கத்தையும் வன்முறையை பிரயோகித்து கவிழ்க்க முனையும் நோக்கத்தை கொண்ட எந்தவொரு நிறுவனத்தினதும் பெயரால் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய வகையில் இயங்கக்கூடிய நபரொருவரின் செயல்கள் மற்றும/அல்லது

(vi) பாதுகாப்பு படைகளின் அல்லது விமானப் படையின் கடல் அல்லது இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆயுதப் பயன்பாடு தேவைப்படுகின்ற அல்லது பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களை போன்றவர்களை தாக்கும் நோக்கில் இராணுவ அதிகாரிகள் உத்தரவிற்கமைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கேற்றல் மற்றும/அல்லது

(vii) ஸ்கூபா டைவிங், மோட்டார் சைக்கிளோட்டம், பரசூட் விளையாட்டு, மலையேறுதல், மலைகளில் தொங்குதல் அல்லது பாதங்களைப் பயன்படுத்தாத ஓட்டப்பந்தயங்கள், துடுப்பு வலித்தல், மங்கீஜம்ப், வேட்டையாடுதல், ஸ்ரீபல் சேஸிங், போலோ விளையாட்டு, குளிர்கால விளையாட்டுக்கள், ஐஸ் ஹொக்கி போன்றவை உள்ளடக்கிய ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத அபாயகரமான நடவடிக்கைகள் அல்லது கம்பனி எழுத்துமூலம் இணக்கம் கண்டிருந்தாலன்றி தொழில்சார் மட்டத்திலான ஏதேனும் விளையாட்டுக்கள்.

Specimen

## 3.8 வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் (HCB/HCC)

### 3.8.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவின் கீழ் வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் ஏற்புடையதென தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே அது, ஏற்புடையாதக கருதப்படும்.

வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் (Daily Hospital Cash Benefit) கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டுபாடுகளுக்கு உட்பட்டு, காப்புறுதி செய்தவர் அல்லது காப்புறுதி செய்த வாழ்க்கைத்துணைஅல்லது குழந்தைகள் தொடர்ந்து நாற்பத்து எட்டு (48) மணி நேரத்திற்கு மேல் தனியார் அல்லது அரசு மருத்துவமனையில் மருத்துவரின் பரிந்துரை மற்றும் அனுமதியுடன் நோயால் அல்லது விபத்தால் அனுமதிக்கப்பட்டால்வைத்தியசாலை ரொக்கபண அனுகூலத்தை நிறுவனம் வழங்கும்.

### 3.8.2 அனுகூலத்தின் தொகை

கொடுக்கப்பட வேண்டிய பணம், நாளாந்த வைத்தியசாலை ரொக்கப்பண தொகையை வைத்தியசாலையில் தங்கியிருந்த முழுமையான நாட்களின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் பெறப்படும் தொகையாகும். தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறவேண்டுமென வைத்திய நிபுணரின் பரிந்துரையின் பேரில், காப்புறுதி செய்தவர்/வாழ்க்கைத்துணை அத்தகைய சிகிச்சையை பெறவேண்டி நேரிட்டால், தீவிர சிகிச்சை இடம்பெற்ற காலப்பகுதிக்கான தொகை இரண்டு மடங்காகும்.

### 3.8.3 காத்திருக்கும் காலம்

வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் பின்வரும் நிலைகளில் (90) தினங்களின் பின்னர் ஆரம்பிக்கும்,

(i) காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது

(ii) காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது

(iii) காப்பீடு மீளமைப்பு/புதுப்பிக்கப்பட்ட திகதி, அல்லது

(iv) அனுகூலம் உள்வாங்கப்பட்ட தினத்திலிருந்து நுற்றியெண்பது தினங்களின் (180) பின்னர்

இவற்றில் எது பிந்தியதாக நிகழ்கின்றதோ.

பின்வரும் தேதிகளில் நிகழ்ந்த விபத்துகளால் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், காத்திருக்கும் காலத்தை கம்பனி விலக்கக்கூடும்:

(i) காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது்

(ii) காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது்

(iii) காப்பீடு மீளமைப்பு/புதுப்பிக்கப்பட்ட திகதி, அல்லது்

(iv) சேர்க்கும் தேதி

இவற்றில் எது பின்னதாக இருக்கிறதோ அதற்கேற்ப.

### 3.8.4 கட்டுப்பணத்தொகையை திருத்தியமைப்பதில் கம்பனிக்குள்ள உரிமைகள் மற்றும் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இந்த அனுகூலத்திற்கு

Specimen

செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணம் இது ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு (01) வருட காலத்திற்கு மாத்திரம் உத்தரவாதமுடையதாகும். காப்புறுதி செய்தவருக்கு (30) முப்பது நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படுவதையடுத்து கட்டுப்பண விகிதத்தை மீளாய்வு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டிருக்கும். அத்தகைய கட்டுப்பண மீளாய்வு அல்லது அனுகூலம் சம்பந்தமான நிபந்தனைகளும் வரையறைகளும் கப்புறுதிப்பத்திர அடுத்த ஆண்டு நிறைவில் இருந்து நடைமுறைக்கு வந்ததாக கருதப்படும்.

### 3.8.5 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்

காப்புறுதி செய்தவரின் வாழ்க்கைத்துணையின் எத்தகைய குறிப்பிடத்தக்க தொழில் மாற்றமும் (14) பதின்நான்கு நாட்களுக்குள் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் கீழான நன்மைகளை பெறுவதற்குரிய இடங்கள் மீள அங்கீகரிக்கப்பட வேண்டும். தேகாரோக்கியம் சம்பந்தமான பிரேரணைகள் மற்றும் பிரகடனங்களில் விபரிக்கப்படதற்கு வேறுபாடான எந்தவொறு தொழிலிலும் நோய் ஏற்பட்ட காலத்தில் காப்புறுதி செய்தவர்ஃ வாழ்க்கைத்துணை ஈடுபட்டிருந்தால், அதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு கோரிக்கையிட்டும் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது.

### 3.8.6 அறிவித்தலும் கோரிக்கைக்கான சான்றுகளும்

இந்த அனுகூலம் உள்ளடக்கப்பட்டதும் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஆதாரமாக உள்ளதுமான வைத்தியசாலை சிகிச்சை அனுகூலத்திற்கான எழுத்துமூல கோரிக்கை அந்த சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு மூன்று (03) வேலை நாட்களுக்குள் நிறுவனத்திடம் கையளிக்கப்பட வேண்டும். இந்தக் கால எல்லைக்குள் அறிவித்தல் கொடுக்கத் தவறுமிடத்து, அவ்வாறான கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமையை நிறுவனம் கொண்டிருக்கும்.

இவ்வாறான அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும். கோரிக்கையை நிரூபிப்பதற்குத் தேவையான சகல படிவங்களையும் காப்புறுதி செய்தவர்களுக்கு நிறுவனம் வழங்கும். படிவங்கள் வழங்கப்பட்டு பத்து (10) வேலைநாட்களுக்குள் அவை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டும். வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றதற்கான நிரூபணங்கள், சம்பவம் நடைபெற்று முப்பது (30) நாட்களுக்கு பிந்தாமலும், காப்புறுதி செய்தவரின் செலவிலும், நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கபட வேண்டும்.

சிகிச்சைக்கு பொறுப்பான வைத்தியரினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை காப்புறுதி செய்தவர் கவனமாக பின்பற்ற வேண்டும், அத்துடன், சிகிச்சை சம்பந்தமான சகல விவரங்களையும் நிறுவனத்திற்கு வழங்குவதும் அவசியமாகும்.

எந்தவொரு காரணத்திற்கான காப்புறுதி செய்தவரை நிபுணர்கள் பார்வையிடுவதற்கும் அவசியமானதென கருதப்படும் எந்தவொரு விசாரணைக்குப் பதிலலிப்பதற்கும் காப்புறுதி செய்தவர் அல்லது அவரது உறவினர்கள் அனுமதி வழங்க வேண்டும். இத்தகைய சூழ்நிலையில், தொழில் அடிப்படையிலான அந்தரங்கத்தைப் பேணும் கடப்பட்டில் இருந்து நிபுணர்களுக்கு விலக்களிக்கப்படும். வைத்தியசாலை சிகிச்சைக்காலம் (14) பதின்நான்கு நாட்களுக்கு அதிகமானதாக இருந்தால், (14) பதின்நான்கு நாட்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான அனுகூலத்தை கொடுப்பதற்கான தீர்மானம் நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட வைத்தியப் பரிசோதகரினால் தீர்மானிக்கப்படும். அவரது தீர்மானம் இறுதியானதும், முடிவானதுமாகும். இந்த விடயம் தொடர்பாக நிறுவனத்தினால் தேவைப்படும் சிகிச்சைமுறை அடிப்படையிலான, ஒலி அடிப்படையிலான, ஆய்வுகூட ஆதாரங்கள் அனைத்தும் காப்புறுதி செய்தவரது செலவில் வழங்கப்பட வேண்டும்.

காப்புறுதியினால் பாதுகாக்கப்பட்டவர் கோரிக்கைக்கான விபரிக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றாவிடின் வைத்திய உதவி கணக்கு அனுகூலத்தின் அடிப்படையின் கீழ் கோரிக்கையை நிராகரிக்கும் உரிமை நிறுவனத்திற்கு உண்டு.

### 3.8.7 நிபந்தனைகள்

(i) கீழ்காணும் சூழ்நிலைகளில் வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் முடிவுக்கு வரும்.
   - (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவின் கீழ் குறிக்கப்பட்ட இந்த அனுகூலம் முடிவுக்கு வந்த திகதியில் அல்லது
   - (ஆ) ஆயுள் காப்புறுதி செய்தவர்ஃஅவரது வாழ்க்கைத்துணையின் 70வது பிறந்த தினத்தை தொடர்ந்த காப்புறுதிப்பத்திர வருடாந்த தினம், பிள்ளையின் 23 விறந்த தினக்கூத இவற்றில்

Specimen

எது முந்தியதோ அது.

(ii). மேலதிக கொடுப்பனவு அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும்.

(iii). பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலமும் செயலிழக்கும்.

(iv). கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது.
(அ) இலாபத்தில் பங்கெடுத்தல்.
(ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்.

(v). இந்த அனுகூலம் இலங்கை பிரதேசத்திற்கு உட்பட்ட அரசாங்க மற்றும் தனியார் "வைத்தியசாலையில்" தங்கியிருந்து பெறப்பட்ட சிகிச்சைக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். ஆயுர்வேத வைத்தியசாலை அல்லது எந்தவொரு சுதேச, ஹோமியோபதி அல்லது அக்குபன்ச்சர் சிகிச்சை என்பது விலக்கழிக்கப்பட்டுள்ளது.

(vi). இலங்கை எல்லைப்பகுதியில் காணப்படும் உள்ளக வைத்தியசாலை அனுமதி மருத்துவ சிகிச்சைகளுக்கு மட்டும் இந்த மேலதிக அனுகூலம் செல்லுபடியாகும். கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களுக்கமையவின்றி, வேறெந்த நிலைமைகளிலும் நிறுவனத்தினால் வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலத்தின் கீழ் எவ்வித மேலதிக கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது.
(அ) காப்புறுதி வருடமொன்றில் சகல விதமான வைத்தியசாலை அனுமதிகளுக்கும் நிறுவனத்தினால் நூற்றியெண்பது நாட்களுக்கு (180)தினசரி வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் செலுத்தப்பட்டுள்ளமை. மற்றும்/அல்லது,
(ஆ) காப்புறுதி காலப்பகுதியில் ஏற்படும் எந்தவொரு சுகயீனம்ஃநோய் நிலைக்காக நிறுவனத்தினால் தினசரி வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் நூற்றியெண்பது நாட்களுக்கு (180) செலுத்தப்பட்டுள்ளமை. குறித்த நோய் ஒன்றினால் ஏற்படக்கூடிய எந்தவொரு இரண்டாம் நிலை சுகயீன நிலையும், பிரதான நோய் நிலையாகவே கவனத்தில் கொள்ளப்படும். மற்றும/அல்லது,
(இ) காப்புறுதி அமுலிலுள்ள காலப்பகுதியில் தொடர்ச்சியாக எந்தவொரு காரணத்துக்காகவும் வைத்தியசாலையில் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டிருந்தமைக்காக நூற்றியெண்பது (180) நாட்களுக்கான கொடுப்பனவை நிறுவனம் மேற்கொண்டுள்ளமை. ஏற்கனவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வெளியேறி, முப்பது நாட்களுக்குள் (30) வைத்தியசாலை அனுமதிக்கப்படுவது என்பது மீண்டும் அதே நோய் நிலையுடன் தொடர்புடைய ஒரு காரணத்துக்காக என கவனத்தில் கொள்ளப்படும்.

(vii). விபத்து அல்லது நோய் காரணமான முழுமையானதும், நிரந்தரமானதுமான அங்கவீன அனுகூலத்தை (TPS) நிறுவனம் ஏற்றுக்கொண்டால் அல்லது விபத்தின் காரணமாக முழுமையானதும் நிரந்தரமானதுமான அங்கவீன அனுகூலத்தை (TPA) அல்லது விபத்து அல்லது நோய் காரணமான முழுமையான நிரந்தரமான அங்கவீன அனுகூலத்தை (WP) விட்டுக்கொடுத்தல். பிரதான ஆயுள் காப்புறுதியாளருக்கான வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம் முடிவடையும்.

(viii). இந்த அட்டவணையின் கீழ் வழங்கப்படும் அனுகூலங்களுக்கான கோரிக்கை மூலமான எந்தவொரு கொடுப்பனவையும் பெறுவதற்கு சட்டபூர்வமான பிரதிநிதி, நியமிக்கப்பட்டவர், பயன்பெறுநர் ஆகியோர் உரிமையற்றவராவர்.

(ix). இந்த அனுகூலத்தின் கீழ் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு எத்தனை காப்புறுதிகளுக்கும் செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய தொகை இரு பது ஆயிரம் 20,000/- ஆகும்.

**3.8.8 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய தவிர்ப்புக்கள்**

பின்வரும் நிலைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புடைய வகையில் ஆயுள் காப்புறுதிதாரரின் உயிரிழிப்பு சம்பவிக்குமாயின், வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலத்தின் கீழ் எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை நிறுவனம் கொண்டிருக்காது,

Specimen

(i) தற்கொலை முயற்சி அல்லது சுயமாக அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மற்றும்/ அல்லது

(ii) மதுபானம், போதைப்பொருட்கள் அல்லது மனமயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வஸ்துக்களை மிகையாக உட்கொள்வதால் விளையும் விபத்துகள் அல்லது நோய்கள் மற்றும் போதையுடன் வாகனம் ஓட்டுதல் அடங்காலாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருத்தல் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மட்டத்தை விடவும் கூடுதலான அளவு மதுபானம் இரத்தத்தில் கலந்திருக்கையில் வாகனம் ஓட்டுதல் மற்றும்/அல்லது

(iii) காப்புறுதியில் அல்லது கம்பனியின் வேறு திருத்தங்களில் விபரிக்கப்பட்டவாறு, காப்புறுதி ஊர்ஜிதமாக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னதாக காப்புறுதி செய்தவர/ வாழ்க்கைத்துணை பிரேரணை படிவத்தின் /தனிநபர் விண்ணப்பப் படிவத்தின் சுகாதாரப் பிரகடனப் பிரிவில் எழுத்து மூலம் பிரகடனம் செய்து அவற்றை கம்பனி ஏற்றுக் கொண்டிருந்தாலன்றி, முன்னர் இருந்திருக்கக்கூடிய நிலைமைகள் மற்றும்/அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட விமானச் சேவை நிறுவனத்தில் கட்டணம் செலுத்திய பயணி என்ற நிலைக்கு அப்பால் விமானப் போக்குவரத்து அல்லது விமானச் சாகசத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நிகழக்கூடிய விபத்து, அந்த சமயத்தில் காப்புறுதியாளர் விமானத்தில் எதுவித கடமைகளையோ அங்கு செல்ல வேண்டிய தேவைகளையோ கொண்டிருக்காத நிலை மற்றும்/அல்லது

(v) யுத்தம் மற்றும் யுத்தத்துடன் ஒப்பிடக்கூடிய நிலைமைகள், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு பகையாளியின் செயல், ஆயுத மோதல்கள், (போர்பிரகடனம் செய்து அல்லது செய்யாமல் நிகழும்) போர் போன்ற சம்பவங்கள், சிவில் யுத்தம், கலகம், கிளர்ச்சி, புரட்சி, அபகரிப்பு அல்லது எந்தவொரு பொது அல்லது உள்ளூராட்சி அரசாங்கம் அல்லது அதிகார சபையின் உத்தரவின் பிரகாரத்திலான தேசியமயமாக்கல் எந்தவொரு அரசாங்கத்தையும் வன்முறையை பிரயோகித்து கவிழ்க்க முனையும் நோக்கத்தை கொண்ட எந்தவொரு நிறுவனத்தினதும் பெயரால் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய வகையில் இயங்கக்கூடிய நபரொருவரின் செயல்கள் மற்றும்/அல்லது

(vi) பாதுகாப்பு படைகளின் அல்லது விமானப் படையின் கடல் அல்லது இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆயுதப் பயன்பாடு தேவைப்படுகின்ற அல்லது பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களை போன்றவர்களை தாக்கும் நோக்கில் இராணுவ அதிகாரிகள் உத்தரவிற்கமைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கேற்றல் மற்றும்/அல்லது

(vii) அணுசக்தி அபாயங்கள்: உதாரணமாக அணுசக்தியின் தாக்கங்களுக்கு உட்படுதல் (அணுக்கசிவு, அணுக்கசிவால் விளையக்கூடிய நச்சித்தன்மை, அணுசக்திப் பின்விளைவுகள்) அல்லது எந்தவொரு வகையும் சேர்ந்த அணுக் கழிவு அல்லது இரசாயனக் கலப்பால் விளையும் நச்சுத்தன்மை மற்றும்/அல்லது

(viii) ஸ்கூபா டைவிங், மோட்டார் சைக்கிளோட்டம், பரசூட் விளையாட்டு, மலையேறுதல், மலைகளில் தொங்குதல் அல்லது பாதங்களைப் பயன்படுத்தாத ஓட்டப்பந்தயங்கள், துடுப்பு வலித்தல், மங்கீஜம்ப், வேட்டையாடுதல், ஸ்ரீபல் சேஸிங், போலோ விளையாட்டு, குளிர்கால விளையாட்டுக்கள், ஐஸ் ஹொக்கி போன்றவை உள்ளடக்கிய ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத அபாயகரமான நடவடிக்கைகள் அல்லது கம்பனி எழுத்துமூலம் இணக்கம் கண்டிருந்தாலன்றி தொழில்சார் மட்டத்திலான ஏதேனும் விளையாட்டுக்கள். மற்றும்/அல்லது

(ix) பனிமலைச்சரிவுகள், மண்சரிவுகள், பூகம்பம், வெள்ளம், பூகம்பங்களால் அல்லது எரிமலைக்குமுறல்களால் ஏற்படக்கூடிய சுனாமி அல்லது பேரலைகள், புயல், சூறாவளி, சுழல் காற்று போன்றவை அடங்கலாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத இயற்கைப் பேரிடர்கள் மற்றும்/அல்லது

(x) பரீட்சார்த்த சிகிச்சைகள் மற்றும் பயொப்ஸி, எண்டஸ்கொபி, லப்ரஸ்கொபி, ஆர்த்ரொஸ்கொபி, முதலான (ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத) முற்றுமுழுதான நோயறியும் சிகிச்சைகள் மற்றும்/அல்லது

(xi) பற்சிகிச்சை அல்லது பற்சிகிச்சை செயன்முறை மற்றும்/அல்லது

Specimen

(xii) வாழ்க்கை மாற்றம் (மாதவிடாய் நிற்றல்), கர்ப்பந்தரித்தல், கருச்சிதைவு, கருக்கலைப்பு, பிரசவத்திற்குப் பிந்திய செயன்முறைகள், பிரசவம், மருத்துவ தேவைக்காக தானாக கர்ப்பத்தை கலைத்தல் ஆகியவை சார்ந்த சத்திரசிகிச்சை மற்றும்/அல்லது

(xiii) தொற்றுத் தடைக்காப்பு, விந்தூட்டல் (உதாரணம்: செயற்கை முறை விந்தூட்டல்), தொற்றுத் தடக்காப்பை மாற்றுதல், பால்மாற்ற சத்திரசிகிச்சைகள், செயற்கை கருத்தரிப்பு (IVF), பலோப்பியன் குழாய் மாற்ற நடவடிக்கைகள் (GIFT), முளையத்தை இடமாற்றம் செய்தல், zygote intra-fallopian transfer (ZIFT) கருமுட்டைத் தானம் மற்றும் அவை சார்ந்த செலவுகள் அல்லது மலட்டுத்தன்மை, குடும்பத் திட்டமிடல் சார்ந்த துணை மலட்டுத்தன்மை சேர்ந்த ஏதேனும் சத்திரசிகிச்சை அல்லது செயன்முறைகள் மற்றும/அல்லது

(xiv) பிறவிக்கூற்று நோய்கள் அல்லது பிறப்பு சார் கோளாறுகள், குறைபாடுகள், மரபணு சார் கோளாறுகளின் விளைவால் உருவாகக்கூடிய நிலைமைகள் (உதாரணமாக: டோவ்ன் சின்ட்ரம்) மற்றும/அல்லது

(xv) இந்தக் காப்புறுதியில் உள்ளடக்கப்படும் விபத்தின் விளைவால் அன்றியும், விபத்து நிகழ்ந்த திகதியில் இருந்து உயர்ந்தபட்சம் 180 நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட்டால் அன்றியும், கம்பனியின் எழுத்துமூலம் பெறப்பட்ட அங்கீகாரம் அன்றியும், சம்பந்தப்பட்ட உடற்பாகம் தொடர்பான உளவியல் செயற்பாட்டை விருத்தி செய்தல் என்பது முதன்மை நோக்கமாக அன்றியும், அவ்வாறு இல்லாவிட்டால் புறநீக்கம் செய்யப்பட்டதுமான நிலையில் மேற்கொள்ளப்படும் அழகுபடுத்தல் அல்லது பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் மற்றும/அல்லது

(xvi) அழகுபடுத்தலுக்காக மேற்கொள்ளப்படும் எரிகாய சத்திரசிகிச்சை மற்றும்/அல்லது

(xvii) தற்போதுள்ள மார்பகத்தை மாற்றியமைத்தல் மற்றும/அல்லது

(xviii)மூன்றாம் நபருக்கு நன்கொடையாக வழங்கும் உடலுறுப்பு மாற்ற சத்திரசிகிச்சை மற்றும்/அல்லது

(xix) மருத்துவ ரீதியாக தேவைப்படாத சிகிச்சைகள் மற்றும/அல்லது

(xx) மனநலம் குன்றிய நிலையில் விளையக்கூடிய வலிப்பு, மனநோய் நிலைமைகள், உளவியல் நடத்தைக் கோளாறுகளுக்கான சிகிச்சைகள் மற்றும்/அல்லது

(xxi) மருத்துவ ரீதியில் தேவைப்படாதவிடத்து பிறப்புறுப்பின் நுனித்தோல் இதழை அகற்றுதல் மற்றும்/அல்லது

(xxii) இந்தக் காப்புறுதி ஆரம்பமாகும் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை சார்ந்த பதார்த்தங்களை அப்புறப்படுத்துதல் மற்றும்/அல்லது

(xxiii)உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும்ஃஅல்லது தேசிய சட்டங்கள் உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த ஆட்கொல்லி நோய்கள் (நிறைநஅறைள/நுனெநஅறைள) மற்றும்/அல்லது

(xxiv)பாலியல் ரீதியாக பரவிய நோய்கள் (பால்வினை நோய்கள்) மற்றும்/அல்லது

(xxv) விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயத்தின் விளைவாக மற்றும் அதன் தொடர்ச்சியாக விளைந்த தொற்றுக்கள் தவிர நஞ்சூட்டலின் விளைவுகள் மற்றும்/அல்லது

(xxvi)தகைமையுள்ள மருத்துவர்ஃசத்திரசிகிச்சை நிபுணரால் மேற்கொள்ளப்படாத சிகிச்சைகள் அல்லது காப்புறுதி செய்தவரின் அல்லது வாழ்க்கைத்துணை, சகோதர சகோதரி, பெற்றோர் அல்லது பிள்ளை அடங்கலாக அவரது குடும்ப அங்கத்தவரின் சட்டபூர்வ வதிவிடத்தைத் கொண்டவரால் வழங்கப்படும் சேவை.

Specimen

### 3.9 மரணசெலவு அனுகூலம் (FEB)

#### 3.9.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் மரணச்செலவு அனுகூலம் (FEB) ஏற்புடையதெனத் தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே அவ்வாறான நன்மைகள் ஏற்புடையதெனக் கருதப்படும்.

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் பொதுவான நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும் கீழே குறிப்பிடப்படும் வீசேட நிபந்தனைகள் கட்டுபாடுகளுக்கு உட்பட்ட வகையிலும், காப்புறுதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கையிலும், இந்த அனுகூலம் சம்பந்தமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையிலும், காப்புறுதி செய்தவரது மரணம் சம்பவிக்குமானால் முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் மரணச்செலவு அனுகூலத் (FEB) தொகையை நிறுவனம் வழங்கும்.

#### 3.9.2 காத்திருக்கும் காலம்

இந்த அனுகூலத்தின் கீழான காப்பீடு என்பது பின்வரும் திகதிகளிலிருந்து முன்னூற்று அறுபத்தைந்து (365) நாட்களின் பின்னர் ஆரம்பிக்கும்,

(i) காப்புறுதிப் பத்திரத்தின் ஆரம்பத்திகதி அல்லது

(ii) காப்புறுதிப்பத்திரத்தின் திகதி அல்லது

(iii) காப்புறுதிப்பத்திரத்தின் கடைசி மீளாய்வு/புனரமைக்கபட்ட திகதி இவற்றில் எது பிந்தியதோ அதிலிருந்து.

#### 3.9.3 அறிவித்தலும் கோரிக்கைக்கான சான்றும்

மரணம் நிகழ்ந்த திகதியில் இருந்து ஏழு (07) நாட்களுக்குள் அனுகூலத்திற்கான கோரிக்கை நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது கிளை நிலையங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய காலப்பகுதிக்குள் அறிவித்தல் விடுக்கப்படாமை, அவ்வாறான கோரிக்கையை நிராகரிப்பதற்கான உரிமையை நிறுவனத்திற்கு வழங்கும். நிறுவனத்தின் கோரிக்கையின் அடிப்படையில் மரணத்திற்கான நிரூபனம், காப்புறுதிப்பத்திர உரிமைக்கான நிரூபனம் என்பனவற்றின் அடிப்படையிலேயே பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது தங்கியிருக்கும்.

#### 3.9.4 நிபந்தனைகள்

(i) மரணச்செலவு அனுகூலம் கீழ்காணும் வகையில் முடிவுக்கு வரும்.
   (அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவில் தெரிவிக்கப்பட்டவாறு இந்த அனுகூலத்தின் முடிவுத் திகதியன்று அல்லது
   (ஆ) ஆயுள் காப்புறுதி செய்தவர/செய்தவர்களின் 70 ஆவது பிறந்த தினத்திற்கு முன்னரான காப்புறுதிப்பத்திர வருடாந்த தினத்திலன்று அல்லது அதற்கு முன்னர்

(ii) மரண செலவு அனுகூலம் என்பது, தவணைக்கட்டணம் செலுத்தப்படாமலிருந்த முப்பதாவது (30) தினத்தில் காலாவதியாகும்.

(iii) பிரதான காப்புறுதி செயலிழக்கும்பட்சத்தில், மரண செலவு அனுகூலமும் செயலிழக்கும்.

(iv) கீழ்காணும் விதத்தில் இந்த அனுகூலம் செயற்படமாட்டாது
   (அ) இலாபத்தில் பங்கெடுத்தல்
   (ஆ) கைதுறப்பு பெறுமதி, ஒப்படைப்பு பெறுமதி அல்லது முதிர்ச்சிகாலப் பெறுமதி என்பனவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல்

(v) தனிநபர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல காப்புறுதிகளிலும் மரண செலவு அனுகூலத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்பீட்டுக்காக வழங்கப்படக்கூடிய அதியுச்ச கொடுப்பனவு ஐம்பதாயிரம்

Specimen

ரூபாயாகும் (ரூ. 250,000/-)

(vi) FEB என்ற அனுகூலத்திற்கு பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது என்ற தீர்மானம் இந்தக் காப்புறுதியின் பிரகாரமான வேறு எந்தக் கோரிக்கைகள்/அனுகூலங்கள் சம்பந்தமான பொறுப்புகளை நிறுவனம் ஏற்றுக்கொள்ள அதனை கட்டுப்படுத்தாது. அதே சமயத்தில், நிறுவனத்தின் பொறுப்புக்களுக்கு தீங்கிழைக்கும் வகையில் தப்பெண்ணத்தை உருவாக்காது இருத்தல் அவசியம்.

**3.9.5 இந்த அனுகூலத்திற்கு ஏற்புடைய விசேட தவிர்ப்புக்கள்** - இல்லை

Specimen

### 3.10 விபத்து அல்லது நோய் காரணமான முழுமையான, நிரந்தரமான அங்கவீனமுற்றவர்களுக்கான (WP) கட்டண அனுகூலம் விலக்கப்படல் (WP)

#### 3.10.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

விபத்து அல்லது நோய் காரணமான (WP) முழுமையான, நிரந்தரமான வலதுகுறைந்தவர்களுக்கான கட்டண அனுகூலம் விலக்கப்படல், முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் ஏற்படக்கூடியதெனத் தெரிவிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே அவ்வாறான நன்மைகள் ஏற்புடையதெனக் கருதப்படும்.

இந்தக் காப்புறுதி பத்திரத்தின் பொதுவான நிபந்தனைகள், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையிலும், ஆயுட்காப்புறுதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கையிலும், இந்த அனுகூலம் சம்பந்தமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையிலும், காப்புறுதி செய்தவர் விபத்து அல்லது நோய் காரணமாக முழுமையான நிரந்தரமான வலதுகுறைந்த நிலை, நூற்றியெண்பது (180) நாட்களுக்கு குறைவடையாமல் இருக்குமானால்,

(i) அடிப்படை அனுகூலங்கள், மரணத்தின் மீதான மேலதிக அனுகூலம் (LTB)
(ii) மரணச் செலவு அனுகூலம;(FEB),
(iii) வாழ்க்கைத்துணை மேலதிக அனுகூலம்(SPB),
(iv) சுவமக அனுகூலம் (SMB),
(v) வாழ்க்கைத்துணை சுவமக அனுகூலம் (SMB),
(vi) வாழ்க்கைத்துணைக்கான வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம;(HCB),
(vii) குழந்தைகளுக்கான வைத்தியசாலை ரொக்கப்பண அனுகூலம்(HCC),
(viii) குடும்ப வருமான அனுகூலம;(FIB),
(ix) பரிபூரண சத்திரசிகிச்சை அனுகூலம் (CSB)
(x) வாழ்க்கைத்துணைக்கான பரிபூரண சத்திரசிகிச்சை அனுகூலம் (CSB)
(xi) சிறுவர் சுகாதார அனுகூலம;(CHB),
(xii) வாழ்க்கைத்துணைக்கான யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலம் (USHP)
(xiii) குழந்தைகளுக்கான யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலம் (USHP)
(xiv) பெற்றோர்க்கான யூனியன் ஹெல்த் பிரிமியர அனுகூலம் (USHP)
(xv) வாழ்க்கைத்துணைக்கான யூனியன் ஹெல்த் 360 அனுகூலம் (UH360)
(xvi) குழந்தைகளுக்கான யூனியன் ஹெல்த் 360 அனுகூலம் (UH360)
(xvii) பெற்றோர்க்கானக்கான யூனியன் ஹெல்த் 360 அனுகூலம் (UH360)

#### 3.10.2.2 காத்திருக்கும் காலம்

தவணைக்கட்டண விலக்களிப்பு அனுகூலங்கள் பின்வரும் நிலைகளில் (30) தினங்களின் பின்னர் ஆரம்பிக்கும்,

(i). காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது

(ii). காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது

(iii). காப்பீடு மீளமைப்பு/புதுப்பிக்கப்பட்ட திகதி, அல்லது

(iv). அனுகூலம் உள்வாங்கப்பட்ட தினத்திலிருந்து நுற்றியெண்பது தினங்களின் (180) பின்னர் இவற்றில் எது பிந்தியதாக நிகழ்கின்றதோ.

#### 3.10.3 கட்டுப்பணத்தொகையை திருத்தியமைப்பதில் கம்பனிக்குள்ள உரிமைகள் மற்றும் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இந்த அனுகூலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணம் இது ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு (01) வருட காலத்திற்கு மாத்திரம் உத்தரவாதமுடையதாகும். காப்புறுதி செய்தவருக்கு (30) முப்பது நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படுவதையடுத்து கட்டுப்பண விகிதத்தை மீளாய்வு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டிருக்கும். அத்தகைய கட்டுப்பண மீளாய்வு அல்லது அனுகூலம் சம்பந்தமான நிபந்தனைகளும் வரையறைகளும் கப்புறுதிப்பத்திர அடுத்த ஆண்டு நிறைவில் இருந்து நடைமுறைக்கு வந்ததாக கருதப்படும்.



Specimen

### 3.10.4 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்

காப்புறுதி செய்தவரின் எத்தகைய குறிப்பிடத்தக்க தொழில் மாற்றமும் (14) பதின்நான்கு நாட்களுக்குள் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் கீழான நன்மைகளை பெறுவதற்குரிய இடங்கள் மீள அங்கீகரிக்கப்பட வேண்டும். தேகாரோக்கியம் சம்பந்தமான பிரேரணைகள் மற்றும் பிரகடனங்களில் விபரிக்கப்படதற்கு வேறுபாடான எந்தவொறு தொழிலிலும் நோய் ஏற்பட்ட காலத்தில் காப்புறுதி செய்தவர் ஈடுபட்டிருந்தால், அதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு கோரிக்கையிட்டும் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது.

### 3.10.5 அறிவித்தலும் கோரிக்கைகளுக்கான சான்றுகளும்

கோரிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஆதாரமான எந்தவொரு நோய் அல்லது காயம் தொடர்பாகவும் எழுத்துமூலமான அறிவித்தல் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்படுவது அவசியமாகும். அத்தகைய அறிவித்தல் நோய் அல்லது காயம் ஏற்பட்ட திகதியில் இருந்து அறுபது (60) நாட்களுக்குள் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அருகில் உள்ள கிளைக்கு விடுக்கப்பட வேண்டும். அவ்வாறான காலப்பகுதிக்குள் அறிவித்தலை விடுக்காதிருந்தால், முன்குறிப்பிட்ட கோரிக்கையை நிராகரிப்பதற்கான உரிமையை நிறுவனம் கொண்டிருக்கும். வலதுகுறைவு ஏற்பட்டதற்கான ஆதரங்களும் நிரூபணங்களும் நிறுவனத்திற்கு எந்தவொரு செலவும் ஏற்படாத வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

காப்புறுதி ஆண்டொன்றில் அனுகூலப் பெருக்கம் வழங்கப்பட்டதன் பின்னர், நஷ்டஈடு ஒன்று கோரப்பட்டிருந்தால்,அடுத்த ஆண்டுக்கான யூனியன் ஸ்மார்ட் பிரிமியர் அனுகூல காப்பீட்டு தொகை சுயமாக இருபத்தைந்து சதவீதத்தால் குறையும். ஆனாலும், இந்த குறைவுத் தொகையின் காரணமாக முதலாம் அட்டவணையின் இரண்டவாது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலத்தின் ஆரம்ப காப்பீட்டு தொகையை பார்க்கிலும் குறைவை ஏற்படுத்தாது.

**3.14.2 (III) அனுகூலத்தினைப் புதுப்பித்தல்**

வருடாந்த காப்பீட்டுத் தொகை முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அனுகூலப் பெருக்க பிரிவின் கீழான தொகை பயன்படுத்தப்பட்டிருந்தால், அனுகூலத்தினை புதுப்பிப்பதற்கான வாய்ப்பை நிறுவனம் ஒவ்வொரு காப்புறுதி ஆண்டிலும் ஒரு தடவை வழங்கும். முன்னர் ஏற்பட்ட சம்பவம் காரணமாக வைத்தியசாலை அனுமதி ஏற்படவில்லை என்பதை உறுதி செய்த பின்னர் இந்த அனுமதி வழங்கப்படும். எந்தவொரு காப்புறுதி ஆண்டிலும், அனுகூலம் புதப்பித்தல் தொகை யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலம் ஆரம்ப காப்பீட்டு தொகையின் நூறு (100%) சதவீதத்தை விஞ்சாது, எஞ்சிய காப்பீட்டுத் தொகை அடுத்த ஆண்டுக்கு முற்கொண்டு செல்லப்படமாட்டாது.

**3.14.2 (IV) வைத்தியசாலை அனுமதிக்கு முன் மற்றும் பின் அனுகூலம்**

வியாதி/சுகயீனம்/காயம் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும வைத்தியசாலை அனுமதியின் வேளை அச்சம்பவத்திற்கு மருத்துவ செலவீனங்கள் முப்பது நாட்களின் முன்னரும் சம்பவம் நடைபெற்று முப்பது நாட்களுக்கு பின்னரும் நோய் சார்பில் ஏற்படும் செலவுகள் யூனியன் ஹெல்த் பிரிமியர் அனுகூல உரிமை கோரிக்கையின் ஒரு பகுதியாக கொள்ளப்படும். ஒவ்வொரு தடவையும் வைத்தியசாலை அனுமதிக்கு முன்னர் மற்றும் பின்னர் வருடமொன்றில் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூல உச்சத் தொகை யூனியன் ஸ்மார்ட் பிரிமியர் அனுகூல காப்பீட்டுத் தொகையின் ஐந்து (5%) சதவீதமகும். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமைக்கு முன்னர் மற்றும் பின்னர் ஏற்பட்ட செலவுகளுக்கு ஆண்டுக்கான அடிப்படைகாப்பீடு மற்றும் கொடுப்பனவு எனும் அடிப்படையில் இந்த தொகை செலுத்தப்படும்.

**3.14.2 (V) தினசரி வைத்தியசாலை பண அனுகூலம் மற்றும் நோய் இனங்காணல் பரிசோதனைகளுக்கான செலவீனங்கள/பார்மசி**

அரசாங்க வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தாத சிகிச்சை பிரிவில் இருபத்து நான்கு மணி (24) நேரத்துக்கு மேல் அனுமதிக்கப்பட்டால், செலவுச் சிட்டை நஷ்டஈடு கோர முடியாத நிலையில், பின்வரும் அனுகூலங்கள் பொருத்தமானதாக அமையும்,

- தினசரி வைத்தியசாலை பண அனுகூலம், யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூல காப்பீட்டுத் தொகையின் தசம் ஐந்து சதவீதம் (0.5%) ஆகக்கூடியது 20,000 ரூபாய் வரையில் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலப்பகுதியால் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படும். ஒரு வருடத்திற்கு இதன் அதியுச்ச தொகை யூனியன் ஹெல்த் பிரிமியர் அனுகூல காப்பீட்டு தொகையின் 30 சதவீதமாகும் அல்லது/ மற்றும்

- வைத்தியசாலை அனுமதியின் போது நோய் இனங்காணல் பரிசோதனைகள் மற்றும் பார்மசி மருந்துச் செலவுகள் போன்றவற்றுக்கு வருடமொன்றிற்கு காப்பீடு செய்யப்பட்ட தொகையில் ஆகக்கூடியது எழுபது (70%) சதவீதம் வழங்கப்படும்.

Specimen

### 3.14.2 (VI) அவயவங்கள் தான செலவீனங்கள்

வைத்தியசாலை அனுமதி அனுகூலத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள இந்த அனுகூலப்பிரிவின் மூலமாக, அங்க தானம் செய்யும் நபர், தனது அங்கமொன்றை தானம் செய்வதற்காக வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்படும் போது ஏற்படும் செலவீனத்தை ஈடு செய்யும் வகையில் இந்த காப்பீடு அமைந்துள்ளது. அங்கத்தை பெறுபவர் (இந்த காப்புறுதி அனுகூலத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டவர்) காப்புறுதி நியதி மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஏற்றுக்கொள்ளத்தக்கவராக இருக்கும் நிலையில் அங்கதானம் செய்பவருக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். அங்கம் ஒன்று கட்டணத்துக்காக தானம் செய்யப்படும் பட்சத்தில் அதற்காக எவ்வித கொடுப்பனவுகளும் இந்த அனுகூலத்தின் கீழ் வழங்கப்படமாட்டாது என்பதுடன், குறித்த அங்கத்தை அகற்றி அதற்கான சிகிச்சையை பெறுவதற்காக வைத்தியசாலையில் தானம் செய்பவர் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், அதனை பெறுபவர் யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்தால் கொடுப்பனவு வழங்கப்படும்.

அரச வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தாத சிகிச்சைப் பிரிவில் அங்கத்தை தானம் செய்யும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தால் தினசரி வைத்தியசாலை அனுகூல கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

அங்க தான பிரிவில் வைத்தியசாலை அனுமதியின் போது மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுப்பனவும் அனுகூலத்தொகையினுள் வழங்கப்படும் கொடுப்பனவாக கவனத்தில் கொள்ளப்படும். அனுகூல அட்டவணையின் பிரிவுகள் 1 மற்றும் 2 ஆகியவற்றின் அடிப்படையில் அங்க தானம் செய்பவர் மேற்கொள்ளும் எந்தவொரு நஷ்டஈடு கோரலும் அனுகூல அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு அமைவானதாக அமைந்திருக்கும் என்பதுடன், குறித்த திட்டத்தின் அனுகூலத்தொகைக்கு அமைவானதாகவும் காணப்படும்.

### 3.14.2 (VII) செயற்கை உறுப்பு பொருத்துகைகள் மற்றும் அங்கம் உள்வைப்புகள்

காப்புறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைவாக வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு, காப்புறுதி செய்யப்பட்டவர் செயற்கை உறுப்பு பொருத்தப்பட வேண்டும் அல்லது அங்கம் உள்வைக்கப்பட வேண்டும் என்பதை மருத்துவ அதிகாரி உறுதி செய்யும் நிலையில், குறித்த செயற்கை உறுப்பு பொருத்துகை மற்றும் அங்கம் உள்வைப்புக்கான செலவை, முதல் அட்டவணையின் அனுகூல எல்லைத்தொகை நிர்ணயங்களுக்கமைய நிறுவனம் செலுத்தும்.

செயற்கை உறுப்பு பொருத்துகை என்பது காப்புறுதி செய்யப்பட்வரின் உடலின் எந்தவொரு அவயவத்தையும் அல்லது கண்ணை செயற்கை சாதனம் கொண்டு சீராக்கம் செய்து கொள்வது என பொருள்படும். பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் நிலையில், ஆயுள் காப்புறுதிதாரருக்கு எந்தவொரு செயற்கை உறுப்பையும் கொள்வனவு செய்வதற்கான செலவீனத்தை இந்த அனுகூலம் வழங்கும்,

- சுகயீனம் அல்லது விபத்தொன்றின் காரணமாக தனது அவயவம் அல்லது கண்பார்வையை ஆயுள் காப்புறுதிதாரர் இழந்துள்ள நிலையில் செயற்கை அவயவம் பொருத்த வேண்டிய நிலையை ஆயுள் காப்புறுதிதாரர் எதிர்கொண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருத்தல்.
- பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவரால் செயற்கை அவயவம் பொருத்தப்பட வேண்டும் என அறிக்கையிடப்பட்டிருத்தல்.
- வைத்தியசாலையிலிருந்து ஆயுள் காப்புறுதிதாரர் வெளியேறிய 180 தினங்களுக்குள் செயற்கை அவயவம் கொள்வனவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், இந்த அனுகூலத்துக்கான எல்லைப்பெறுமதி (அனுகூல அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போன்று) வைத்தியசாலையிலிருந்து வெளியேறல் தினத்தன்று காணப்படும் எல்லைப்பெறுமதிகளுக்கமைய அமைந்திருக்கும்

அவயவம் ஒன்று அல்லது கண் ஒன்றுக்கான செயற்கை அவயவ பொருத்தல்களுக்கு கொடுப்பனவை நிறுவனம் மேற்கொள்ளும். ஆனாலும், பிரிதொரு விபத்து அல்லது சுகயீனம் காரணமாக பாதிக்கப்பட்ட செயற்கை அவயவத்தை மீண்டும் மாற்ற வேண்டியேற்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் குறித்த செயற்கை அவயவத்துக்கான கொடுப்பனவை நிறுவனம் மேற்கொள்ளும். குறித்த செயற்கை அவயவத்தை மாற்றுவது, பழுதுபார்ப்பது அல்லது பராமரிப்பதற்கான செலவை நிறுவனம் ஏற்காது.

சத்திர சிகிச்சை செயற்கை உள்வைப்புகள் என்பது, சத்திர சிகிச்சை ஒன்றை மேற்கொள்ளும் போது தேவைப்படும் உள்வைப்பு அங்கங்களாகும். இந்த உள்வைப்பு அங்கங்கள் வைத்திய அதிகாரியின் அனுமதியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இருப்பதுடன், சத்திர சிகிச்சையின்பின் ஆயுள் காப்புறுதிதாரரின் உடலில் தங்கியிருப்பனவயாக கபணப்பட வேணடுய்.

Specimen

### 3.14.3 காத்திருக்கும் காலம்

யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் காப்புறுதி அனுகூலங்கள் பின்வரும் வேளைகளில் இருந்து தொண்ணூறு (90) தினங்களின் பின்னர் ஆரம்பிக்கும்,

i. காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது
ii. காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது
iii. காப்பீடு மீளமைப்பு / புதுப்பிக்கப்பட்ட திகதி

இவற்றுள் பிந்திய தினம்.

பின்வரும் தினங்களின் பின்னர் ஏற்படக்கூடிய விபத்துக்களின் காரணமான வைத்தியசாலை அனுமதி மற்றும் சத்திரசிகிச்சைகளுக்கான காத்திருக்கும் காலத்தை விலக்களிப்பதற்கான கவனத்தை கம்பனி செலுத்தும்,

i. காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது
ii. காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது
iii. காப்பீடு மீளமைப்பு / புதுப்பிக்கப்பட்ட திகதி

இவற்றுள் பிந்திய தினம்.

பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள சத்திரசிகிச்சைகள் அல்லது குறைபாடுகளுக்கு காத்திருக்கும் காலப்பகுதி பின்வரும் வேளைகளிலிருந்து முன்னூற்று அறுபத்தைந்து நாட்களாகும் (365).

i. காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது
ii. காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது
iii. காப்பீடு மீளமைப்பு / மறுநியமிக்கப்பட்ட திகதி

இவற்றுள் பிந்திய தினம்.

| Name of Surgery / Ailment | |
|---|---|
| 1 | Medical or Surgical management of Deviated Nasal Septum, diseases of Tonsils, Adenoids and Sinuses and related conditions (except Malignancy). |
| 2 | All types of Hernias and Benign Prostatic Hypertrophy. |
| 3 | Hydrocele / Varicocele / Spermatocoele. |
| 4 | Piles / Fissure / Fistula-in-Ano / Rectal Prolapse / Pilonidal Sinus. |
| 5 | Treatment of all gynecological conditions (Such as but not limited to Uterine Fibroid, Dysfunctional Uterine Bleeding, Hysterectomy, Uterine Prolapse, Endometriosis, Adenomyosis Uteri, Ovarian Cyst etc.) except those arising from malignancy. |
| 6 | Medical or Surgical management of Prolapsed Intervertebral Disc. |
| 7 | Skin and all internal cysts/tumors/nodules/ polyps/ganglions/lipomas of any kind unless malignant. |
| 8 | Calculus Diseases of any etiology. |
| 9 | Peripheral vascular diseases of any etiology, including treatment for Varicose veins. |
| 10 | All types of CRF and acute on chronic Renal Failures but not ARF, including Renal Failure due to Diabetes. |
| 11 | Osteoporosis / Pathological Fracture / Degenerative Joint Diseases including joint replacement surgeries. However, joint surgeries necessitated due to accidents would not be a part of this exclusion. |
| 12 | Cataract, Retinopathy and Retinal detachment. |

Specimen

காப்புறுதியின் முழுக்கால எல்லைக்கும் முறையாக கட்டுப்பணங்கள் செலுத்தப்படுமிடத்து காப்புறுதி ஆரம்பத்திலிருந்து 365 நாட்களின் பின்னர் மேற்குறித்த காத்திருக்கும் காலம் என்ற விடயத்தினை கம்பனி விலக்களித்துவிடும்.

மேலே குறிப்பிடப்பட்ட நோய்கள்/சத்திரசிகிச்சைகளுக்கான முன்னூற்று அறுபத்தை நாட்கள் (365) காத்திருக்கும் காலம் யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர், திட்டங்கள் 05 மற்றும் அதற்கு மேற்பட்டது (யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் ப்ளஸ் காப்பீட்டு தொகை ரூ. 500,000/- மற்றும் அதற்கு மேற்பட்டது) பொருத்தமானதாக அமைந்திருக்கும். எவ்வாறாயினும், மேற்படி நோய்கள் மற்றும் சத்திரசிகிச்சைகளுக்காக காப்புறுதி ஆரம்பிக்கப்பட்டு முதல் ஆண்டில், அனுகூலம் 50% ஆக, காப்புறுதி பத்திரத்தின் முதலாவது அனுகூல அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள அனுகூல எல்லை பெறுமதியின் ஆகக்கூடிய ரூ. 200,000 தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**யூனியன் அஷ்யூரன்ஸின் காப்புறுதிதாரராக திகழ்வதுடன், யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் ப்ளஸ் அல்லது யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர், திட்டத்தை பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தால்,**

### 3.14.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள காத்திருக்கும் காலம் பொருத்தமானதாக அமையாது.

காத்திருக்கும் காலம் என்பது நோய் நிலை கண்டறிதல் அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ வைத்தியசாலை அனுமதி மற்றும் / அல்லது சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் பொருத்தமானதாக அமையும். அத்துடன், காத்திருக்கும் காலப்பகுதியில் கண்டறியப்பட்ட நோய்களுக்கு காத்திருக்கும் காலப்பகுதியின் பின்னர் ஏற்படக்கூடிய வைத்தியசாலை அனுமதி மற்றும்/அல்லது சத்திர சிகிச்சைக்கு கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

### 3.14.5 காப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 24 மணிநேரத்துக்கு குறைந்த சத்திரசிகிச்சைகள்

**பின்வரும் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள 24 மணிநேரகாலத்துக்கும் குறைவான நேரம் தேவைப்படுவது நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளின் மூலம் சாத்தியமாகியுள்ளது. இதன் காப்பீடுகள், காப்புறுதி திட்டத்தின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விலக்களிப்புகளுக்கு உட்பட்டதாக அமைந்திருக்கும்.**

| | | |
|---|---|---|
| **Microsurgical operations on the middle ear** | 1 | Stapedectomy |
| | 2 | Revision of a stapedectomy |
| | 3 | Other operations on the auditory ossicles |
| | 4 | Myringoplasty (Type -I Tympanoplasty) |
| | 5 | Tympanoplasty (closure of an eardrum perforation/ reconstruction of the auditory ossicles) |
| | 6 | Revision of a Tympanoplasty |
| | 7 | Other microsurgical operations on the middle ear |
| **Other operations on the middle & internal ear** | 8 | Myringotomy |
| | 9 | Removal of a tympanic drain |
| | 10 | Incision of the mastoid process and middle ear |
| | 11 | Mastoidectomy |
| | 12 | Reconstruction of the middle ear |
| | 13 | Other excisions of the middle and inner ear |
| | 14 | Fenestration of the inner ear |
| | 15 | Revision of a fenestration of the inner ear |
| | 16 | Incision (opening) and destruction (elimination) of the inner ear |
| | 17 | Other operations on the middle and inner ear |

Specimen

| | | |
|---|---|---|
| **Operations on the nose & the nasal sinuses** | 18 | Excision and destruction of diseased tissue of the nose |
| | 19 | Operations on the turbinates (nasal concha) |
| | 20 | Other operations on the nose |
| | 21 | Nasal sinus aspiration |
| **Operations on the eyes** | 22 | Incision of tear glands |
| | 23 | Other operations on the tear ducts |
| | 24 | Incision of diseased eyelids |
| | 25 | Excision and destruction of diseased tissue of the eyelid |
| | 26 | Operations on the canthus and epicanthus |
| | 27 | Corrective surgery for entropion and ectropion |
| | 28 | Corrective surgery for blepharoptosis |
| | 29 | Removal of a foreign body from the conjunctiva |
| | 30 | Removal of a foreign body from the cornea |
| | 31 | Incision of the cornea |
| | 32 | Operations for pterygium |
| | 33 | Other operations on the cornea |
| | 34 | Removal of a foreign body from the lens of the eye |
| | 35 | Removal of a foreign body from the posterior chamber of the eye |
| | 36 | Removal of a foreign body from the orbit and eyeball |
| | 37 | Operation of cataract |
| **Operations on the skin & subcutaneous tissues** | 38 | Incision of a pilonidal sinus |
| | 39 | Other incisions of the skin and subcutaneous tissues |
| | 40 | Surgical wound toilet (wound debridement) and removal of diseased tissue of the skin and subcutaneous tissues |
| | 41 | Local excision of diseased tissue of the skin and subcutaneous tissues |
| | 42 | Other excisions of the skin and subcutaneous tissues |
| | 43 | Simple restoration of surface continuity of the skin and subcutaneous tissues |
| | 44 | Free skin transplantation, donor site |
| | 45 | Free skin transplantation, recipient site |
| | 46 | Revision of skin plasty |
| | 47 | Other restoration and reconstruction of the skin and subcutaneous tissues |
| | 48 | Chemosurgery to the skin |
| | 49 | Destruction of diseased tissue in the skin and subcutaneous tissues |

Specimen

| | | |
|---|---|---|
| **Operations on the tongue** | 50 | Incision, excision and destruction of diseased tissue of the tongue |
| | 51 | Partial glossectomy |
| | 52 | Glossectomy |
| | 53 | Reconstruction of the tongue |
| | 54 | Other operations on the tongue |
| **Operations on the salivary glands & salivary ducts** | 55 | Incision and lancing of a salivary gland and a salivary duct |
| | 56 | Excision of diseased tissue of a salivary gland and a salivary duct |
| | 57 | Resection of a salivary gland |
| | 58 | Reconstruction of a salivary gland and a salivary duct |
| | 59 | Other operations on the salivary glands and salivaryducts |
| **Other operations on the mouth & face** | 60 | External incision and drainage in the region of the mouth, jaw and face |
| | 61 | Incision of the hard and soft palate |
| | 62 | Excision and destruction of diseased hard and soft palate |
| | 63 | Incision, excision and destruction in the mouth |
| | 64 | Plastic surgery to the floor of the mouth |
| | 65 | Other operations in the mouth |
| **Operations on the tonsils & adenoids** | 66 | Transoral incision and drainage of a pharyngeal abscess |
| | 67 | Tonsillectomy without adenoidectomy |
| | 68 | Tonsillectomy with adenoidectomy |
| | 69 | Excision and destruction of a lingual tonsil |
| | 70 | Other operations on the tonsils and adenoids |
| **Orthopaedic Surgeries** | 71 | Trauma surgery and orthopaedics |
| | 72 | Incision on bone, septic and aseptic |
| | 73 | Closed reduction on fracture, luxation or epiphyseolysis with osteosynthesis |
| | 74 | Suture and other operations on tendons and tendon sheath |
| | 75 | Reduction of dislocation under GA |
| | 76 | Arthroscopic knee aspiration |
| **Operations on the breast** | 77 | Incision of the breast |
| | 78 | Operations on the nipple |
| **Operations on the digestive tract** | 79 | Incision and excision of tissue in the perianal region |
| | 80 | Surgical treatment of anal fistulas |
| | 81 | Surgical treatment of haemorrhoids |
| | 82 | Division of the anal sphincter (sphincterotomy) |
| | 83 | Other operations on the anus |
| | 84 | Ultrasound guided aspirations |
| | 85 | Sclerotherapy etc. |
| | 86 | Laparoscopic cholecystectomy |

Specimen

| | | |
|---|---|---|
| **Operations on the female sexual organs** | 87 | Incision of the ovary |
| | 88 | Insufflation of the Fallopian tubes |
| | 89 | Other operations on the Fallopian tube |
| | 90 | Dilatation of the cervical canal |
| | 91 | Conisation of the uterine cervix |
| | 92 | Other operations on the uterine cervix |
| | 93 | Incision of the uterus (hysterotomy) |
| | 94 | Therapeutic curettage |
| | 95 | Culdotomy |
| | 96 | Incision of the vagina |
| | 97 | Local excision and destruction of diseased tissue of the vagina and the pouch of Douglas |
| | 98 | Incision of the vulva |
| | 99 | Operations on Bartholin's glands (cyst) |
| **Operations on the prostate & seminal vesicles** | 100 | Incision of the prostate |
| | 101 | Transurethral excision and destruction of prostate tissue |
| | 102 | Transurethral and percutaneous destruction of prostate tissue |
| | 103 | Open surgical excision and destruction of prostate tissue |
| | 104 | Radical prostatovesiculectomy |
| | 105 | Other excision and destruction of prostate tissue |
| | 106 | Operations on the seminal vesicles |
| | 107 | Incision and excision of periprostatic tissue |
| | 108 | Other operations on the prostate |
| **Operations on the scrotum & tunica vaginalis testes** | 109 | Incision of the scrotum and tunica vaginalis testes |
| | 110 | Operation on a testicular hydrocele |
| | 111 | Excision and destruction of diseased scrotal tissue |
| | 112 | Plastic reconstruction of the scrotum and tunica vaginalis testes |
| | 113 | Other operations on the scrotum and tunica vaginalis testes |
| **Operations on the testes** | 114 | Incision of the testes |
| | 115 | Excision and destruction of diseased tissue of the testes |
| | 116 | Reconstruction of the testes |
| | 117 | Implantation, exchange and removal of a testicular prosthesis |
| | 118 | Other operations on the testes |

Specimen

| | | |
|---|---|---|
| **Operations on the spermatic cord, epididymis und ductusdeferen** | 119 | Surgical treatment of a varicocele and a hydrocele of the spermatic cord |
| | 120 | Excision in the area of the epididymis |
| | 121 | Epididymectomy |
| | 122 | Reconstruction of the spermatic cord |
| | 123 | Reconstruction of the ductus deferens and epidididymis |
| | 124 | Other operations on the spermatic cord, epididymis and ductus deferens |
| **Operations on the penis** | 125 | Operations on the foreskin |
| | 126 | Local excision and destruction of diseased tissue of the penis |
| | 127 | Amputation of the penis |
| | 128 | Plastic reconstruction of the penis |
| | 129 | Other operations on the penis |
| **Operations on the urinary system** | 130 | Cystoscopical removal of stones |
| **Other Operations** | 131 | Lithotripsy |
| | 132 | Coronary angiography |
| | 133 | Haemodialysis |
| | 134 | Radiotherapy for Cancer |
| | 135 | Cancer chemotherapy |

சத்திரசிகிச்சை பட்டியலின் முடிவு

### 3.14.6 தவணைக்கட்டணம் மற்றும் நியதி நிபந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கம்பனியின் அதிகாரம்

முதலாவது அட்டவணையின் பகுதி II இல் குறிக்கப்பட்டுள்ள இக்காப்பீட்டுக்காக செலுத்த வேண்டிய கட்டுப்பணம் காப்பீடு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு மட்டுமே உறுதி செய்யப்பட்டுள்ளது. தவணைக்கட்டணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது மற்றும்/அல்லது நியதி நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது அல்லது காப்புறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூலங்களை எதனையும் விலக்கழித்துக் கொள்வதற்கான அதிகாரத்தை எந்தவொரு காப்புறுதி ஆண்டு நிறைவிலும் கம்பனி கொண்டுள்ளது. காப்புறுதிதாரருக்கு முப்பது (30) நாட்களுக்கான அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னரே அந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் அவ் அறிவித்தலை தொடர்ந்து வரும் காப்புறுதி ஆண்டு நிறைவின் வேளை அது அமுலுக்கு வரும்.

### 3.14.7 தொழில் மாற்றம் பற்றிய அறிவித்தல்

தொழில்நிலையில் மாற்றம் ஏற்பட்டால் அது தொடர்பில் கம்பனிக்கு பதின்நான்கு (14) நாட்களினுள் எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும். இதற்கமைய காப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள இடர்கள் மீள மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும். வைத்தியசாலை அனுமதி மற்றும்/அல்லது சத்திரசிகிச்சையின் போது காப்புறுதிதாரர் விண்ணப்பப்படிவம் அல்லது பிரேரணை படிவம் அல்லது/மற்றும் சுகாதார அறிக்கையில் ஏற்கனவே வழங்கப்பட்ட தொழில்நிலையில் பணியாற்றாதவிடத்து கொடுப்பனவுகள் எதனையும் மேற்கொள்ளாமல் இருப்பதற்கான அதிகாரத்தை கம்பனி கொண்டுள்ளது.

### 3.14.8 அறிவித்தலும் கோரிக்கைக்கான சான்றுகளும்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அல்லது/மற்றும் சத்திரசிகிச்சை முன்னெடுக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று (3) நாட்களுக்குள் கம்பனியின் தலைமைக் காரியாலயத்துக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ளதை போல அறிவித்தல் வழங்க தவறும் பட்சத்தில் குறித்த நட்டஈட்டை வழங்காமலிருப்பதற்கான அதிகாரத்தை கம்பனி கொண்டுள்ளது.

Specimen

குறித்த அறிவித்தலை கம்பனி பெற்றுக் கொண்ட பின்னர், கோரிக்கையை பெறுவதற்கான அத்தாட்சிகளுடன் நிரப்பப்பட வேண்டிய ஆவணங்களை வழங்கும். பூர்த்தி செய்யப்பட்ட இந்த ஆவணங்கள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து பத்து (10) தினங்களுக்குள் கம்பனிக்கு மீள கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறுதி செய்யப்பட்ட அத்தாட்சி மற்றும் கட்டணப்பட்டியல்களின் அசல் பிரதிகள் மற்றும் கொடுப்பனவை மேற்கொண்ட பற்றுச்சீட்டுகள் போன்றன வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய முப்பது (30) தினங்களுக்குள் கம்பனிக்கு கிடைக்கும் வகையில், காப்புறுதிதாரரின் செலவில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சிகிச்சையை மேற்கொண்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனையை காப்புறுதிதாரர் கவனமாக பின்பற்ற வேண்டும் என்பதுடன், சிகிச்சை பெறுபேறுகள் பற்றிய முழு அறிக்கையொன்றை கம்பனிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

காப்பீடு செய்து கொண்ட நபர் மற்றும் அவரின் உறவினர்கள் அல்லது பொறுப்பாளர்கள், கம்பனியின் நிபுணர்களின் பார்வையிடும் விஜயங்களை அனுமதிக்க வேண்டும் என்பதுடன், அவசியமான சந்தர்ப்பங்களில் விசாரணைகளை மேற்கொள்ளவும் அனுமதிக்க வேண்டும். இவற்றில் தொழில் ரீதியாக அந்தரங்கம் பேணப்படும் கடப்பாட்டில் இருந்து நிபுணர்கள் விலக்கப்பட்டுள்ளனர்.

விபரிக்கப்பட்ட வழிமுறைகளை காப்பீடு செய்தவர் கடைப்பிடிக்காவிட்டால் இந்த காப்புறுதி பத்திரத்தின் பிரகாரமான எந்தவொரு அனுகூலத்தையும் வழங்க நிறுவனம் மறுப்பு தெரிவிக்க முடியும்.

### 3.14.9 நிபந்தனைகள்

(i) பின்வரும் சந்தர்ப்பங்களில் யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் காப்புறுதி காலாவதியாகும்,

(a) முதலாவது அட்டவணையின் இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைவாக அனுகூலம் காலாவதியாகும் திகதி அல்லது,

(b) காப்புறுதி வருட பூர்த்தியன்று, பின்வருவனவற்றில் எது முதலில் இடம்பெறுகிறதோ,

- காப்புறுதிதாரர் அல்லது அவரின் துணைக்கு/பெற்றொர்க்கு 70 வயது பூர்த்தியாகும் போது அல்லது
- குழந்தைக்கு 23 வயது பூர்த்தியாகும் போது.

(ii) தவணைக்கட்டணம் முப்பது (30) நாட்களுக்குள் செலுத்தப்படாதவிடத்து அனுகூலங்கள்செயலிழந்த நிலையை அடையும். இந்த காப்பீட்டை மீளமைப்பு அல்லது புதுப்பித்தல் செய்யாமலிருப்பதற்கான அதிகாரத்தை கம்பனி கொண்டுள்ளது. காப்பீடு மீளமைப்பு அல்லது புதுப்பித்தல் செய்யப்பட்டால், காத்திருக்கும் காலம் என்பது மீளமைப்பு அல்லது புதுப்பித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து செல்லுபடியாகும்.

(iii) பிரதான காப்புறுதி முடிவுறுத்தப்பட்டால், யூனியன் ஸ்மார்ட் பிரிமியர் அனுகூலமும் முடிவுறுத்தப்படும்.

(iv) இந்த சாருரை அனுகூலமானது,

(a) இலாபங்களில் பங்கேற்காது: அல்லது,

(b) கையளித்தல் பெறுமதி, செலுத்தி முடிக்கப்பட்ட பெறுமதி அல்லது முதிர்வு பெறுமதியை பெறாது.

(v) கைமாற்றப்பட்டவர், பிரதிகாரர் அல்லது பயனடைபவர் என எவரும் இந்த காப்புறுதி திட்டத்தினூடாக குறிப்பிடப்பட்டுள்ள அனுகூலங்களை அனுபவிக்க முடியாது.

(vi) அனுகூல அட்டவணையின் அனுகூல திட்டங்கள் 10 முதல் 17 வரை குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர்ந்த, இலங்கையினுள் மேற்கொள்ளப்படும் வைத்தியசாலை அனுமதிகள் மற்றும் சத்திர சிகிச்சைகள் ஆகியவற்றுக்கு மட்டுமே அனுகூலங்கள் வழங்கப்படும். யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் காப்பீடு, இரண்டு மில்லியன் ரூபாய் (2,000,000/-) பெறுமதிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், இந்த காப்பீட்டில் அனுகூலத்திட்டங்கள் 10 முதல் 17 வரை முதலாம் அட்டவணை - பகுதி1 குரிப்பிடப்பட்ட வாரு இலங்கை, மற்றும் உலகளாவிய ரீதியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா தவிர்ந்த நாடுகள் மேற்கொள்ளப்படும் வைத்தியசாலை அனுமதிகள் மற்றும் சத்திரசிகிச்சைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருக்கும்.

Specimen

(vii) யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலத்தில் ஒரு வருட காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படும் நட்டஈட்டுத் தொகை என்பது, யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலத் தொகையின் நூறு (100) சதவீதத்தை விஞ்சாது.

(viii) தனிநபர் ஒருவர் பெற்றுக் கொண்ட காப்புறுதி திட்டங்களில் உள்ளடங்கியுள்ள சகல யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலத்துக்குமான காப்பீட்டு தொகை நாற்பது மில்லியன் ரூபாயாக (4,000,000/-) மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ix) காப்புறுதிதாரர் தான் கொண்டுள்ள ஏனைய மருத்துவ காப்பீடுகள் பற்றிய விபரங்களை நிறுவனத்துக்கு அறிவிக்க வேண்டும். இந்த காப்புறுதி திட்டத்தில் உள்ளடங்கியுள்ள அனுகூலங்களுக்கு நிகரான வேறெந்த காப்புறுதியை காப்புறுதிதாரர் வைத்திருக்கும்பட்சத்தில், அவரின் மூலம் மேற்கொள்ளப்படும் நட்ட ஈட்டு கோரிக்கையின் போது, செலவு செய்த செலவுச்சிட்டை தொகையில் இதர காப்புறுதி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவை கழித்து வரும் தொகை வழங்கப்படும். இந்த தொகை, இந்த காப்புறுதி பத்திரத்தின் நியதி நிபந்தனைகளின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு உட்பட்டதாக அமையும்.

(x) யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர் அனுகூலத்திட்டம் (I) இலங்கை பிரஜைகள் மற்றும் (II) இலங்கையில் ஆகக்குறைந்தது ஆறு மாத காலமாக நிரந்தர வதிவிட முகவரியுடன் வசிப்போருக்கு பொருத்தமானதாக அமைந்திருக்கும். காப்புறுதிதாரர் இலங்கைக்கு வெளியே தொடர்ச்சியாக 90 நாட்களுக்கு வசிக்கும் பட்சத்தில் அனுகூலத்திட்டம் 10 முதல் 17 வரையிலான காப்பீடு இரத்துச்செய்யப்படும். ஆனாலும், இலங்கைக்கு காப்புறுதிதாரர் திரும்பும்பட்சத்தில் காப்புறுதித்திட்டத்தின் அனுகூலங்கள் செயற்படுத்தப்படும் என்பதுடன் முன்னர் உடன்பட்ட நியதி நிபந்தனைகளுக்கமைய அவை வழங்கப்படும்.

(xi) உலகளாவிய ரீதியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா தவிர்ந்த நாடுகள் சிகிச்சை பெற நேரிட்டால் அது தொடர்பில் நிறுவனத்திடமிருந்து எழுத்துமூலமான அனுமதியை பெற வேண்டும். வெளிநாட்டு வைத்தியசாலை அனுமதிகளின் போது ஏற்படும் வைத்தியசாலை செலவுகளுக்கு கொடுப்பனவுகளை மீள வழங்குவது இந்த காப்புறுதி நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைப்பெறுமதிகளுக்கமைய நிர்ணயிக்கப்படும். வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்படும் போது இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் நாணய மாற்று விகிதங்களின் பிரகாரம் இலங்கை ரூபாயில் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

(xii) நஷ்ட ஈட்டு கோரிக்கையை ஏற்க நிறுவனம் தீர்மானிக்கும் பட்சத்தில், தனது சுயதீர்மானத்தின் பிரகாரம் அந்த கொடுப்பனவை காப்புறுதிதாரருக்கு அல்லது குறித்த வைத்தியசாலைக்கு அல்லது இதர சம்பந்தப்பட்ட சேவை வழங்குநருக்கு மேற்கொள்ளும். வைத்தியசாலை அல்லது இதர சேவை வழங்குநருக்கு மேற்கொள்ளும் எந்தவொரு கொடுப்பனவும் முழுமையான மற்றும் இறுதியான கொடுப்பனவு செலுத்துகையாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இந்த அனுகூலத்துக்காக காப்புறுதிதாரருக்கு இந்த நஷ்டஈட்டு கோரிக்கைக்கு வழங்கப்பட்ட மொத்தத்தொகையாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(xiii) காப்புறுதி வருடமொன்றில் கோரப்படும் நஷ்டஈட்டில் கழிவுகளை மேற்கொள்வதற்கு காப்புறுதிதாரர் உடன்படும் நிலையில், காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுக்கான தெரிவுக்குரிய பெறுமதி ஏதேனுமொன்றை தெரிவு செய்தால், நஷ்டஈடுகளுக்கான செலவீனங்களை முதலில் காப்புறுதிதாரர் ஏற்க வேண்டும் (செலுத்தப்பட வேண்டியது மற்றும் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டது) அவ்வாறான தொகை கழிவுக்குட்படுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியிருக்கும் தொகை நஷ்டஈடாக வழங்கப்படும்.

### 3.14.10 இந்த அனுகூலத்துக்கு ஏற்புடைய தவிர்ப்புகள்

பின்வரும் காரணங்களினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைகள், வைத்தியசாலை அனுமதிகளுக்கு கம்பனியின் மூலம் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது,

(i) தற்கொலை முயற்சியின் காரணமாக ஏற்படும் காயங்கள் அல்லது சுய அல்லது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் காயங்கள்: மற்றும்/அல்லது,

(ii) அமிலப்பதார்த்தம், மருந்து அல்லது மதுபானம் போன்றவற்றின் அதீத பாவனையால் ஏற்படும் சிக்கலான நிலைகள் அல்லது சுகயீனங்கள் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தி ஏற்படும் விபத்துகளின் காரணமான காயங்கள்: மற்றும் / அல்லது,

Specimen

(iii) ஏற்கனவே இருக்கும் நிலைகள் (உதாரணம்: காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு முன்னரே கண்டறியப்பட்டிருந்தால், அல்லது படாமலிருந்தால், அல்லது அது தொடர்பான நிலைகளுக்கு சிகிச்சைகள் பெற்றால் அல்லது அறிகுறிகளை கொண்டிருந்தால் அவை மற்றும் காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு முன்பிருந்த நிலையுடன் நேரடியாக அல்லது.·.மற்றும் மறைமுகமாக தொடர்புகளை கொண்டிருப்பது). காப்புறுதி வழங்கிய திகதியன்று அல்லது முன்னதாக இவை காப்புறுதிதாரரால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டு, அதை கம்பனி எழுத்து மூலமாக ஏற்றுக் கொண்டிருந்தால் செல்லுபடியாகும்: மற்றும்/அல்லது,

(iv) யுத்தம் மற்றும் யுத்தம் அமுலிலுள்ள நிலைக்கு சமனான சூழல், படையெடுப்பு, வெளிநாட்டு எதிரியின் செயற்பாடு, பகையுணர்வு மற்றும் யுத்தத்துக்கு நிகரான செயற்பாடுகள் (போர் பிரகடம் செய்து அல்லது செய்யாமல்), உள்நாட்டு யுத்தம், கலவரம், கிளர்ச்சி, புரட்சி, பறிமுதல் அல்லது பொது அறிவித்தல் அல்லது உள்நாட்டு அரசாங்கம் அல்லது அதிகாரத்தின் மூலம் தேசியமயமாக்கல், அல்லது அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் அமைப்புகளுடன் தொடர்புடைய நபர்களின் செயற்பாடுகள்: மற்றும்/அல்லது,

(v) ஆயுதப் படையினரின் இராணுவ செயற்பாடுகள், கடல் அல்லது ஆகாய மார்க்கமான தாக்குதல்கள் மற்றும் ஆயுதம் தரித்த செயற்பாடுகளில் ஈடுபடல் அல்லது இராணுவ அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய பயங்கரவாதிகளுக்கு, கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்கள் அல்லது இதற்கு நிகரான செயற்பாடுகள்: மற்றும்/அல்லது,

(vi) அணு இடர்கள்:- உதாரணம்: அணுசக்தி செறிவூட்டல் (அணு கசிவுகள், கதிரியகம், தொற்று) அல்லது வேறு விதமான அணு கழிவுகள் அல்லது இரசாயன கழிவுகள்: மற்றும்/அல்லது,

(vii) ஆபத்தான செயற்பாடுகள், கடலடி நீச்சல், மோட்டார் சைக்களில் சாகசம், பரசூட்டில் பயணித்தல், தொங்கிய படி பாய்தல், குன்று அல்லது மலை ஏறுதல், ஓட்டப் போட்டி தவிர்ந்த ஏனைய வேறு விதமாை பந்தயங்கள், படகோட்டம், பாய்தல்கள், வேட்டையாடல், கோபுரத்தில் ஏறுதல், போலோ விளையாட்டு, குளிர்கால விளையாட்டுகள், ஐஸ் ஹொகி அல்லது நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய விளையாட்டுகள், கம்பனியால் எழுத்து மூலம் அனுமதிக்கப்படாவிடின், மற்றும்/அல்லது,

(viii) இயற்கை அனர்த்தங்கள்: பனிச்சரிவு, மண்சரிவு, நிலநடுக்கம், வெள்ளம், சுனாமி அல்லது எரிமலைகள் மற்றும் நிலநடுக்கத்தின் காரணமாக ஏற்படும் ஆழிப்பேரலைகள் அல்லது எரிமலை வெடிப்பு, சுழல்காற்றுகள்,புயல், சூறாவளி, டொனேடோ சுழல்காற்று, கடும்புயல்: மற்றும்/அல்லது,

(ix) பரிசோதனை சிகிச்சைகள் மற்றும் நோய் இனங்காணல் நடவக்கைகளுக்கான பயப்சி, என்டோஸ்கொபி, லப்ரோஸ்கொபி, ஆர்த்ரோஸ்கொபி, ஒ-ரே அல்லது ஆய்வு கூட பரிசோதனைகள்,ஏனைய இனங்காணல் செயற்பாடுகள் அல்லது ஏற்கனவே இருக்கும் எந்தவிதமான நோய், சுகயீனம் அல்லது காயம் நிலைக்கான இனங்காணல் ஆய்வுகள் ஆகியவற்றை வைத்தியசாலை அல்லது மருந்தகத்தில் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுவது: மற்றும் / அல்லது,

(x) கண்ணாடிகளின் செலவீனம், கொன்டாக்ட் லென்சஸ், கேட்டல் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் சாதனம், ஊன்றுகோல்கள், சர்க்கர நாற்காலிகள், செயற்கை அவயவங்கள், செயற்கை பற்கள், மற்றும் ஏனைய சகலவிதமான வெளி பாதிப்புகள், செயற்கை உறுப்புகள் பொருத்தல் மற்றும்/அல்லது சாதனங்கள் பொருத்தல், கம்பனியால் குறிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் செல்லுபடியாகும்: மற்றும்/அல்லது,

(xi) வாழ்க்கை வட்டத்தின் மாற்றம் காரணமாக ஏற்படும் சத்திர சிகிச்சைகள் (மாதவிடாய் நிறுத்தம்), கர்ப்பம், முறையற்ற கருத்தரிப்பு மற்றும் கருச்சிதைவு, குழந்தை பிரசவம், குழந்தை பேற்றை விருப்பம் இல்லாமல் செய்வது: மற்றும்/அல்லது,

(xii) கருத்தடை, செயற்கை கருவூட்டல், (உதாரணம்: செயற்கையான முறையில் விந்தணுசெலுத்தல்), கருத்தடையை இல்லாமல் செய்தல், பாலினமாற்ற சத்திர சிகிச்சைகள் அல்லது கருவுறாமை மற்றும் IVF முறை, GIFT செயன்முறைகள், ZIFT முறைகள், கரு மாற்றீடு, கருமுட்டை தானம் மற்றும் இது தொடர்பான செலவீனங்கள் மற்றும் இதர ஏனைய சத்திர சிகிச்சைகள் அல்லது செயன்முறைகள் கருவுறாமை, பகுதியளவு கருவுறாமை, குடும்பக் கட்டுப்பாட்டு காரணமாக



Specimen

மேற்கொள்வது: மற்றும்/அல்லது,

(xiii) பிறவி அல்லது பிரசவ குறைபாடுகள், நிறமூர்த்த குறைபாடு காரணமாக ஏற்படும் பிரச்சனைகள்: மற்றும்/அல்லது,

(xiv) மரபணு குறைபாடுகள் மற்றும் பரம்பரை கல வைப்பு/சத்திரசிகிச்சை/களஞ்சியப்படுத்தல்: மற்றும்/அல்லது,

(xv) சகல விதமான ஒப்பனை அல்லது அழகியல் சிகிச்சைகள், ஒளிவிலகல் தவறுக்கான லேசிக் சிகிச்சை அல்லது எகல விதமான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை. மோசமான காய நிலை அல்லது கடுமையான சுகயீன நிலை காரணமாக தேவை காணப்பட்டால் ஏற்புடையது: மற்றும்/அல்லது,

(xvi) நன்கொடை அடிப்படையில் அவயவங்கள் வழங்குவது அல்லது நன்கொடை கண்டறிதல் அல்லது சிகிச்சைக்காக செலவுகள்: மற்றும்/அல்லது,

(xvii) மருத்துவ ரீதியில் தேவையில்லாத சிகிச்சைகள் அல்லது அனுபவம் வாய்ந்த வைத்தியர் ஒருவரின் மூலம் பரிந்துரைக்கப்படாத சிகிச்சைகள் அல்லது நோய் நிலை அல்லது காயம் ஒன்றுக்கு சிகிச்சை அல்லாத வகையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை அல்லது செயற்பாடு: மற்றும்/அல்லது,

(xviii) சுயமாக ஏற்படும் வலிப்பு மற்றும் மனநிலை பாதிப்புகள், இதன் காரணமாக ஏற்படும் நிலைகள்: மற்றும்/அல்லது,

(xix) உடல் பருமன், பருமன் குறைப்பு அல்லது பருமனை பேணும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகள்: மற்றும்/அல்லது,

(xx) சுகயீனம், காயம் அல்லது நோய் தவிர்ந்த நிலைகளில் ஆணுறுப்பின் மேல் தோல் பகுதியை அகற்றல், அல்லது இதில் குறிப்பிடப்படாத வகையிலான காயம் ஏற்படல் அல்லது விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயம் ஆகிய நிலைகள்: மற்றும்/அல்லது,

(xxi) உத்தியோகபூர்வமாக (உலக சுகாதார தாபனம் மற்றும்/அல்லது தேசிய சட்டம் மூலம்) தொற்று நோய்/உலகம் முழுதும் பரவும் நோய் அல்லது அரசாங்கத்தின் இனங்காணல் திட்டங்கள்: மற்றும்/அல்லது,

(xxii) உடலுறவு ரீதியில் பரவிய நோய்கள் (பால்வினை நோய்கள்), எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுவது அல்லது HIV வைரஸ் கொண்டவர் மூலம் ஏற்படுவது அல்லது மாறுபடும்/விகார வைரஸ்கள் அல்லது மற்றும் ஏதேனும் அறிகுறிகள் அல்லது எயிட்ஸ் நிலைகளுக்கு நிகரான விடயங்கள்: மற்றும்/அல்லது,

(xxiii) தகைமை வாய்ந்த வைத்தியர் சத்திர சிகிச்சை நிபுணரின் மூலம் மேற்கொள்ளப்படாத சிகிச்சைகள் அல்லது காப்புறுதி செய்யப்பட்ட நபரின் முகவரியை தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக கொண்டுள்ள நபரின் மூலம் வழங்கப்பட்ட சேவைகள் அல்லது காப்புறுதி செய்யப்பட்ட குடும்பத்தை சேர்ந்தவர் ஒருவராக திகழல், மனைவி, சகோதரன், சகோதரி, பெற்றோர் அல்லது பிள்ளை: மற்றும்/அல்லது,

(xxiv) ஆங்கில மருத்துவ முறையல்லாத, இயற்கைசிகிச்சைகள், அக்குபன்ச்சர், நறுமணசிகிச்சைகள் மற்றும் ஆயுர்வேத சிகிச்சைகள்: மற்றும்/அல்லது,

(xxv) ஏதேனும் சேவைக்கட்டணங்கள், VAT, வரி, கட்டணங்கள், அனுமதிக்கட்டணங்கள் போன்ற வைத்தியசாலையின் மூலம் அறவிடப்படும் சகல விதமான கட்டணங்கள் போன்றன: மற்றும்/அல்லது,

(xxvi) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் சுய நலனுக்காக பாவிக்கப்பட்ட தொலைக்காட்சி, தொலைபேசி போன்ற பிரத்தியேக சொகுசுக்கான பொருட்கள் மீதான செலவீனம்: மற்றும்/அல்லது,

Specimen

(xxvii) வீட்டில் பயன்படுத்தப்பட்ட வெளிக்கள மருத்துவ சாதனங்கள் (Sleep Apnoea Syndrome, Continuous Ambulatory Peritoneal Dialysis (C.A.P.D) மற்றும் Oxygen concentrator மீதான செலவீனங்கள்: மற்றும்/அல்லது,

(xxviii) விபத்து ஒன்றினால் ஏற்பட்டாலன்றி, மேற்கொள்ளப்படும் பற் சிகிச்சை அல்லது சத்திர சிகிச்சைகள்: மற்றும்/அல்லது,

(xxix) உடல் தேறல், பொது இயலாமை,"கீழே-விழும்" தன்மை, ஓய்வின் மூலம் குணப்படுத்தல், பிறப்பிலிருந்து காணப்படும் உள்ளக குறைபாடு மற்றும் அல்லது வெளிப்புற குறைபாடுகள்/ நோய்கள்/காயங்கள்: மற்றும்/அல்லது,

(xxx) வக்சீன்கள் அல்லது எந்தவிதமான நோய்த்தடுப்புகள்: மற்றும்/அல்லது,

(xxxi) நோய் நிலைகள் தேறும் வகையில் மருத்துவர் ஒருவரால் பரிந்துரைக்கப்பட்ட நிலைகள் தவிர உள்ளெடுக்கப்படும் விற்றமின்கள், டொனிக்கள், போசாக்கு உணவுபொருட்கள்: மற்றும்/அல்லது,

(xxxii) விபத்தொன்றினால் ஏற்பட்டு கம்பனியால் அவை ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையிலிருப்பதை தவிர, இடைச்சுவரை சீர் செய்யும் வகையிலான சத்திரசிகிச்சை மற்றும் மிகையாக வளர்ந்துள்ள கட்டிகள்: மற்றும்/அல்லது,

(xxxiii) வெளிநோயாளர் நோய் இனங்காணல், மருத்துவ மற்றும் ஒரேநாளில் செய்யக்கூடியதான பட்டியலிடப்பட்ட சத்திரசிகிச்சை தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் அல்லது சிகிச்சைகள், பரிந்துரைக்கப்படாத மருந்துகள் மற்றும் மருந்து விநியோகங்கள், ஹோர்மோன் மாற்று சிகிச்சை, பாலின மாற்றம் அல்லது அதனுடன் எவ்விதத்திலும் தொடர்புடைய சிகிச்சை: மற்றும் / அல்லது,

(xxxiv) வைத்தியசாலை அல்லது மருத்துவ நிலையத்தில் இருபத்து நான்கு (24) மணி நேரத்தினுள் நோய் இனங்காணல் பரிசோதனை செய்யப்பட்டு, இந்த காப்புறுதிக்கமைவாக மேலதிக சிகிச்சைகள் எதுவும் தேவைப்படாத நிலைகளில் ஏற்படும் செலவீனங்கள். இதில் சிகிச்சை எதுவுமின்றி வைத்தியசாலையில் தங்கியிருப்பதற்கான கட்டணம் அல்லது மருத்துவரின் மூலம் சிகிச்சை வழங்கப்படாத நிலைகள்: மற்றும் / அல்லது,

(xxxv) ஓய்வு இல்லங்கள் போன்ற பகுதிகளில் பெற்றுக் கொள்ளப்படும் சிகிச்சைகள், மதுபானம் மற்றும் போதைப் பொருட்களிலிருந்து விடுபெற தங்கியிருந்து பெற்றுக் கொள்ளும் சிகிச்சைகள் அல்லது மனநிலை மற்றும் உளநிலை பிரச்சனைகளுக்காக பெற்றுக் கொள்ளும் சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளும் பகுதிகள். இவ் அமைப்புகள் வைத்தியசாலைகள் என முறையாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. மற்றும்/அல்லது,

(xxxvi) நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத இலங்கைக்கு அப்பால் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள். மற்றும்/அல்லது,

(xxxvii) நீரியல் சுகாதாரம், ஸ்பாக்கள், இயற்கை பராமரிப்பு கிளினிக்கள் போன்றவற்றில் பெற்றுக் கொண்ட சிகிச்சைகள்.

Specimen

### 3.15. யூனியன் ஹெல்த் 360 (UH360)

#### 3.15.1 முக்கிய நோக்கம் மற்றும் அனுகூலங்கள்

யூனியன் ஹெல்த் 360 (UH360) என்பது இந்தக் காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தால் செல்லுபடியாகும் என்பதுடன், இந்த காப்புறுதி ஒப்பந்தத்தின் முதலாவது அட்டவணையின் பிரிவு II இல் காண்பிக்கப்பட்டுள்ளதற்கமைய அமைந்திருக்கும்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் யூனியன் ஹெல்த் 360 அனுகூலம் செயல் நிலைக்கு வரும்:

(i). காப்புறுதி செய்யப்பட்ட நபர், (முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய வைத்தியரின் பரிந்துரைக்கு அமைய அவரின் அனுமதியுடன் இருபத்தி நான்கு (24) மணி நேரத்துக்கு மேலதிகமாக தொடர்ச்சியாக வைத்தியசாலையில் சுகயீனம் அல்லது விபத்து காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தால் மற்றும் / அல்லது இந்த “4” பிரிவுக்கமைய குறிப்பிடப்பட்ட நபரில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தால், மற்றும் இதன் காரணமாக வைத்தியசாலை செலவு சிட்டை ஒன்றை செலுத்தியதன் விளைவாக ஒரு செலவு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், அல்லது

(ii) யூனியன் ஹெல்த் 360 அனுகூலத்தின் தினசரி வைத்தியசாலை பண அனுகூலம் என்பது, இந்த அட்டவணையின் 3.15.2.2 (V) இல் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, காப்பீடு செய்யப்பட்டவர் இருபத்து நான்கு மணி (24) நேரத்துக்கு மேலாக வைத்தியரின் பரிந்துரையுடன் சுகயீனம் அல்லது விபத்து காரணமாக கொடுப்பனவு இல்லாத அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருத்தல். அல்லது

(iii). காப்புறுதி செய்யப்பட்ட நபருக்கு வைத்தியத் தேவையின் பிரகாரம், வைத்தியரின் அனுமதியுடன் பிரிவு 3.15.2.2 (VIII) வழமையான பற்சிகிச்சை அனுகூலம், பிரிவு 3.15.2.5 (X) வழமையாக மூக்குக்கண்ணாடி அனுகூலம் பெற்றுக் கொள்ளஃமருந்துகளைக் கொள்வனவு செய்ய நேர்ந்தால், அதன் காரணமாக எழும் செலவு.

ந்த காப்பீடு என்பது ,ந்த காப்புறுதிப்பத்திரத்தின் பொது நியதி நிபந்தனைகளுக்கு உட்படும் என்பதுடன், கீழே தரப்பட்டுள்ள குறித்த நியதி மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்படும்.

#### 3.15.2 அனுகூலத் தொகை

இந்த காப்புறுதிப்பத்திரத்தின் முதல் அட்டவணையில் மற்றும் 2.15.2.2 (i) பிரிவில் வழங்கப்பட்டுள்ள அனுகூல அட்டவணையில் குறித்த அனுகூலத்துக்கான தகைமையை பொறுத்து ஏற்பட்ட செலவீனங்களை கம்பனி மீள வழங்கும். வைத்தியர ஒருவரின் பரிந்துரைக்கமைய, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையை / சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டமையை / மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்தமையை உறுதி செய்யும் வகையில் விவரங்களைக் கொண்ட முழுமையான கட்டணப் பட்டியல் மற்றும் கட்டணம் செலுத்தியமையை உறுதி செய்யும் பற்றுச் சீட்டு போன்றவற்றை கம்பனியினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சமயத்தில், மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின் விளைவாக அல்லது சத்திர சிகிச்சையின் காரணமாகவோ அல்லது அதன் விளைவாகவோ ஏற்படக்கூடிய விளைவுகள் எதற்கும் கம்பனி பொறுப்பேற்கமாட்டாது.

காப்புறுதி செய்திருப்பவர் காப்புறுதி தவணைக் காலத்தில் மேற்கொள்ளப்படும் எத்தனை சத்திரசிகிச்சைகளுக்காகவும் நட்டஈடு கோர முடியும் எனினும், குறித்த ஆண்டுக்காக வழங்கப்பட்டுள்ள உச்ச மட்டத் தொகை வரையான கொடுப்பனவுகளையே கம்பனி வழங்கும். குடும்ப அலகாக இந்த அனுகூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், முழுக்குடும்பத்துக்குமான வருடாந்த அனுகூல எல்லை, காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு சமமானதாக அமைந்திருக்கும் என்பதுடன், இந்த அனுகூலம் யூனியன் ஹெல்த் 360 காப்புறுதி ஒப்பந்தத்தின் முதலாம் அட்டவணையில் பெயரிடப்பட்டுள்ள காப்பீடு செய்யப்பட்டவர், முதலாம் காப்புறுதிதாரர் அவர்/அவர்களின் பெற்றோர் அவரின் வாழ்க்கைத் துணை மற்றும் 23 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். தனிநபர் ஒருவர் கம்பனியில் பெற்றுக் கொண்டுள்ள சகல காப்புறுதிகளிலும் உள்ளடங்கியுள்ள யூனியன் ஹெல்த் 360, யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் பிரிமியர், யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் ப்ளஸ், யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் மற்றும் யூனியன் மெடிகார்ட் போன்ற காப்பீடுகளின் அதியுயர் அனுகூலத்தொகை அறுபது மில்லியன் (60,000,000/-) ரூபாய்க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

Specimen

### 3.15.2 (I) அனுகூல அட்டவணை

| அனுகூல அட்டவணை (வரையறைகள் இல. ரூ. இல) | திட்டம் 1/2 | திட்டம் 3/4 | திட்டம 5/6 | திட்டம 7/8 | திட்டம 9/10 | திட்டம 11/12 | திட்டம 13/14 | திட்டம 15/16 |
|---|---|---|---|---|---|---|---|---|
| புவியியல் அமைவிட காப்பீடு | இலங்கையில் மாத்திரம் அல்லது இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா | | | | காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா அல்லது ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா தவிர்ந்த உலகளாவ-ிய நாடுகள | | | |
| வருடாநத் ஒடடு மொதத் எலன் லப் பெறுமதி (AOL) – காபப் றீ செயப் பப் டட் வருடாநத் தொகை (இல.ரூ.) | இல. ரூ. 300,000/- | இல. ரூ. 500,000/- | இல. ரூ. 750,000/- | இல. ரூ. 1,000,000/- | இல. ரூ. 2,000,000/- | இல. ரூ. 3,000,000/- | இல. ரூ. 4,000,000/- | இல. ரூ. 5,000,000/- |
| செலவுகளின் வெவ்வேறு பிரிவுகளுக்கு எல்லைப் பெறுமதி பொருத்தமானதாக அமையும | | | | | | | | |

| | | |
|---|---|---|
| 1 | வைத்தியசாலை அனுமதி அனுகூலம் | வைத்தியசாலையில் தங்கியிருக்கும் அறை மற்றும் ஐஊரு சிகிச்சைப் பிரிவுக்கான அனுகூலத்தொகை காப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஆகக்கூடியது 30மூ ஆகும். |
| | (ய) தினசரி வைத்தியசாலை அறை மற்றும் தங்கியிருப்பு அனுகூலம் | |
| | இலங்கையில் நாளொன்றுக்கான ஆகக்கூடிய அறை, தங்கியிருப்பு செலவுகள் | தனிப்பட்ட, தனிநபருக்கான குளிரூட்டப்பட்ட அறை. ஏற்புடையதற்கு அப்பாலான அறை பிரிவை கா-ப்புறுதிதாரர் பெற்றுக் கொண்டால், தகைமையுடைய காப்புறுதித் தொகையில் சீரான 25% இணைந்த கொடுப்பனவு ஏற்புடையதாக அமைந்திருக்கும். இலங்கையினுள் மேற்கொள்ளப்படும் வைத்தியசாலை அனுமதிகளின் போது மொத்த வைத்தியசாலை கட்டணப் பட்டியல் மீது இணைந்த கொடுப்பனவு பொருத்தமானதாக அமையாது. எவ்வாறாயினும், வாடிக்கையாளர் உயர்ந்த அறை வகையை தெரிவு செய்திருந்தால் வித்தியாசப்படும் அறைக்கான கட்டணத் தொகையை செலுத்த வேண்டும். |
| | இலங்கைக்கு அப்பால் நாளொன்றுக்கான ஆகக்கூடிய அறை, தங்கியிருப்பு செலவுகள் | |
| | (டி) தினசரி ICU - அறை மற்றும் தங்கியிருப்பு அனுகூலம | |
| | இலங்கையில் நாளொன்றுக்கான ஆகக்கூடிய அறை, தங்கியிருப்பு செலவுகள் | அசல் கட்டணங்களுக்கமைய அமைந்திருக்கும். |
| | இலஙன் ககக் அப்பால் நாளொனறு கக் ான ஆககக ் டிய அறை, தஙகியிருபபு செலவுகள் | |
| 2 | சத்திரசிகிச்சை அனுகூலங்கள் (சத்திரசிகிச்சை நிபுணர், மயக்கமருந்தளிப்பவர், மருத்துவ சிகிச்சையாளர், ஆலோசகர்கள், நிபுணர்களின் கட்டணங்களைக் கொண்டிருக்கும்) | (i) அறவீட்டுக்கமைய வழங்கப்படும், குறித்த அறவீடு சேவை வழங்குநரின் வழமையான கட்டணமாக இருப்பதுடன், அமைவிடத்தில் காணப்படும் நியம கட்டணப் பெறுமதிகளை விட அதிகரிக்காமலும் சூழ்நிலைகளுக்கமைய நிய ாயமானதாகவும் இருக்க வேண்டும்.<br><br>(ii) வெளிநாட்டு சிகிச்சையாயின், நாளொன்றுக்கு 2 விஜயங்கள் எனும் உச்ச வரம்பு நிர்ணயிக்க-ப்பட்டுள்ளது. |
| 3 | ஏனைய வைத்தியசாலை சேவைகள் மற்றும் வழங்கல்கள் அனுகூலம. (சததிரிசிகிசச்ை கூட கட்டணஙகள், மயகக் மருநந்து, குருதி, ஒடசிசன், மருநதுகள், மருததுவசாரா சேவைகள் தவிரந்த்வை) | (i) அறவீட்டுக்கமைய வழங்கப்படும், குறித்த அறவீடு சேவை வழங்குநரின் வழமையான கட்டணமாக இருப்பதுடன், அமைவிடத்தில் காணப்படும் நியம கட்டணப் பெறுமதிகளை விட அதிகரிக்காமலும் சூழ்நிலைகளுக்கமைய நிய ாயமானதாகவும் இருக்க வேண்டும்.<br><br>(ii) வெளிநாட்டு சிகிச்சையாயின், நாளொன்றுக்கு 2 விஜயங்கள் எனும் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| 4 | நோயாளர் காவு வண்டி கட்டணங்கள | (i) அறவீட்டுக்கமைய வழங்கப்படும். ஆகக்கூடியது காப்பீடு செய்யப்பட்ட தொக கயில் 2மூ ஆகும்.<br>(ii) காப்புறுதி ஆண்டில் ஒரு தடவை மாத்திரம் அனுகூலம் செலுத்தப்படும், அனுமதி பெற்ற நோயாளர் காவு வண்டிச் சேவை பயன்படுத்தப்பட்டிருந்தால் மாத்திரம் ந்ட்ஈடு செலுத்தப்படும |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இல. ரூ. 6,000/- | இல. ரூ. 10,000/- | இல. ரூ. 15,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 40,000/- | இல. ரூ. 60,000/- | இல. ரூ. 80,000/- | இல. ரூ. 100,000/- |

Specimen

| அனுகூல அட்டவணை (வரையறைகள் இல. ரூ. இல) | | திட்டம் 1/2 | திட்டம் 3/4 | திட்டம 5/6 | திட்டம 7/8 | திட்டம 9/10 | திட்டம 11/12 | திட்டம 13/14 | திட்டம 15/16 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| புவியியல் அமைவிட காப்பீடு | | இலங்கையில் மாத்திரம் அல்லது இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா | | | | காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா அல்லது ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா தவிர்ந்த உலகளாவிய நாடுகள | | | |
| வருடாநத் ஒடடு மொதத் எலலை் லப் பெறுமதி (AOL) – காபப் டீ செயய் பப் டட் வருடாநத் தொகை (இல.ரூ.) | | இல. ரூ. 300,000/- | இல. ரூ. 500,000/- | இல. ரூ. 750,000/- | இல. ரூ. 1,000,000/- | இல. ரூ. 2,000,000/- | இல. ரூ. 3,000,000/- | இல. ரூ. 4,000,000/- | இல. ரூ. 5,000,000/- |
| செலவுகளின் வெவ்வேறு பிரிவுகளுக்கு எல்லைப் பெறுமதி பொருத்தமானதாக அமையும | | | | | | | | | |
| 5 | நாள் சிகிச்சை சத்திரசிகிச்சைகள் (24 மணி நேரத்துக்கு குறைவான காலப்பகுதிக்கு உள்நோயாளராக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவது) | (i) காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கமைய சத்திரசிகிச்சைகள் அல்லது சிகிச்சைகளுக்கு மாத்திரம் காப்பீடளிக்கப்படும்.<br>(ii) தெரிவு செய்யப்பட்ட நாள் சத்திர சிகிச்சைகளுக்கு மாத்திரம் காப்பீடளிக்கப்படும்.<br>(iii) வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு சத்திரசிகிச்சைகள் அல்லது சிகிச்சைகள் போன்றன இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | | | | | | | |
| 6 | வைத்தியசாலை அனுமதிக்கு முன்னரான செலவீன அனுகூலம் (தனியார் அல்லது அரச வைத்தியசாலைகள் போன்ற அனைத்துக்கும் ஏற்புடையதாக அமையும்) | வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் 30 நாட்கள் வரை காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 5% வரை செலுத்தப்படும். காப்பீடு செய்யப்பட்ட தொகையின் உப எல்லைப் பிரிவாக இது அமைந்திருக்கும் என்பதுடன், வைத்தியசாலை அனுமதிப்புக்கு காரணமாக அமைந்த நோய் இனங்காணல் பரிசோதனைகளுக்கான செலவுகளுக்கு மாத்திரமே செலுத்தப்படும் என்பதுடன் காப்புறுதியின் கீழ் பிரதான உரிமை கோரலை உள்வாங்கப்படக்கூடிய இருப்பதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும். | | | | | | | |
| | | இல. ரூ. 15,000/- | இல. ரூ. 25,000/- | இல. ரூ. 37,500/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 100,000/- | இல. ரூ. 150,000/- | இல. ரூ. 200,000/- | இல. ரூ. 250,000/- |
| 7 | வைத்தியசாலை அனு மதியின் பின்னரான செலவுகளுக்கான அனுகூலம் (தியார் அல்லது அரச வைத்தியசாலைகள் போன்ற அனைத்துக்கும் ஏற்புடையதாக அமையும்) | வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்னர் 30 நாட்கள் வரை காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 5% வரை செலுத்தப்படும். காப்பீடு செய்யப்பட்ட தொகையின் உப எல்லைப் பிரிவாக இது அமைந்திருக்கும் என்பதுடன், வைத்தியசாலை அனுமதிப்புக்கு காரணமாக அமைந்த நோய் இனங்காணல் பரிசோதனைகளுக்கான செலவுகளுக்கு மாத்திரமே செலுத்தப்படும் என்பதுடன் காப்புறுதியின் கீழ் பிரதான உரிமை கோரலை உள்வாங்கப்படக்கூடிய இருப்பதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும். | | | | | | | |
| | | இல. ரூ. 15,000/- | இல. ரூ. 25,000/- | இல. ரூ. 37,500/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 100,000/- | இல. ரூ. 150,000/- | இல. ரூ. 200,000/- | இல. ரூ. 250,000/- |
| 8 | அங்கங்கள் நன்கொடை செலவுகள் | அங்கம் பெறுபவரின் ஒட்டு மொத்த காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கமைய வழங்கப்படும் என்பதுடன், அங்கம் நன்கொடை வழங்குநரின் வைத்தியசாலை அனுமதிக்கான கட்டணங்களுக்கு மாத்திரம் செலுத்தப்படக்கூடியது. | | | | | | | |
| 9 | செயற்கை அங்கங்கள் மற்றும் உள்வைப்புகள | அறவீட்டுக்கமைய வழங்கப்படும், காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 20% வரை உப எல்லைப் பெறுமதிக்கமைய வழங்கப்படும். | | | | | | | |
| | | இல. ரூ. 60,000/- | இல. ரூ. 100,000/- | இல. ரூ. 150,000/- | இல. ரூ. 200,000/- | இல. ரூ. 400,000/- | இல. ரூ. 600,000/- | இல. ரூ. 800,000/- | இல. ரூ. 1,000,000/- |
| 10 | வெளிநாட்டு சிகிச்சைகள் | திட்டமிடப்பட்ட வைத்தியசாலை அனுமதியாயின், காப்புறுதி வழங்குநருக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, கண்டிப்பாக முன் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அவசர வைத்திய தேவைகளின் போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 48 மணி நேரத்தினுள் காப்புறுதி வழங்குநருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் தகைமை வாய்ந்த அறைப் பிரிவை விட உயர்ந்த அறையை பெற்றுக் கொண்டால், தகைமை வாய்ந்த காப்புறுதி உரிமை கோரல் தொகை மீது இணைந்த கட்டணமான 25% தொகை ஏற்புடையதாக அமையும். | | | | | | | |
| 11 | கட்டணம் செலுத்தாத சிகிச்சைப் பிரிவில் வைத்தியசாலை அனு மதி (அரச வைத்தியசாலை அல்லது அதற்கு நிகரானவை) (புவியியல் அமை விடம் - இலஙள் கயில் மாதகிரம) | நாளொன்றுக்கான காப்பீடு செய்யப்பட்ட தொகையில் 0.5%, நாளொன்றுக்கு ஆகக்கூடியது ரூ. 20,000 வரை. | | | | | | | |
| | | இல. ரூ. 1,500/- | இல. ரூ. 2,500/- | இல. ரூ. 3,750/- | இல. ரூ. 5,000/- | இல. ரூ. 10,000/- | இல. ரூ. 15,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- |
| | | வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வைத்தியரினால் பரிந்துரைக்கப்படும் பரிசோதனைகள் மற்றும் மருந்துப் பொருட்களுடன் தொடர்புடைய செலவுகளுக்கான உரிமை வழங்கல்கள் காப்பீடு செய்யப்பட்ட தொகையில் வருடமொன்றுக்கு ஆகக்கூடியது 70% வரை வழங்கப்படும். | | | | | | | |

Specimen

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | நலன் காப்பீடு (புவியியல் அமைவிடம் - இலஙன் கயில் மாத்திரம்) | தொடர்ச்சியான இரு ந்'டஈடு கோரிக்கைகள் மேற்கொள்ளப்படாத காப்புறுதி ஆண்டுகளின் பின்னர், இலங்கை தனியார் சுகாதார பராமரிப்பு சேவைகள் ஒழுங்குபடுத்தல் சம்மேளனத்தில் (PHSRC) பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் சுகாதார பரிசோதனைகளுக்கு காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 2% வரை ஆகக்கூடியது ரூ. 50,000 செலுத்தப்படும். | | | | | | | |
| | | இல. ரூ.<br>6,000/- | இல. ரூ.<br>10,000/- | இல. ரூ.<br>15,000/- | இல. ரூ.<br>20,000/- | இல. ரூ.<br>40,000/- | இல. ரூ.<br>50,000/- | இல. ரூ.<br>50,000/- | இல. ரூ.<br>50,000/- |
| 13 | வைத்தியசாலை அனுமதி கட்டணங்கள் | அறவீட்டின் பிரகாரம் அறவிடப்படும், ஒவ்வொரு அனுமதியின் போதும் காப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஆகக்கூடியது 5மூ ஐ உப எல்லைப் பெறுமதியாக காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 70% இனுள் வழங்கப்படும். | | | | | | | |
| 14 | வழமையான பல் சிகிச்சை அனுகூலம் (அமைவிடம் இலங்கையில் மாத்திரம்) | இந்தக் கொடுப்பனவு வருடாந்த காப்பீடு செய்யப்பட்ட தொகையின் உப எல்லைப் பெறுமதியாக அமைந்திருக்கும். | | | | | | | |
| | | இல. ரூ.<br>5,000/- | இல. ரூ.<br>5,000/- | இல. ரூ.<br>5,000/- | இல. ரூ.<br>10,000/- | இல. ரூ.<br>10,000/- | இல. ரூ.<br>10,000/- | இல. ரூ.<br>10,000/- | இல. ரூ.<br>10,000/- |
| 15 | பாரதூரமான நோய்களுக்கான மீளளிப்பு அனுகூலம | காப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஆகக்கூடியது 50% ஆக அமைந்திருக்கும் என்பதுடன், வாழ்நாள் எல்லைப் பெறுமதியாக காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 2 மடங்காக அமைந்திருக்கும். ஒவ்வொரு ஆண்டும் 50% ஆக மீளமைக்கப்பட்ட போதிலும், ஆகக்கூடிய வாழ்நாள் எல்லைப் பெறுமதிக்கமைய அமைந்திருக்கும். | | | | | | | |
| | | இல. ரூ.<br>150,000/- | இல. ரூ.<br>250,000/- | இல. ரூ.<br>375,000/- | இல. ரூ.<br>500,000/- | இல. ரூ.<br>1,000,000/- | இல. ரூ.<br>1,500,000/- | இல. ரூ.<br>2,000,000/- | இல. ரூ.<br>2,500,000/- |
| தெரிவுக்குரிய அனுகூலங்கள் | | | | | | | | | |
| 16 | பிரசவ அனுகூலம் (புவியியல் அமைவிடம் - இலங்கையில் மாத்திரம்) | NVD<br>50,000/-<br>LSCS<br>100,000/- | NVD<br>75,000/-<br>LSCS<br>150,000/- | NVD<br>75,000/-<br>LSCS<br>150,000/- | NVD<br>75,000/-<br>LSCS<br>150,000/- | NVD<br>75,000/-<br>LSCS<br>150,000/- | NVD<br>100,000/-<br>LSCS<br>200,000/- | NVD<br>100,000/-<br>LSCS<br>200,000/- | NVD<br>100,000/-<br>LSCS<br>200,000/- |
| 17 | வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலம் (புவியியல் அமைவிடம் - இலங்கையில் மாத்திரம்) | இல. ரூ.<br>7,500/- | இல. ரூ.<br>12,500/- | இல. ரூ.<br>18,750/- | இல. ரூ.<br>25,000/- | இல. ரூ.<br>50,000/- | இல. ரூ.<br>50,000/- | இல. ரூ.<br>50,000/- | இல. ரூ.<br>50,000/- |

Specimen

| அனுகூல அட்டவணை (வரையறைகள் இல. ரூ. இல) | திட்டம் 17/18 | திட்டம் 19/20 | திட்டம 21/22 | திட்டம 23/24 | திட்டம 25/26 | திட்டம 27/28 | திட்டம 29/30 | திட்டம 31/32 |
|---|---|---|---|---|---|---|---|---|
| புவியியல் அமைவிட காப்பீடு | இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா அல்லது அமெரிக்கா, கனடா தவிர்ந்த உலகளாவிய ரீதியில், காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கமைய | | | | | | | |
| வருடாநத் ஒடடு மொதத் எலல் லப் பெறுமதி (AOL) – காபப் டுீ செயய் பப் டட் வருடாநத் தொகை (இல.ரூ.) | இல. ரூ. 10,000,000/- | இல. ரூ. 15,000,000/- | இல. ரூ. 20,000,000/- | இல. ரூ. 25,000,000/- | இல. ரூ. 30,000,000/- | இல. ரூ. 40,000,000/- | இல. ரூ. 50,000,000/- | இல. ரூ. 60,000,000/- |
| செலவுகளின் வெவ்வேறு பிரிவுகளுக்கு எல்லைப் பெறுமதி பொருத்தமானதாக அமையும | | | | | | | | |

| | | |
|---|---|---|
| 1 | வைத்தியசாலை அனுமதி அனுகூலம் | வைத்தியசாலையில் தங்கியிருக்கும் அறை மற்றும் ஐஊரு சிகிச்சைப் பிரிவுக்கான அனுகூலத்தொகை காப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஆகக்கூடியது 30% ஆகும். |
| | (ய) தினசரி வைத்தியசாலை அறை மற்றும் தங்கியிருப்பு அனுகூலம் | |
| | இலங்கையில் நாளொன்றுக்கான ஆகக்கூடிய அறை, தங்கியிருப்பு செலவுகள் | தனிப்பட்ட, தனிநபருக்கான குளிரூட்டப்பட்ட அறை. ஏற்புடையதற்கு அப்பாலான அறை பிரிவை காப்புறுதிதாரர் பெற்றுக் கொண்டால், தகைமையுடைய காப்புறுதித் தொகையில் சீரான 25% இணைந்த கொடுப்பனவு ஏற்புடையதாக அமைந்திருக்கும். |
| | இலங்கைக்கு அப்பால் நாளொன்றுக்கான ஆகக்கூடிய அறை, தங்க-ியிருப்பு செலவுகள் | இலங்கையினுள் மேற்கொள்ளப்படும் வைத்தியசாலை அனுமதிகளின் போது மொத்த வைத்தியசாலை கட்டணப் பட்டியல் மீது இணைந்த கொடுப்பனவு பொருத்தமானதாக அமையாது. எவ்வாறாயினும், வாடிக்கையாளர் உயர்ந்த அறை வகையை தெரிவு செய்திருந்தால் வித்தியாசப்படும் அறைக்கான கட்டணத் தொகையை செலுத்த வேண்டும். |
| | (டி) தினசரி ICU - அறை மற்றும் தங்கியிருப்பு அனுகூலம | |
| | இலங்கையில் நாளொன்றுக்கான ஆகக்கூடிய அறை, தங்கியிருப்பு செலவுகள் | அசல் கட்டணங்களுக்கமைய அமைந்திருக்கும். |
| | இலஙன் ககக் அப்பால் நாளொனறு் கக் ான ஆககக்ூ டிய அறை, தஙகியிருபப்ு செலவுகள் | |
| 2 | சத்திரசிகிச்சை அனுகூலங்கள் (சத்திரசிகிச்சை நிபுணர், மயக்கமருந்தளிப்பவர், மருத்துவ சிகிச்சையாளர், ஆலோசகர்கள், நிபுணர்களின் கட்டணங்களைக் கொண்டிருக்கும்) | (i) அறவீட்டுக்கமைய வழங்கப்படும், குறித்த அறவீடு சேவை வழங்குநரின் வழமையான கட்டணமாக இருப்பதுடன், அமைவிடத்தில் காணப்படும் நியம கட்டணப் பெறுமதிகளை விட அதிகரிக்காமலும் சூழ்நிலைகளுக்கமைய நிய ாயமானதாகவும் இருக்க வேண்டும்.<br><br>(ii) வெளிநாட்டு சிகிச்சையாயின், நாளொன்றுக்கு 2 விஜயங்கள் எனும் உச்ச வரம்பு நிர்ணயிக்க-ப்பட்டுள்ளது. |
| 3 | ஏனைய வைத்தியசாலை சேவைகள் மற்றும் வழங்கல்கள் அனுகூலம. (சததிரிசிகிசச்ை கூட கடட்ணஙகள், மயகக் மருநத்ு, குருதி, ஒடசிசன், மருநத்ுகள், மருததுவ்சாரா சேவைகள் தவிரநத்வை) | (i) அறவீட்டுக்கமைய வழங்கப்படும், குறித்த அறவீடு சேவை வழங்குநரின் வழமையான கட்டணமாக இருப்பதுடன், அமைவிடத்தில் காணப்படும் நியம கட்டணப் பெறுமதிகளை விட அதிகரிக்காமலும் சூழ்நிலைகளுக்கமைய நிய ாயமானதாகவும் இருக்க வேண்டும்.<br><br>(ii) வெளிநாட்டு சிகிச்சையாயின், நாளொன்றுக்கு 2 விஜயங்கள் எனும் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| 4 | நோயாளர் காவு வண்டி கட்டணங்கள | (i) அறவீட்டுக்கமைய வழங்கப்படும். ஆகக்கூடியது காப்பீடு செய்யப்பட்ட தொை கயில் 2% ஆகும்.<br><br>(ii) காப்புறுதி ஆண்டில் ஒரு தடவை மாத்திரம் அனுகூலம் செலுத்தப்படும், அனுமதி பெற்ற நோயாளர் காவு வண்டிச் சேவை பயன்படுத்தப்பட்டிருந்தால் மாத்திரம் ந்ட்ஈடு செலுத்தப்படும |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இல. ரூ. 200,000/- | இல. ரூ. 300,000/- | இல. ரூ. 400,000/- | இல. ரூ. 500,000/- | இல. ரூ. 600,000/- | இல. ரூ. 800,000/- | இல. ரூ. 1,000,000/- | இல. ரூ. 1,200,000/- |

specimen

| | | அனுகூல அட்டவணை (வரையறைகள் இல. ரூ. இல) | திட்டம் 17/18 | திட்டம் 19/20 | திட்டம 21/22 | திட்டம 23/24 | திட்டம 25/26 | திட்டம 27/28 | திட்டம 29/30 | திட்டம 31/32 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புவியியல் அமைவிட காப்பீடு | | இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா அல்லது அமெரிக்கா, கனடா தவிர்ந்த உலகளாவிய ரீதியில், காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கமைய | | | | | | | |
| | வருடாநத் ஒடடு மொதத் எலஎ் லப் பெறுமதி (AOL) – காபப் டீ செயய் பப் டட் வருடாநத் தொகை (இல.ரூ.) | | இல. ரூ. 10,000,000/- | இல. ரூ. 15,000,000/- | இல. ரூ. 20,000,000/- | இல. ரூ. 25,000,000/- | இல. ரூ. 30,000,000/- | இல. ரூ. 40,000,000/- | இல. ரூ. 50,000,000/- | இல. ரூ. 60,000,000/- |
| | செலவுகளின் வெவ்வேறு பிரிவுகளுக்கு எல்லைப் பெறுமதி பொருத்தமானதாக அமையும | | | | | | | | | |
| 5 | நாள் சிகிச்சை சத்திரசிகிச்சைகள் (24 மணி நேரத்துக்கு குறைவான காலப்பகுதிக்கு உள்நோயாளராக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவது) | | (i) காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கமைய சத்திரசிகிச்சைகள் அல்லது சிகிச்சைகளுக்கு மாத்திரம் காப்பீடளிக்கப்படும்.<br>(ii) தெரிவு செய்யப்பட்ட நாள் சத்திர சிகிச்சைகளுக்கு மாத்திரம் காப்பீடளிக்கப்படும்.<br>(iii) வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு சத்திரசிகிச்சைகள் அல்லது சிகிச்சைகள் போன்றன இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | | | | | | | |
| 6 | வைத்தியசாலை அனுமதிக்கு முன்னரான செலவீன அனுகூலம் (தனியார் அல்லது அரச வைத்தியசாலைகள் போன்ற அனைத்துக்கும் ஏற்புடையதாக அமையும்) | | வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் 30 நாட்கள் வரை காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 5% வரை செலுத்தப்படும். காப்பீடு செய்யப்பட்ட தொகையின் உப எல்லைப் பிரிவாக இது அமைந்திருக்கும் என்பதுடன், வைத்தியசாலை அனுமதிப்புக்கு காரணமாக அமைந்த நோய் இனங்காணல் பரிசோதனைகளுக்கான செலவுகளுக்கு மாத்திரமே செலுத்தப்படும் என்பதுடன் காப்புறுதியின் கீழ் பிரதான உரிமை கோரலை உள்வாங்கப்படக்கூடிய இருப்பதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும். | | | | | | | |
| | | | இல. ரூ. 500,000/- | இல. ரூ. 750,000/- | இல. ரூ. 1,000,000/- | இல. ரூ. 1,250,000/- | இல. ரூ. 1,500,000/- | இல. ரூ. 2,000,000/- | இல. ரூ. 2,500,000/- | இல. ரூ. 3,000,000/- |
| 7 | வைத்தியசாலை அனு மதியின் பின்னரான செலவுகளுக்கான அனுகூலம் (தியார் அல்லது அரச வைத்தியசாலைகள் போன்ற அனைத்துக்கும் ஏற்புடையதாக அமையும்) | | வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்னர் 30 நாட்கள் வரை காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 5% வரை செலுத்தப்படும். காப்பீடு செய்யப்பட்ட தொகையின் உப எல்லைப் பிரிவாக இது அமைந்திருக்கும் என்பதுடன், வைத்தியசாலை அனுமதிப்புக்கு காரணமாக அமைந்த நோய் இனங்காணல் பரிசோதனைகளுக்கான செலவுகளுக்கு மாத்திரமே செலுத்தப்படும் என்பதுடன் காப்புறுதியின் கீழ் பிரதான உரிமை கோரலை உள்வாங்கப்படக்கூடிய இருப்பதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும். | | | | | | | |
| | | | இல. ரூ. 500,000/- | இல. ரூ. 750,000/- | இல. ரூ. 1,000,000/- | இல. ரூ. 1,250,000/- | இல. ரூ. 1,500,000/- | இல. ரூ. 2,000,000/- | இல. ரூ. 2,500,000/- | இல. ரூ. 3,000,000/- |
| 8 | அங்கங்கள் நன்கொடை செலவுகள் | | அங்கம் பெறுபவரின் ஒட்டு மொத்த காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கமைய வழங்கப்படும் என்பதுடன், அங்கம் நன்கொடை வழங்குநரின் வைத்தியசாலை அனுமதிக்கான கட்டணங்களுக்கு மாத்திரம் செலுத்தப்படக்கூடியது. | | | | | | | |
| 9 | செயற்கை அங்கங்கள் மற்றும் உள்வைப்புகள | | அறவீட்டுக்கமைய வழங்கப்படும், காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 20மூ வரை உப எல்லைப் பெறுமதிக்கமைய வழங்கப்படும். | | | | | | | |
| | | | இல. ரூ. 2,000,000/- | இல. ரூ. 3,000,000/- | இல. ரூ. 4,000,000/- | இல. ரூ. 5,000,000/- | இல. ரூ. 6,000,000/- | இல. ரூ. 8,000,000/- | இல. ரூ. 10,000,000/- | இல. ரூ. 12,000,000/- |
| 10 | வெளிநாட்டு சிகிச்சைகள் | | திட்டமிடப்பட்ட வைத்தியசாலை அனுமதியாயின், காப்புறுதி வழங்குநருக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, கண்டிப்பாக முன் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அவசர வைத்திய தேவைகளின் போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 48 மணி நேரத்தினுள் காப்புறுதி வழங்குநருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் தகைமை வாய்ந்த அறைப் பிரிவை விட உயர்ந்த அறையை பெற்றுக் கொண்டால், தகைமை வாய்ந்த காப்புறுதி உரிமை கோரல் தொகை மீது இணைந்த கட்டணமான 25% தொகை ஏற்புடையதாக அமையும். | | | | | | | |
| 11 | கட்டணம் செலுத்தாத சிகிச்சைப் பிரிவில் வைத்தியசாலை அனு மதி (அரச வைத்தியசாலை அல்லது அதற்கு நிகரானவை) (புவியியல் அமை விடம் - இலஙக் கயில் மாததிரம) | | நாளொன்றுக்கான காப்பீடு செய்யப்பட்ட தொகையில் 0.5மூ, நாளொன்றுக்கு ஆகக்கூடியது ரூ. 20,000 வரை. | | | | | | | |
| | | | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- | இல. ரூ. 20,000/- |
| | | | வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வைத்தியரினால் பரிந்துரைக்கப்படும் பரிசோதனைகள் மற்றும் மருந்துப் பொருட்களுடன் தொடர்புடைய செலவுகளுக்கான உரிமை வழங்கல்கள் காப்பீடு செய்யப்பட்ட தொகையில் வருடமொன்றுக்கு ஆகக்கூடியது 70% வரை வழங்கப்படும். | | | | | | | |

Specimen

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | நலன் காப்பீடு (புவியியல் அமைவிடம் - இலஙன் கயில் மாத்திரம்) | தொடர்ச்சியான இரு ந்'டஈடு கோரிக்கைகள் மேற்கொள்ளப்படாத காப்புறுதி ஆண்டுகளின் பின்னர், இலங்கை தனியார் சுகாதார பராமரிப்பு சேவைகள் ஒழுங்குபடுத்தல் சம்மேளனத்தில் (PHSRC) பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் சுகாதார பரிசோதனைகளுக்கு காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 2% வரை ஆகக்கூடியது ரூ. 50,000 செலுத்தப்படும். | | | | | | | |
| | | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- |
| 13 | வைத்தியசாலை அனுமதி கட்டணங்கள் | அறவீட்டின் பிரகாரம் அறவிடப்படும், ஒவ்வொரு அனுமதியின் போதும் காப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஆகக்கூடியது 5% ஐ உப எல்லைப் பெறுமதியாக காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 70% இனுள் வழங்கப்படும். | | | | | | | |
| 14 | வழமையான பல் சிகிச்சை அனுகூலம் (அமைவிடம் இலங்கையில் மாத்திரம்) | இந்தக் கொடுப்பனவு வருடாந்த காப்பீடு செய்யப்பட்ட தொகையின் உப எல்லைப் பெறுமதியாக அமைந்திருக்கும். | | | | | | | |
| | | இல. ரூ. 25,000/- | இல. ரூ. 25,000/- | இல. ரூ. 25,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- |
| தெரிவுக்குரிய அனுகூலங்கள் | | | | | | | | | |
| 15 | பிரசவ அனுகூலம் (புவியியல் அமைவிடம் - இலங்கையில் மாத்திரம்) | NVD 150,000/- LSCS 300,000/- | NVD 150,000/- LSCS 300,000/- | NVD 150,000/- LSCS 300,000/- | NVD 150,000/- LSCS 300,000/- | NVD 150,000/- LSCS 300,000/- | NVD 150,000/- LSCS 300,000/- | NVD 150,000/- LSCS 300,000/- | NVD 150,000/- LSCS 300,000/- |
| 16 | வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலம் (புவியியல் அமைவிடம் - இலங்கையில் மாத்திரம்) | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- | இல. ரூ. 50,000/- |

### 3.15.2 (II) அனுகூலப் பெருக்கம்

குறித்த காப்புறுதி ஆண்டு ஒன்றில் யூனியன் ஹெல்த் 360 அனுகூலத்தின் கீழ் உரிமை கோரல்கள் ஏதும் கோரப்பட்டிருக்காத நிலையில், காப்புறுதிக்கான தவணைக்கட்டணம் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டு காப்புறுதி செயலில் இருந்தால், நிறுவனம் அனுகூலப் பெருக்கத்தை சுயமாக மேற்கொள்ளும். அதாவது அடுத்த காப்புறுதி ஆண்டில் யூனியன் ஹெல்த் 360 அனுகூல காப்பீட்டு தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை (25%) மேலதிகமாக வழங்கும்.

மேலதிகமாக வழங்கப்படும் இந்த அனுகூலப் பெருக்கத் தொகையின் அதியுச்சப் பெறுமதி என்பது ஆகக்கூடியது நூறு மில்லியன் ரூபாய் (ரூ.100,000,000/-) என்பதற்கமைய, யூனியன் ஹெல்த் 360 அனுகூல காப்பீட்டுத் தொகையின் நூறு (100%) சதவீதமாகும்.

காப்புறுதி ஆண்டொன்றில் அனுகூலப் பெருக்கம் வழங்கப்பட்டதன் பின்னர், Family Floater திட்டத்துக்கமைய எந்தவொரு தனிநபர் அல்லது குடும்ப அங்கத்தவரால் உரிமை கோரல் ஒன்று கோரப்பட்டிருந்தால், அடுத்த ஆண்டுக்கான யூனியன் ஹெல்த் 360 அனுகூல காப்பீட்டுத் தொகை சுயமாக இருபத்தைந்து சதவீதத்தால் குறையும். ஆனாலும், இந்த குறைவுத் தொகையின் காரணமாக முதலாம் அட்டவணையின் இரண்டவாது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள யூனியன் ஹெல்த் 360 அனுகூலத்தின் ஆரம்ப காப்பீட்டு தொகையை பார்க்கிலும் குறைவை ஏற்படுத்தாது.

அனுகூலக் காலப்பகுதியில் காப்பீடு செய்யப்பட்ட தொகை குறைவடைந்திருந்தால், திரண்ட பெருக்க அனுகூலமும் குறைவடைந்த யூனியன் ஹெல்த் 360 காப்பீட்டுத் தொகைக்கமைய விகிதாசார அடிப்படையில் குறைவடையும். அனுகூலப் பெருக்க பிரயோகம் காரணமாக, அட்டவணை 2.2 (I) இல வழங்கப்பட்டுள்ள அனுகூலத் தொகைகளான வழமையான பல் சிகிச்சை அனுகூலம், பிரசவ அனுகூலம், பாரதூ ரமான நோய்களுக்கான மீளளிப்பு அனுகூலம் மற்றும் வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலம் போன்ற எதுவும் அதிகரிக்கப்படாது.

### 3.15.2 (III) வைத்தியசாலை அனுமதிக்கு முன் மற்றும் பின் அனுகூலம்

வியாதிஃசுகயீனம்ஃகாயம் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் வைத்தியசாலை அனுமதியின் வேளை அச்சம்பவத்திற்கு மருத்துவ செலவீனங்கள் முப்பது (30) நாட்களின் முன்னரும் சம்பவம் நடைபெற்று முப்பது (30) நாட்களுக்கு பின்னரும் ஏற்படும் நோய் சார்பில் ஏற்படும் செலவுகள் யூனியன் ஹெல்த் 360 அனுகூல



Specimen

உரிமை கோரிக்கையின் ஒரு பகுதியாக கொள்ளப்படும். வைத்தியசாலை அனுமதி உரிமைகோரல் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தால் மாத்திரமே, வைத்தியசாலை அனுமதிக்கு முன் மற்றும் பின் அனுகூலம் ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு தடவையும் வைத்தியசாலை அனுமதிக்கு முன்னர் மற்றும் பின்னர் வருடமொன்றில் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூல உச்சத் தொகை யூனியன் ஹெல்த் 360 அனுகூல காப்பீட்டுத் தொகையின் ஐந்து (5%) சதவீதமகும். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமைக்கு முன்னர் மற்றும் பின்னர் ஏற்பட்ட செலவுகளுக்கு ஆண்டுக்கான அடிப்படை காப்பீடு மற்றும் கொடுப்பனவு எனும் அடிப்படையில் இந்த தொகை செலுத்தப்படும்.

### 3.15.2 (IV) தினசரி வைத்தியசாலை பண அனுகூலம் மற்றும் நோய் இனங்காணல் பரிசோதனைகளுக்கான செலவீனங்கள்/ பார்மசி

அரசாங்க வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தாத சிகிச்சை பிரிவில் இருபத்து நான்கு மணி (24) நேரத்துக்கு மேல் தொடர்ச்சியாக அனுமதிக்கப்பட்டால், உரிமைகோரலை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில், பின்வரும் அனுகூலங்கள் பொருத்தமானதாக அமையும்,

- தினசரி வைத்தியசாலை பண அனுகூலம், யூனியன் ஹெல்த் 360 அனுகூல காப்பீட்டுத் தொகையின் தசம் ஐந்து சதவீதம் (0.5மூ) ஆகக்கூடியது இருபதாயிரம் (ரூ. 20,000) ரூபாய் வரையில் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலப்பகுதியால் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படும். ஒரு வருடத்திற்கு இதன் அதியுச்ச தொகை யூனியன் ஹெல்த் 360 அனுகூல காப்பீட்டு தொகையின் 30 சதவீதமாகும், அல்லதுஃமற்றும்
- வைத்தியசாலை அனுமதியின் போது நோய் இனங்காணல் பரிசோதனைகள் மற்றும் பார்மசி மருந்துச் செலவுகள் போன்றவற்றுக்கு வருடமொன்றிற்கு காப்பீடு செய்யப்பட்ட தொகையில் ஆகக்கூடியது எழுபது (70மூ) சதவீதம் மீளளிப்பு அடிப்படையில் வழங்கப்படும்.

### 3.15.2 (V) அவயவங்கள் தான செலவீனங்கள்

வைத்தியசாலை அனுமதி அனுகூலத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள இந்த அனுகூலப்பிரிவின் மூலமாக, அங்க தானம் செய்யும் நபர், தனது அங்கமொன்றை தானம் செய்வதற்காக வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்படும் போது ஏற்படும் செலவீனத்தை ஈடு செய்யும் வகையில் இந்த காப்பீடு அமைந்துள்ளது. அங்கத்தை பெறுபவர் (இந்த காப்புறுதி அனுகூலத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டவர்) காப்புறுதி நியதி மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஏற்றுக்கொள்ளத்தக்கவராக இருக்கும் நிலையில் அங்கதானம் செய்பவருக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். அங்கம் ஒன்று கட்டணத்துக்காக தானம் செய்யப்படும் பட்சத்தில் அதற்காக எவ்வித கொடுப்பனவுகளும் இந்த அனுகூலத்தின் கீழ் வழங்கப்படமாட்டாது என்பதுடன், குறித்த அங்கத்தை அகற்றி அதற்கான சிகிச்சையை பெறுவதற்காக வைத்தியசாலையில் தானம் செய்பவர் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், அதனை பெறுபவர் யூனியன் ஹெல்த் 360 அனுகூலத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்தால் கொடுப்பனவு வழங்கப்படும்.

அரச வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தாத சிகிச்சைப் பிரிவில் அங்கத்தை தானம் செய்யும் நபர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தால் தினசரி வைத்தியசாலை அனுகூல கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

அங்க தான பிரிவில் வைத்தியசாலை அனுமதியின் போது மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுப்பனவும் அனுகூலத்தொகையினுள் வழங்கப்படும் கொடுப்பனவாக கவனத்தில் கொள்ளப்படும்.

3.2.6..2 (I) அனுகூல அட்டவணையின் கீழான 01 மற்றும் 02 ஆகிய பிரிவுகளின் கீழ் அனுகூலங்களின் (வைத்தியசாலை அனுமதி மற்றும் சத்திரசிகிச்சை அனுகூலம்) பிரகாரம் அங்க தானம் தொடர்பில் வைத்தியசாலை அனுமதி என்பதற்கான உரிமை கோரல் என்பது, பெற்றுக் கொண்ட அனுகூலத் தொகையின் அடிப்படையில் அட்டவணை 3.15.2.2 (I) அனுகூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய அமைந்திருக்கும்.

### 3.15.2 (VI) செயற்கை உறுப்பு பொருத்துகைகள் மற்றும் அங்கம் உள்வைப்புகள்

காப்புறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைவாக வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு, காப்புறுதி செய்யப்பட்டவர் செயற்கை உறுப்பு பொருத்தப்பட வேண்டும் அல்லது அங்கம் உள்வைக்கப்பட வேண்டும் என்பதை மருத்துவ அதிகாரி உறுதி செய்யும் நிலையில், குறித்த செயற்கை உறுப்பு பொருத்துகை மற்றும்

Specimen

அங்கம் உள்வைப்புக்கான செலவை, முதல் அட்டவணையின் அனுகூல எல்லைத்தொகை நிர்ணயங்களுக்கமைய நிறுவனம் செலுத்தும்.

செயற்கை உறுப்பு பொருத்துகை என்பது காப்புறுதி செய்யப்பட்டவரின் உடலின் எந்தவொரு அவயவத்தையும் அல்லது கண்ணை செயற்கை சாதனம் கொண்டு சீராக்கம் செய்து கொள்வது என பொருள்படும். பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் நிலையில், ஆயுள் காப்புறுதிதாரருக்கு எந்தவொரு செயற்கை உறுப்பையும் கொள்வனவு செய்வதற்கான செலவீனத்தை இந்த அனுகூலம் வழங்கும்,

- சுகயீனம் அல்லது விபத்தொன்றின் காரணமாக தனது அவயவம் அல்லது கண்பார்வையை ஆயுள் காப்புறுதிதாரர் இழந்துள்ள நிலையில் செயற்கை அவயவம் பொருத்த வேண்டிய நிலையை ஆயுள் காப்புறுதிதாரர் எதிர்கொண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருத்தல்.

- பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவரால் செயற்கை அவயவம் பொருத்தப்பட வேண்டும் என அறிக்கையிடப்பட்டிருத்தல்.

- வைத்தியசாலையிலிருந்து ஆயுள் காப்புறுதிதாரர் வெளியேறிய நூற்று எண்பது (180) தினங்களுக்குள் செயற்கை அவயவம் கொள்வனவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், இந்த அனுகூலத்துக்கான எல்லைப்பெறுமதி (அனுகூல அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று) வைத்தியசாலையிலிருந்து வெளியேறல் தினத்தன்று காணப்படும் எல்லைப்பெறுமதிகளுக்கமைய அமைந்திருக்கும்.

அவயவம் ஒன்று அல்லது கண் ஒன்றுக்கான செயற்கை அவயவ பொருத்தல்களுக்கு கொடுப்பனவை நிறுவனம் மேற்கொள்ளும்.
ஆனாலும், பிரிதொரு விபத்து அல்லது சுகயீனம் காரணமாக பாதிக்கப்பட்ட செயற்கை அவயவத்தை மீண்டும் மாற்ற வேண்டியேற்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் குறித்த செயற்கை அவயவத்துக்கான கொடுப்பனவை நிறுவனம் மேற்கொள்ளும். குறித்த செயற்கை அவயவத்தை மாற்றுவது, பழுதுபார்ப்பது அல்லது பராமரிப்பதற்கான செலவை நிறுவனம் ஏற்காது.

சத்திர சிகிச்சை செயற்கை உள்வைப்புகள் என்பது, சத்திர சிகிச்சை ஒன்றை மேற்கொள்ளும் போது தேவைப்படும் உள்வைப்பு அங்கங்களாகும். இந்த உள்வைப்பு அங்கங்கள் வைத்திய அதிகாரியின் அனுமதியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இருப்பதுடன், சத்திர சிகிச்சையின் பின் ஆயுள் காப்புறுதிதாரரின் உடலில் தங்கியிருப்பவையாக காணப்பட வேண்டும்.

### 3.15.2 (VII) வழமையான பல் சிகிச்சை அனுகூலம்

வழமையான பல் சிகிச்சை அனுகூலத்தின் கீழ் உள்வாங்கப்படும் செலவுகளாவன:

1. பல் நிரப்பல் அல்லது மீளமைத்தல்
2. பரிசோதனைகள்
3. ஒ-ரேக்கள்
4. பல் அகற்றல்
5. பல் வேர் சிகிச்சை
6. முரசு நோய்களுக்கான சிகிச்சை

வழமையான பல் சிகிச்சைக்கான உரிமை கோரல்களுக்கான கொடுப்பனவுகள் சிகிச்சை பெற்றுக் கொண்டதன் பின்னர் அதற்கான அசல் கட்டணப் பட்டியல்கள், கொடுப்பனவு சிட்டைகள், பெற்றுக் கொண்ட சேவை தொடர்பான விளக்கக்குறிப்பு (பதிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் / பல் சத்திர சிகிச்சை நிபுணரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்) மற்றும் உரிமை கோரல் படிவம் போன்றவற்றுடன் சமர்பிக்கப்பட்டதன் பின்னர் பிரிவு 2.2 (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூல அட்டவணையிலுள்ள எல்லைப் பெறுமதிகளின் பிரகாரம் மீளளிப்பு (Reimbursement) முறையில் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக கவனத்தில் கொள்ளப்படும்.

ஆயுள் காப்புறுதிதாரர், வாழ்க்கைத் துணை மற்றும் யூனியன் ஹெல்த் 360 காப்புறுதித் திட்டத்தின் முதல் அட்டவணையில் காப்பீடு செய்யப்பட்டவர்களாக குறிப்பிடப்பட்ட பிள்ளைகள் ஆகியோருக்கு இலங்கையில்



Specimen

பெற்றுக் கொள்ளும் சிகிச்சைகளுக்கு மாத்திரமே இந்த காப்பீடு பொருத்தமானதாக அமையும்.

அனுகூல பெருக்கத்திற்கமைய இதன் எல்லைப் பெறுமதி அதிகரிப்படாது என்பதுடன், மீட்சி அனுகூலம் செயற்படுத்தப்பட்டமையால் இந்த அனுகூலம் மீளமைக்கப்படமாட்டாது.

மேற்படி வரைவிலக்கணத்தில், பின்வரும் விடயங்கள் உள்வாங்கப்படவில்லை.

i. அளவிடல் மற்றும் துப்புரவாக்கல்.

ii. வாய் காப்பான்கள், முரசு ீல்டகள் அல்லது எந்தவொரு பல் சாதனங்கள்.

iii. உள்வைப்புகள் மற்றும் அதனைப் பொருத்துவதற்கு ஏற்படும் சகல செலவுகள். (கிரவுண்கள் மற்றும் பிரிட்ஜ்கள் அடங்கலாக)
iv. வெளிற்றுவது (டீடநநஉாபைெ) அல்லது இதர பல் வெண்மையாக்கிகள் மற்றும் பல் நேர்த்தியாக்கிகள்.
v. வனப்பு சிகிச்சைகள், அதாவது பல் சிகிச்சை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டியதில்லை அல்லது வாய்ச் சுகாதாரத்தை பேணுவதற்கு அவசியமில்லை.
vi. நிபுணத்துவ சிகிச்சைகள், எந்தவொரு வகையான பல் சிகிச்சை அல்லது சராசரி தகைமை வாய்ந்த பல் வைத்திய நிபுணரின் சிகிச்சைக்கு அப்பாலானது.
vii. கடைவாய்ப் பல் அகற்றல், பல் வைத்தியரின் சத்திர சிகிச்சையின் போது அகற்றப்பட்டவைக்கு அப்பாலானவை.
viii. பல் ஆபரணம் என்பதுடன் தொடர்புடைய சிகிச்சை, பராமரிப்பு, பழுதுபார்ப்பு அல்லது தொடர்புடைய ஏதேனும் விடயங்கள்.

ix. சேதத்தின் காரணமாக தேவைப்படும் எந்தவொரு சிகிச்சை அல்லது பங்கேற்பு போட்டிகளுக்கான பயிற்சியில் ஈடுபடும் போது அல்லது பங்கேற்கும் போது பரிந்துரைக்கப்பட்ட வாய் பாதுகாப்பு அங்கிகளை அணியாமல் ஏற்பட்ட காயங்கள்.

x. கட்டுப்பற்கள் அல்லது பற்கள் சார் கண்டுபிடிப்புகள் அடங்கலாக கட்டுப்பல் பொருத்தல்கள் மற்றும் சாதனங்களுக்கான செலவுகள்.

### 3.15.2 (VIII) பிரசவ அனுகூலம்

ஆயுள் காப்புறுதிதாரர் பிரவச அனுகூலத்தை பெற்றிருந்தால், பிரசவ அனுகூலத்தின் கீழான உரித்துடைமைகள் வழங்கப்படும் என்பதுடன், அவை முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரசவ அனுகூலத்தின் கீழ், குழந்தை பிரசவத்துக்கான மருத்துவ செலவுகள் (வெக்கியும் மற்றும் ஃபோர்செப்ஸ் சாதனங்கள் பாவனை அடங்கலான சாதாரண பிரசவங்கள் மற்றும் சத்திர சிகிச்சை மூலமான பிரசவங்கள்), வைத்தியசாலையில் இடம்பெறக்கூடிய கருச்சிதைவுகள் போன்றவற்றுக்கு காப்பீடு வழங்கப்படும். பிரசவ அனுகூலம் என்பது, காப்பீட்டு காலப்பகுதியில், காப்புறுதிதாரர் நாற்பத்தைந்து (45) வயதை எய்தும் முன்னர் இடம்பெறும் இரண்டு (2) பிரசவங்களுக்கு (கருச்சிதைவுகள் அடங்கலாக) மட்டுப்படுத்தப்படும்.

ஆயுள் காப்புறுதிதாரர் மற்றும் வாழ்க்கைத் துணைக்கு இந்தக் காப்பீடு வழங்கப்படும் என்பதுடன், இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும் போது நாற்பது (40) வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். முதலாம் அட்டவணையில் பிரசவ அனுகூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று உரிமை கோரல்கள் இடம்பெற்றிராத போதிலும், பிரசவ அனுகூல காலாவதி திகதி முதல் இந்த அனுகூலம் வழங்கப்படுவது இடைநிறுத்தப்படும். காப்புறுதி ஆரம்பிக்கும் போது இந்த பிரசவ அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், யூனியன் ஹெல்த் 360 இல் பிரசவ அனுகூலம் உள்ளடக்கப்பட்டதன் பின்னர், அனுகூலம் செயலிலுள்ள காலப்பகுதியில் அதனை நீக்குவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. 2.2 (ஹ) பிரிவில் அனுகூல அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைப் பெறுமதிகளுக்கமைய, மீளளிப்பு அடிப்படையில் மாத்திரம் பிரசவ அனுகூலத்தின் கீழான உரிமை கோரல்கள் வழங்கப்படும்.

அனுகூல பெருக்கத்தின் உள்ளடக்கத்தின் காரணமாக பிரசவ அனுகூலத்தின் எல்லைப் பெறுமதி அதிகரிக்கப்படமாட்டாது மீட்சி அனுகூலம் செயற்படுத்தப்படுவதன் காரணமாக மீள செயற்படுத்தப்படமாட்டாது. அறவிடக்கூடிய பெறுமதியை (Deductible) ஆயுள் காப்புறுதிதாரர் பெற்றிருந்தால், பிரசவ அனுகூலத்தின் கீழ்

Specimen

உரிமை கோரல்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

மேற்படி வரைவிலக்கணத்துக்கு, பின்வருவன உள்ளடக்கப்படமாட்டாது:

a). கருக்கட்டல், உப கருக்கட்டல் சிகிச்சை அல்லது உதவியளிக்கப்பட்ட கருவுறல் செயற்பாடு அல்லது மலடாக்கல் செயற்பாடு, பிறப்புக் கட்டுப்பாட்டு சிகிச்சை, உடலுறவு செயலிழப்புக்கான சிகிச்சை மற்றும் தன்னார்வ அடிப்படையில் கருவுறலை இல்லாமல் செய்தல்.
b). தனியார் தாதியியல் சிகிச்சைச் செலவுகள்.
c). வழமையான விஜயங்கள், இனங்காணல் பரிசோதனைகள், பிரசவத்துடன் தொடர்புடைய சிகிச்சைகள்ஃ மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருத்துவசாரா செலவுகள்.
d). புதிதாக பிறந்த குழந்தையுடன் தொடர்புடைய செலவுகள்.

### 3.15.2 (IX) வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலம்

ஆயுள் காப்புறுதிதாரர் வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலத்தைப் பெற்றிருந்தால், அவருக்கு இந்த அனுகூலத்தைப் பெறுவதற்கான தகைமை வழங்கப்படும் என்பதுடன், காப்புறுதி ஒப்பத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையினுள், குறும் பார்வை குறைபாட்டுக்கான பார்வை விலகல் தவறுகளை (Correct Refractive Errors) சீராக்கம் செய்வதற்கான சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு கண் சிகிச்சை நிபுணர் / கண் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரால் பரிந்துரைக்கப்பட்டு அதனை மேற்கொள்வதற்கு பதிவு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி நிபுணர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் சாதனங்களுக்கான செலவுகள் வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலத்தின் கீழ் வழங்கப்படும். யூனியன் ஹெல்த் 360 காப்புறுதியைப் பெற்றுக் கொண்ட ஆயுள் காப்புறுதிதாரருக்கும் அனுகூலம் பெறுநராக குறிப்பிடப்பட்டுள்ள அவரின் வாழ்க்கைத் துணைக்கு மாத்திரம் முதலாம் அட்டவணையிலுள்ளதற்கமைய இந்த காப்பீடு வழங்கப்படும். கீழே தரப்பட்டுள்ளதற்மைய ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒரு தடவை இந்தக் காப்பீடு வழங்கப்படும்:

கீழே தரப்பட்டுள்ளதற்மைய ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒரு தடவை இந்தக் காப்பீடு வழங்கப்படும்:

i. கண் பரிசோதனைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் (இரு வருடங்களுக்கு ஆகக்கூடியது ஒரு தடவை)
ii. பரிந்துரைக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி / பிரேம்கள், சீராக்க வில்லைகள் (இரு வருடங்களுக்கு ஆகக்கூடிய ஒரு சோடி) வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலத்தின் கீழான உரிமை கோரல்களை, மீளளிப்புகள் அடிப்படையில் மாத்திரமே மேற்கொள்ள முடியும். 2.2 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூல அட்டவணையில் காணப்படும் எல்லைப் பெறுமதிகளுக்கு உட்பட்டதாகவும், அசல் வைத்திய பரிந்துரைப்பு சிட்டை, அசல் கட்டணப்பட்டியல், அசல் பற்றுச் சீட்டு மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட உரிமை கோரல் படிவம் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

அனுகூல பெருக்கத்தின் உள்ளடக்கத்தின் காரணமாக வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலத்தின் எல்லைப் பெ-றுமதி அதிகரிக்கப்படமாட்டாது மீட்சி அனுகூலம் செயற்படுத்தப்படுவதன் காரணமாக மீள செயற்படுத்தப்படமாட்டாது. அறவிடக்கூடிய பெறுமதியை ஆயுள் காப்புறுதிதாரர் பெற்றிருந்தால், வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலத்தின் கீழ் உரிமை கோரல்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

மேற்படி வரைவிலக்கணத்துக்கு, பின்வருவன உள்ளடக்கப்படமாட்டாது:

a). பரிந்துரைக்கப்பட்டால் அல்லது பரிந்துரைக்கப்படாவிட்டாலும், கறுப்புஃஒளித்தெறிப்பு வில்லைகள், சூரியக் கண்ணாடிகள், பார்வை சீராக்கமற்ற கொன்டெக்ட் லென்ஸ்கள் மற்றும் லேசர் கண் சிகிச்சைகள் அல்லது ஏனைய அது போன்ற நுட்பங்கள் போன்றவற்றுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புடைய உரிமை கோரல்கள்.
b). பார்வைச் சீராக்கமற்ற சாதாரண வில்லைகள்.
c). அழகியலுக்காக பயன்படுத்தப்படும் வில்லைகள்.
d). ஐவெசய ழுஉரடயச வில்லைகள்
e). கணினி பார்வைக் கண்ணாடிகள் மற்றும் கண் காப்பான்கள்

Specimen

f). வாசிக்கும் மூக்குக் கண்ணாடிகள்

g). கொன்டெக்ட் லென்ஸ் பராமரிப்பு திரவங்கள் அடங்கலாக மூக்குக் கண்ணாடி பராமரிப்பு பொருட்கள்

h). மூக்குக் கண்ணாடிகளை திருத்துவதற்கான செலவுகள

### 3.15.2 (X) நலன்பேணல் காப்பீடு

இரு வருடங்கள் தொடர்ச்சியாக உரிமை கோரப்படாத காப்புறுதி ஆண்டுகளைத் தொடர்ந்து, யூனியன் ஹெல்த் 360 அனுகூலத்தின் அடிப்படை காப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் இரண்டு சதவீதம் (2%) வரை, ஆகக் கூடியது ஐம்பதாயிரம் ரூபாய் (ரூ. 50,000/-) வரை, நலன் பேணல் காப்பீட்டுத் தொகையாக, இலங்கை தனியார் சுகாதார பராமரிப்பு சேவை ஒழுங்குபடுத்தல் சம்மேளனத்தில் (PHSRC) பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்படும். நலன்பேணல் காப்பீட்டு அனுகூலத்தின் கீழான உரிமை கோரல்களை, மீளளிப்புகள் அடிப்படையில் மாத்திரமே மேற்கொள்ள முடியும். 2.2 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூல அட்டவணையில் காணப்படும் எல்லைப் பெறுமதிகளுக்கு உட்பட்டதாக வழங்கப்படும். இந்த அனுகூலத்தின் கீழ் எஞ்சியிருக்கும் அடிப்படை காப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் / அல்லது உரிமை கோரப்படாத அனுகூலத் தொகை அடுத்த ஆண்டுக்காக முன்கொண்டு செல்ல முடியாது.

அனுகூல பெருக்கத்தின் உள்ளடக்கத்தின் காரணமாக நலன் பேணல் காப்பீட்டு அனுகூலத்தின் எல்லைப் பெறுமதி அதிகரிக்கப்படமாட்டாது மீட்சி அனுகூலம் செயற்படுத்தப்படுவதன் காரணமாக மீள செயற்படுத்தப்படமாட்டாது. அறவிடக்கூடிய பெறுமதியை ஆயுள் காப்புறுதிதாரர் பெற்றிருந்தால், நலன் பேணல் காப்பீட்டு அனுகூலத்தின் கீழ் உரிமை கோரல்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது. யூனியன் ஹெல்த் 360 காப்புறுதியைப் பெற்றுக் கொண்ட ஆயுள் காப்புறுதிதாரருக்கும் அனுகூலம் பெறுநராக குறிப்பிடப்பட்டுள்ள அவரின் வாழ்க்கைத் துணைக்கு மாத்திரம் முதலாம் அட்டவணையிலுள்ளதற்கமைய இந்த காப்பீடு வழங்கப்படும்.

பிரசவ அனுகூலம், மற்றும் வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலம் போன்றவற்றின் கீழ் உரிமை கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், நலன் பேணல் காப்பீட்டில் எவ்விதமான தாக்கங்களையும் செலுத்தாது.

ஆயுர்வேத சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதற்கான ஆதாரங்களுடன், சிகிச்சை பெற்றுக் கொண்டதன் பின்னர் அதற்கான அசல் கட்டணப் பட்டியல்கள், கொடுப்பனவு சிட்டைகள், பெற்றுக் கொண்ட சேவை தொடர்பான விளக்கக்குறிப்பு மற்றும் உரிமை கோரல் படிவம் போன்றவற்றுடன், அனுமதிக்கப்பட்ட/ கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சமர்பிக்கப்பட்டதன் பின்னர் பிரிவு 2.2

(I) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூல அட்டவணையிலுள்ள எல்லைப் பெறுமதிகளின் பிரகாரம் கவனத்தில் கொள்ளப்படும். மீளளிப்பு அடிப்படையில் உரிமை வழங்கல் செலுத்தப்படும் என்பதுடன், இந்த வெளிநோயாளர் மற்றும் ஆயுர்வேத பிரிவு சிகிச்சை அனுகூலக் காப்பீட்டின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட செலவுகளுக்கு மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

அனுகூல பெருக்கத்தின் உள்ளடக்கத்தின் காரணமாக வெளிநோயாளர் மற்றும் ஆயுர்வேத பிரிவு சிகிச்சை அனுகூலக் காப்பீட்டு எல்லைப் பெறுமதி அதிகரிக்கப்படமாட்டாது. மீட்சி அனுகூலம் செயற்படுத்தப்படுவதன் காரணமாக மீள செயற்படுத்தப்படமாட்டாது. அறவிடக்கூடிய பெறுமதியை (Deductible amount) ஆயுள் காப்புறுதிதாரர் பெற்றிருந்தால், வெளிநோயாளர் பிரிவு சிகிச்சை அனுகூலத்தின் கீழ் உரிமை கோரல்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

யூனியன் ஹெல்த் 360 காப்புறுதியைப் பெற்றுக் கொண்ட ஆயுள் காப்புறுதிதாரருக்கும் அனுகூலம் பெறுநராக குறிப்பிடப்பட்டுள்ள அவரின் வாழ்க்கைத் துணைக்கு மாத்திரம் முதலாம் அட்டவணையிலுள்ளதற்கமைய இந்தகாப்பீடு வழங்கப்படும்.

மேற்படி வரைவிலக்கணத்துக்கு, பின்வருவன உள்ளடக்கப்படமாட்டாது:

a) ஸ்பிரே, 'ம்பு, சவர்க்காரம் மற்றும் சோப் போன்றன மருந்துகள்
b) உடற்பருமனுக்கான உணவுகள் மற்றும் சிகிச்சைகள்
c) அன்ரி பயோடிக்கள் மற்றும் தொற்று நீக்கிகள் தவிர்ந்த சரும சிகிச்சைகளுக்கான மருந்துகள்

Specimen

### 3.15.2 (XI) பாரதூரமான நோய்நிலை மீளளிப்பு அனுகூலம்

அனுகூல அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கமைய, பாரதூரமான நோய்நிலை மீளளிப்பு அனுகூலம் என்பது யூனியன் ஹெல்த் 360 காப்புறுதித் திட்டத்தின் அடிப்படை காப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஐம்பது (50%) சதவீதம் வரை வருடாந்தம் பின்வரும் நோய்நிலைகளுக்காக கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படும்.

எல்லைப் பெறுமதிகளுக்கமைய உரிமை வழங்கல்கள் மீளளிப்பு அனுகூலமாக மாத்திரம் வழங்கப்படும். யூனியன் ஹெல்த் 360 அனுகூலத்தின் அடிப்படை காப்பீட்டு பெறுமதியின் இரு (02) மடங்குக்கு ஆயுள்கால எல்லை என்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாரதூரமான நோய் நிலை மீளளிப்பு அனுகூலம் என்பது யூனியன் ஹெல்த் 360 அனுகூலத்தின் வருடாந்த காப்பீட்டு எல்லைப் பெறுமதி முழுமையாக பூர்த்தியடைந்ததை தொடர்ந்தும், பெருக்க அனுகூலம் மற்றும் பொருத்தமாயின் மீட்சி அனுகூலம் ஆகியவற்றின் கீழ் திரட்டப்பட்ட காப்பீட்டுப் பெறுமதிக்கமையவும் செயற்படுத்தப்படும். ஆயுள்கால எல்லைப் பெறுமதி பயன்படுத்தப்பட்டதன் பின்னர் இந்த அனுகூலம் இடைநிறுத்தப்படும்.

நிபந்தனை 2.2 (i) எனும் அனுகூல அட்டவணையின் கீழ் வழங்கப்பட்டுள்ள திட்டம் ஒன்று (1) முதல் எட்டு (8) வரை இந்த அனுகூலம் பொருத்தமானதாக அமைந்திருக்கும். பெருக்க அனுகூலம் செயற்படுத்தப்படுவதன் காரணமாக பாரதூரமான நோய்நிலை மீளளிப்பு அனுகூல எல்லைப் பெறுமதி அதிகரிக்கப்படமாட்டாது என்பதுடன் மீட்சி அனுகூலம் செயற்படுத்தப்படுவதன் காரணமாக மீள செயற்படுத்தப்படமாட்டாது.

யூனியன் ஹெல்த் 360 காப்புறுதியைப் பெற்றுக் கொண்ட ஆயுள் காப்புறுதிதாரருக்கும் அனுகூலம் பெறுநராக குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கும் முதலாம் அட்டவணையிலுள்ளதற்கமைய இந்த காப்பீடு வழங்கப்படும்.

1). புற்றுநோய்

எந்தவொரு கொடிய கட்டி முறையாக இழையவியலுக்கமைய (Histological) இனங்காணப்பட்டுள்ளதுடன், கட்டுப்பாடற்ற வகையில் வளர்ச்சியடைந்து திசுக்களை ஊடுருவி வருவதை பரிசோதனைகளினூடாக உறுதி செய்திருக்கின்றமையை குறிக்கும். இந்த இனங்காணல் பரிசோதனையை விசேட வைத்திய நிபுணர் ஒருவர் உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக தவிர்க்கப்படாவிட்டால், இலுக்கேமியா, கொடிய லிம்போமா மற்றும் மயெலொடிஸ்பிளாஸ்டிக் குறைபாடு போன்றன இந்தப் பிரிவின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன.

மேற்படி வரைவிலக்கணத்துக்கு, பின்வருவன உள்ளடக்கப்படமாட்டாது:

- இழையவியலுக்கமைய முன்-கொடிய (Pre-Malignant), துளையிட முடியாதது (NonInvasive) அல்லது உள்ளூறப்புற்று (Carcinoma in situ) (மார்பு மற்றும் உட்கழுத்து இயல்புப் பிறழ்ச்சி CIN 1, CIN 2 மற்றும் CIN 3 அடங்கலான Ductal மற்றும் lobular உள்ளூறப்புற்று)

- Gleason புள்ளி 6 க்கு மேற்பட்ட அல்லது சிகிச்சைசார் TNM வகையில் T2N0M0 எனும் நிலையை எய்தியிருப்பதாக இழையவிலுக்கமைய வகைப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு சுக்கில புற்றுநோய்.

- Binet Stage B என்பதை எய்தியிருந்தாலன்றி கொடிய லிம்போசிட்டிக் இலுக்கேமியா.

- Mestastases என்பதற்கான ஆதாரம் இல்லாவிடின், சருமத்தின் Basel Cell Carcinoma மற்றும் Squamous cell carcinoma மற்றும் Malignant melanoma stage IA (T1aN0M0).

- 1 சென்ரிமீற்றருக்கு குறைந்த விட்டத்திலான Papillary தைரொயிட் புற்றுநோய் மற்றும் இழையவியலுக்கமைய T1N0M0.

- இழையவியலுக்கமைய Ta என விளக்கப்பட்ட சவ்வுப்பையின் Papillary micro-carcinoma.

Specimen

- Polycythemia rubra vera மற்றும் அத்தியாவசிய thombocythemia.
- Monoclonal gammopathy of undermined significance.
- நோய் நிலைக்கு Helicobacter - eradication ஊடாக சிகிச்சையளிக்கப்பட முடியுமாயின் Gastric MALT Lymphoma.
- AJCC புறறுநோய் நிலையிடல் கையேடு, ஏழாம் பதிப்பு (2010) இன் பிரகாரம் Gastrointestinal stromal tumor (GIST) நிலை I மற்றும் II.
- கீமொதெரபி அலல்து கதிரியததினூடாக சிகிசன் சயளிகக வேணடிய நிலையிருநத் ாலனறி, Cutaneous Lymphoma.
- Mastectomy, கீமோதெரபி அல்லது கதிரியக்கத்தினூடாக சிகிச்சையளிக்க வேண்டிய நிலையிருநத் ாலனறி, மாரப்கததின் Microinvasive carcinoma (இழையவிலுகக் மைய வு1அஉை எவகைப்படுத்தப்பட்டிருக்கும்).
- Hysterectomy, கீமோதெரபி அல்லது கதிரியத்தினூடாக சிகிச்சையளிக்க வேண்டிய நிலையிருந்தாலன்றி, கருப்பை கழுத்துப் பகுதியில் Microinvasive carcinoma (இழையவிலுக்கமைய IA1 என வகைப்படுத்தப்பட்டிருக்கும்).

2). பல் அங்க உறுப்பு மாற்றுச் சிகிச்சை (எலும்பு மச்சை அடங்கலாக)

பின்வருவனவற்றில் ஏதேனும் அல்லது பல யடடழபசயகவ அல்லது ளைழபசயகவ மாற்றீட்டு சிகிச்சை பெறுநராக சிகிச்சை பெறுவது:

- இருதயம்
- சிறுநீரகம்
- ஈரல் (Split liver மற்றும் உயிர்வாழும் தானம் செய்பவரின் ஈரல் மாற்றீட்டு சிகிச்சை அடங்கலாக)
- நுரையீரல் (உயிர்வாழும் தானம் செய்பவரின் lobe மாற்றீட்டு சிகிச்சை அல்லது ஒற்றை நுரையீரல் மாற்றீட்டு சிகிச்சை அடங்கலாக)
- எலும்புமச்சை (allogenic hematopoietic stem cell மாற்றீட்டு சிகிச்சையைத் தொடர்ந்து மொத்த எலும்புமச்சை நீக்கம்)
- சிறுகுடல்
- கணையம்

பகுதியளவு அல்லது முழு அளவு, கை மற்றும் கால் மாற்றீட்டு சிகிச்சை (composite tissue allograft transplantation என்பதும் இந்த வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாற்றீட்டுக்கான காரணியை வேறெந்த வழிமுறையினு டாகவும் சிகிச்சையளித்து குணமாக்க முடியாது என்பதை விசேட வைத்திய நிபுணர் உறுதி செய்ய வேண்டும்.

மேற்படி வரைவிலக்கணத்துக்கு, பின்வருவன உள்ளடக்கப்படமாட்டாது:

- ஏனைய உடற்பாகங்கள், அங்கங்கள் அல்லது திசுக்கள் மாற்றீட்டு சிகிச்சை (விழிவெண்படலம் மற்றும் சருமம் அடங்கலாக).
- ளஏனைய கலன்கள் மாற்றீட்டு சிகிச்சை (Hematopoietic தவிர்ந்த islet கலன்கள் மற்றும் stem கலன்கள் அடங்கலாக).

3). மூளை சத்திரசிகிச்சை

வழமையான அனஸ்தீசியா மயக்கமருந்து வழங்கப்பட்டு மூளையை அணுகுவதற்காக ஊசயளைழவழஅல உடன் மண்டை ஓடு பிளக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சை.

Specimen

பின்வருவன தவிர்க்கப்பட்டுள்ளன:

a). Burr hole சிகிச்சைகள் மற்றும் trans-phenoidal சிகிச்சைகள் மற்றும் irradiation by gamma knife போன்ற குறைந்த துளையிடலுடனான சிகிச்சைகள் அல்லது endovascular embolizations, thrombolysis மற்றும் stereotactic biopsy மற்றும்,

b). விபத்தின் காரணமாக மூளை சத்திரசிகிச்சை

இந்த சத்திரசிகிச்சை கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என விசேட வைத்திய நிபுணரால் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதுடன், சீராக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அனுகூலத் தொகை செலுத்தப்படும்.

4). கொடிய சிறுநீரக செயலிழப்பு

இரு சிறுநீரகங்களினதும் கொடிய மற்றும் மீட்க முடியாத செயலிழப்பு, இதன் காரணமாக வழமையான ஹீமோடயலிசிஸ் அல்லது பெரிடோனியல் டயலிசிஸ் மேற்கொள்ளப்படுவது அல்லது சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்படுவது. டயலிசிஸ் மருத்துவடி ரீதியில் அத்தியாவசியமானதாக அமைந்திருப்பதுடன், சிறுநீரக மருத்துவ ஆலோசகர் ஒருவரால் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

மேற்படி வரைவிலக்கணத்துக்கு, பின்வருவது உள்ளடக்கப்படமாட்டாது:

கொடிய மீளச் சீராக்கிக் கொள்ளக்கூடிய சிறுநீரக செயலிழப்புடன் தற்காலிக சிறுநீரக டயலிசிஸ்

5). Coronary Artery Bypass Graft (CABG) சத்திரசிகிச்சை

அடைப்புகளை சீர் செய்வதற்கான இருதய சத்திரசிகிச்சையை மேற்கொள்வது அல்லது கரோனரித் தமனிகளை (Coronary Arterys) ஒடுக்குவதற்கு, Coronary Artery bypass grafting என்பது Sternotomy (மார்பு எலும்பை வெட்டுவதனூடாக) மூலமாக மேற்கொள்ளப்படுவது அல்லது குறைந்த துளையிடல்களுடனான Coronary Artery bypass சிகிச்சைகள். இனங்காணலை Coronary Angiography ஊடாக உதவியளிக்கப்பட வேண்டும் என்பதுடன், இருதய சிகிச்சை நிபுணர் ஒருவரால் சத்திரசிகிச்சை பூர்த்தி செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட வேண்டும்.

பின்வருவது உள்ளடக்கப்படமாட்டாது:

Angiography மற்றும் / அல்லது ஏனைய எந்தவொரு intra-arterial சிகிச்சைகள்.

6). பெருநாடி (யுழசவய) சத்திரசிகிச்சை

பெருநாடியில் ஒடுங்கிய, தடை, aneurysm அல்லது dissection ஐ சீராக்குவதற்காக மேற்கொள்ளும் சத்திரசிகிச்சை.
endovascular சீரமைப்பு போன்ற குறைந்த துளையிடலுடனான சிகிச்சைகளும் இந்த வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறித்த சத்திரசிகிச்சை மருத்துவ ரீதியில் அவசியமானது என்பதை சத்திரசிகிச்சை ஆலோசகர் உறுதி செய்ய வேண்டும் என்பதுடன் நிழற்பட கண்டறிதல்களினூடாக உறுதி செய்யப்பட வேண்டும்.
மேற்படி வரைவிலக்கணத்தில், பின்வருவன உள்ளடக்கப்படவில்லை:

- Thoracic அலல்து abdominal aorta கிளைகள் எதிலும˙ மேறெ காளள் பப் டும˙ சதத் ிரசிகிசன் சகள˙ (aortofemoral அல்லது aortoiliac bypass grafts அடங்கலாக)

- hereditary connective tissue குறைபாடுகளை சீராக்குவதற்கு யழசவய தொடர்புடைய சத்திரசிகிச்சைகள் (உதாரணம்: Marfan குறைபாடு, Ehlers-Danlos குறைபாடு)

- பெருநாடியில் பாரதூரமான காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சை

Specimen

7). இருதய வால்வு சத்திரசிகிச்சை

சேதமடைந்துள்ள ஒன்று அல்லது அதிகமான இருதய வால்வுகளை சீராக்குவதற்கு அல்லது மாற்றீடு செய்வதற்கு
மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சை. இந்த வரைவிலக்கணத்தின் கீழ் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

- முழுமையான Sternotomy (மாரப் எலுமப் ினை கிடைப பகுதி)இ பகுதியளவு Sternotomy அலல்து thoracotomy ஊடாக மேற்கொள்ளப்படும் இருதய வால்வு மாற்றீடு அல்லது பழுதுபார்ப்பு.
- சுழளள செயன்முறை
- Catheter - அடிப்படையிலான valvuloplasty
- Transcatheter aortic valve உள்வைப்பு (TAVI)

இந்த சத்திரசிகிச்சை கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என இருதய சிகிச்சை வைத்திய ஆலோசகரால் அல்லது இருதய சத்திரசிகிச்சை நிபுணரால் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதுடன், echocardiogram அல்லது cardiac catheterization கண்டறிதல்கள் ஊடாக மேலுறுதி செய்யப்பட வேண்டும்.

மேற்படி வரைவிலக்கணத்தில், பின்வருவன உள்ளடக்கப்படவில்லை:

- Transcatheter mitral valve clipping

### 3.15.2 (XII) அறவிடக்கூடிய தெரிவு

காப்புறுதி ஒப்பந்தத்தில் ஆயுள் காப்புறுதிதாரர் காப்புறுதி ஆண்டில் உரிமை கோரல்கள் மீது அறவீட்டை மேற்கொள்வதற்கு அனுமதியளித்து, காப்புறுதி அட்டவணை/அதனைத் தொடர்ந்தான மேலதிக இணைப்புக்கமைய அறவிடக்கூடிய தெரிவுக்குரிய பெறுமதிகளை கொண்டிருந்தால், ஆயுள் காப்புறுதிதாரர் முதலில் அறிவிடக்கூடிய தொகைக்கு நிகரான உரிமை கோரல்களுக்கான செலவுகளை பொறுப்பேற்பார் (செலுத்தப்படக்கூடியது மற்றும் நிறுவனத்துக்கு முறையாக அறிவிக்கப்பட்டிருப்பது) அதற்கு நிகரான அறவிடக்கூடிய பெறுமதியை பயன்படுத்திய பின்னரே உரிமை கோரல்களுக்கான தகைமையைப் பெறுவார். காப்பீடு செய்யப்பட்ட தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டால், அறவிடக்கூடிய பெறுமதியும் மாற்றம் பெறும் என்பதுடன், குறைந்த அனுகூலத்திட்டத்தின் கீழ் அறவிடக்கூடிய தெரிவுகளை மேற்கொள்ளும் தெரிவை ஆயுள் காப்புறுதிதாரர் கொண்டிருப்பார்.

அறவிடக்கூடிய தெரிவு நீக்கம் என்பது காப்புறுதி ஆரம்பிக்கப்படும் போது அல்லது அனுகூலத்தை உள்வாங்கும் போது, பிரதான காப்புறுதிதாரருக்கு நாற்பத்தைந்து (45) வயது அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் மாத்திரம் செயற்படுத்தப்படும். தெரிவு செய்யப்பட்ட அறவீட்டு தெரிவு என்பது கட்டுப்பணம் செலுத்தப்பட்டு பத்து (10) வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மாத்திரமும், பிரேரணை நிலையில் உடன்பட்டிருந்ததற்கமையவும், குறித்த வயதை எய்தியதற்கமையவும் நீக்கப்படலாம். மேலதிக அனுகூலத்தை சேர்க்கும் போது அல்லது காப்புறுதி ஒப்பந்தம் ஆரம்பிக்கப்படும் போது உடன்படாவிடின், அறவிடக்கூடிய தெரிவு நீக்கம் என்பது காப்புறுதி மேலதிக அனுகூலம் செயலிலுள்ள காலப்பகுதியில் நீக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது. பொருத்தமான கட்டுப்பணத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அறவிடக்கூடிய தெரிவை நீக்குமாறு தெரிவிக்கும் எழுத்து மூல கோரிக்கை வழங்கப்பட்டிருந்தால் அடுத்து வரும் காப்புறுதி வருடத்தின் ஆரம்பத்திலிருந்து அது செயலில் இருக்காது. இந்த அனுகூலத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், யூனியன் ஹெல்த் 360 இல் காப்பீடு செய்யப்பட்ட தொகை குறைப்பு பற்றிய குறிப்பு காணப்பட்டாலன்றி, காப்புறுதி அமுலிலுள்ள காலப்பகுதியில் அறவிடக்கூடிய பெறுமதி என்பது குறைக்கப்பட முடியாது.

பிரசவ அனுகூலம், மற்றும் வழமையான மூக்குக் கண்ணாடி அனுகூலம் ஆகியன தவிர்ந்த ஏனைய சகல காப்பீடுகளுக்கும், ந்த அறவிடக்கூடிய தெரிவு ஏற்புடையதாக அமையும்.

### 3.15.3. காத்திருக்கும் காலம்

யூனியன் ஹெல்த் 360 காப்புறுதி அனுகூலங்கள் பின்வரும் வேளைகளில் இருந்து தொண்ணூறு (90) தினங்களின் பின்னர்

Specimen

ஆரம்பிக்கும்,

- காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது
- காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது
- காப்பீடு மீளமைப்பு / புதுப்பிக்கப்பட்ட திகதி

இவற்றுள் பிந்திய தினம்.

பின்வரும் தினங்களின் பின்னர் ஏற்படக்கூடிய விபத்துக்களின் காரணமான வைத்தியசாலை அனுமதி மற்றும் சத்திரசிகிச்சைகளுக்கான காத்திருக்கும் காலத்தை விலக்கழிப்பதற்கான கவனத்தை கம்பனி செலுத்தும்,

- காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது
- காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது
- காப்பீடு மீளமைப்பு / புதுப்பிக்கப்பட்ட திகதி

இவற்றுள் பிந்திய தினம்.

பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள சத்திரசிகிச்சைகள் அல்லது குறைபாடுகளுக்கு காத்திருக்கும் காலப்பகுதி பின்வரும் வேளைகளிலிருந்து முன்னூற்று அறுபத்தைந்து நாட்களாகும் (365).

- காப்பீடு ஆரம்பிக்கும் திகதி, அல்லது
- காப்பீடு வழங்கப்பட்ட திகதி, அல்லது
- காப்பீடு மீளமைப்பு

இவற்றுள் பிந்திய தினம்.

### 3.15.4. தவணைக்கட்டணம் மற்றும் நியதி நிபந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கம்பனியின் அதிகாரம்

முதலாவது அட்டவணையின் பகுதி II இல் குறிக்கப்பட்டுள்ள இக்காப்பீட்டுக்காக செலுத்த வேண்டிய கட்டுப்பணம் காப்பீடு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு மட்டுமே உறுதி செய்யப்பட்டுள்ளது. தவணைக்கட்டணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது மற்றும ் / அல்லது நியதி நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது அல்லது காப்புறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூலங்களை எதனையும் விலக்கழித்துக் கொள்வதற்கான அதிகாரத்தை எந்தவொரு காப்புறுதி ஆண்டு நிறைவிலும் கம்பனி கொண்டுள்ளது. காப்புறுதிதாரருக்கு முப்பது (30) நாட்களுக்கான அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னரே அந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் அவ் அறிவித்தலை தொடர்ந்து வரும் காப்புறுதி ஆண்டு நிறைவின் வேளை அது அமுலுக்கு வரும்.

| | சத்திர சிகிச்சையின் பெயர் |
|---|---|
